# கல்கி

KALKI 16.7.1972

45 காசு





# Dig the new Century X-citement

Join the new X-citement ! Like wear up a Century Saree with new flair. Like turn a saree in a kaftan; a kurta; a lungi. Try the Century range from Anuradha, Vinodini, two x two Monica. **You'd never believe they're cotton !**

**THE CENTURY SPG. & MFG. CO. LTD**
**WORLI, BOMBAY-25 DD.**

*Century—for 100% cotton textiles*

*Adroit/CM/27*

# கல்கி
## பொருளடக்கம்



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


பரிதாபி ஆடி. 1 ★ ஜூலை 16, 1972



மேலட்டை - படம் எடுத்தவர்: கே. விஸ்வநாதன்

| சந்தா விவரம் | ஒரு வருடம் | ஆறு மாதம் |
|---|---|---|
| இந்தியா | ரூ. 23-00 | ரூ. 11-50 |
| இதர நாடுகள் | ரூ. 50-00 | ரூ. 25-00 |
| இலங்கை(இலங்கைநாணயம்) | ரூ. 27-00 | ரூ. 13-50 |

# இந்திய ஒலிம்பிக்



நடுவர்களிடையே குழப்பம்!
இந்திரா வெற்றி!
இந்திரா தோல்வி!
அது சரி பாரைகுளோம் கட்டிக் கொண்டு 'ஹை ஜம்ப்' தாண்டி என்ன பயன்!
முடிவில்லா 'ரிலே'- தொழிலாளர் ஸ்பெஷல்
தலைவரின் சாதனைகளைக் காணத் தவறாதீர்கள்
ஒலிம்பிக் கலைவிழா
அடக்குமுறை நாடகம்

கல்கி

மலர் 31
இதழ் 51

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
-- பாரதியார்

# எழுபது வயது இளைஞர்

இந்த வாரம் தமிழ்நாட்டு மக்களின் அன்பிற்கும் அபிமானத்துக்கும் உரிய பெருந் தலைவர் காமராஜ் அவர்களுக்கு எழுபதாவது வயது பிறக்கிறது. தமிழ்ப் பெருமக்களின் சார்பில் இன்னும் பல்லாண்டுகள் திடமாகவும், சிறப்பாகவும் இருந்து நாட்டு மக்களுக்கு நற்பணி புரிய வேண்டும் என்று அவரை மனப் பூர்வமாக வாழ்த்துகிறோம். மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்களுக்கு 93 வயது நடந்து கொண்டிருக்கும் இந்த நிலையில் அதிர்ஷ்டவசமாகத் திரு காமராஜ் அவர்கள் அவரை விடக் கால் நூற்றாண்டு இளைஞராகவும், ஓடியாடித் தொண்டு செய்யக் கூடிய நிலையிலும் இருப்பது தமிழ் மக்களின் நற்பேறு ஆகும். ராஜாஜி அவர்களின் பரிபூரணமான நல்லாசியும் திரு காமராஜ் அவர்களுக்கு உண்டு.

திரு காமராஜ் அவர்கள் அப்பழுக்கற்ற தேசபக்தர். காட்சிக்கு எளியவர். மேடைகளில் சொல்லலங்கார ஆடம்பரங்களோடு உதட்டளவில் பேசாமல் மனப்பூர்வமாகவும், நாட்டுப்புறத்து விவசாயிக்கும் புரிகிற விதத்தில் எளிமையாகவும் பேசக்கூடியவர். இன்றைய தமிழ் நாட்டு மக்களின் ஒரே நம்பிக்கையாய் இருப்பவர்.

அவருடைய ஆட்சிக் காலத்தில் திறமையான நிர்வாகம், இலவசக் கல்வி, மின்சார வசதி, தொழில் வளர்ச்சி ஆகியவற்றால் தமிழ்நாடு இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு நல்ல முன்னுதாரணமாக இருந்தது. முதல் மூன்று ஐந்து ஆண்டுத் திட்டக் காலங்களில் திட்ட அளவினும் அதிகமாகச் செலவு செய்து தமிழகத்தைப் பல துறைகளில் முன்னேறச் செய்தார் அவர். தமிழ்நாட்டு முதல்வர் பதவியை விட்ட பின்னும் அவர் விரும்பி யிருந்தால் மிகப் பெரிய அகில இந்தியப் பதவிகளை அடைந்திருக்க முடியும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. நேருவுக்குப் பின் இந்தியாவின் இரு பெரும் பிரதமர்களைத் தேர்ந்தெடுக்கும் காலங்களில் கட்சியின் தலைமைப் பீடத்திலிருந்த அவர், எப்போதும் போல் மக்கள் தொண்டராகவே இருந்து விட்டார்.

இன்றும் நாளையும் தமிழ்நாட்டில் அவரளவு மக்களிடம் செல்வாக்குள்ள தலைவர்கள் அருமையாகவே உள்ளனர். தமிழகத்து நகரங்களிலும் சிற்றூர்களிலும் அவர் தலைமையின்கீழ் ஆயிரக் கணக்கான தொண்டர்கள் தொண்டாற்றக் காத்திருக்கின்றனர். விரைவிலேயே தமிழ்மக்களின் பேராதரவை நாட்டு நலனுக்காக நாடி அவர் ஒரு விரிவான சுற்றுப்பயணம் செய்யவிருக்கிறார். தமிழ்நாட்டின் மாபெரும் எதிர்கால நம்பிக்கையான இந்த மிகப் பெரிய தேசபக்தரை – எழுபது வயது இளைஞரை – இன்று நாடு வாழ்த்துகிறது. நாமும் வாழ்த்துகிறோம்.

## ராஜாஜியின் வாழ்த்து

''தமிழ்நாட்டு மக்களின் அன்புக்கும் அபிமானத்துக்கும் பெருமளவில் பாத்திரமாகியுள்ள தலைவர் காமராஜின் எழுபதாவது பிறந்த தினத்தில் அவருக்கு எனது அன்பும் ஆசீர்வாதமும்.''

# சிம்லா மகாநாடு: ராஜாஜி எண்ணுவது என்ன?


நீண்ட காலமாகப் பகை நாடுகளாக இருந்து வந்துள்ள இந்தியாவும் பாகிஸ்தானும் நட்பு ரீதியில் உடன்படிக்கை செய்து கொண்டிருப்பதை நாட்டு மக்கள் — உலக மக்கள் — அனைவரோடு நாமும் பெருமகிழ்ச்சியோடு வரவேற்கிறோம்.

பரவலாக இரு நாடுகளிலும் அனைவருமே முழு மனத்துடன் வரவேற்றுள்ள சிம்லா உச்ச கட்ட மகாநாட்டைத் தலைவர் ராஜாஜி வெற்றியாகக் கருதவில்லை என்பது அறிந்ததே. ராஜாஜி இப்படிக் கருதுவதற்குக் காரணம் என்ன? சிம்லா மகாநாட்டில் முக்கிய பிரச்னைகள் எதுவுமே தீர்க்கப்படவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. சமீபத்தில் நடைபெற்ற போரில் சிறைப்பட்ட கைதிகள் பற்றி முடிவு எடுக்கப்படாதது மட்டுமல்ல; ஆதியிலிருந்து நம்மிரு நாட்டு நல்லுறவுக்கும் ஊறு விளைவித்து வரும் காச்மீர விஷயமாகவும் சிம்லாவில் எதுவுமே தீர்மானிக்கப்படவில்லை. நட்புக்குச் சாதகமான வாய்ப்புத் தோன்றியுள்ளபோதே தீவிர உணர்வுடன் அதைப் பற்றிக் கொண்டு முக்கிய விஷயங்களில் உறுதியான முடிவு தேடிக் கொண்டிருக்க வேண்டும் என்பது ராஜாஜியின் கருத்து.

போருக்கான காரணங்களையே அடியோடு நீக்கி விட்டாலொழிய இரு நாடுகளின் பெருத்த ராணுவச் செலவு தொடர்ந்து இருக்கும். கடும் வரி, அந்நியக் கடன் இவற்றில் சிக்கித் தவிக்கத்தான் நேரும். இதனால்தான் ராஜாஜி சிம்லாவில் ஒரு மகத்தான வாய்ப்பைக் கைநழுவ விட்டதாகக் கருதுகிறார். ''இரு பக்கங்களின் ராணுவச் செலவு குறைவதற்கு உடன்படிக்கை வழி செய்திருந்தால் மட்டுமே அதனைச் சக்தி வாய்ந்ததாகக் கருதலாம். இப்போது இரு தேசங்களும் ராணுவச் செலவைக் குறைக்காது என்றே அஞ்சுகிறேன்'' என்கிறார்.

இதனால் அவர் சிம்லா மாநாட்டு முடிவில் மகிழ்ச்சியடையவில்லை என்று பொருள் அல்ல. ''எதிர்காலத்துக்கு நிறைய நம்பிக்கையூட்டும் ஒரு தொடக்கம் ஏற்பட்டிருப்பதாகப் போற்றிப் பேசுபவர்களின் மகிழ்ச்சிக்குக் குறைவானதல்ல நான் கொண்டுள்ள மகிழ்ச்சி'' என்கிறார். ஆனால் மகிழ்ச்சி வேறு, பூரண திருப்தி வேறு. இரு நாடுகளிடையேயும் அவருக்குள்ள அன்பு காரணமாக, இவற்றின் வள வசதிகள் பரஸ்பர வேற்றுமையால் வீணாகின்றனவே என்ற விசாரத்தினால் அவர் ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்துக் காலம் கடத்தாமல் வெகு விரைவிலேயே இரு நாடுகளிடை உறுதியான நட்பும், ஒத்துழைப்பும் ஏற்படத் துடிக்கிறார்!

''அனைத்தையும் நிர்ணயிக்கும் தெய்வ மகா சக்தி ஒன்று இருக்கிறது. அது பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே உள்ள ஐயத்தையும் பயத்தையும் நீக்கி, அவற்றை நெருங்கிய கூட்டுழைப்பிலும் நட்பிலும் கட்டிப் போட்டு சுபிட்சப் பாதையில் இரு நாடுகளையும் நடத்திச் செல்ல முடியும். இவ்விதம் நான் நம்பிப் பிரார்த்திப்பதை நிறைவேற்றும் விதத்தில் இரண்டாவது உச்ச மாநாடு ஒன்று நடக்குமாக! முடிவு காணாத விஷயங்களைப் பற்றி இரு நாட்டு மக்களும் ஓயாமல் சிந்தித்து குழப்பிக் கொள்வதற்குப் பதிலாக விரைவிலேயே அடுத்த உச்சகட்ட மாநாடு கூட்டவேண்டியதே அவசியம்'' என்கிறார் ராஜாஜி.



# தமிழ் நாட்டிலே

— தீரன் —

## ஹர்த்தாலும் அடக்குமுறையும்

எதிர்க் கட்சிகளும் பொதுமக்களும் அரசாங்கத்தின்மேல் தங்களுக்குள்ள மனத் தாங்கல்களை அடிப்படையாக வைத்துக் கிளர்ச்சிகள், ஹர்த்தால்கள் செய்வது ஜனநாயக உரிமைகளுள் ஒன்றாகும். தான் எதிர்க் கட்சியாக இருந்த காலத்தில் விலைவாசிப் போராட்டம் முதல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிவரை இப்படிப் பல போராட்டங்களைத் தி. மு. க. வும் நடத்தி யிருக்கிறது. ஆனால் இப்போது நம் மாநிலத்தில் நடைபெறும் விவசாயிகள் போராட்டத்தை ஒடுக்குவதற்குத் தி. மு. க. ஆட்சி மேற்கொண்டுள்ள அடக்குமுறைகள் கொடுமையா யிருக்கின்றன. ஹர்த்தால் செய்யப் போகிற மாணவர்களையும் பிறரையும் ஒருவர் விடாமல் பிடித்து உள்ளே அடைத்து விட்டு, 'மாணவர்கள் யாரும் மறியல் செய்ய வரவில்லை' என்பது வேடிக்கைதான். ஹர்த்தாலுக்காக அடைத்த கடைகளைக் கட்சி ஆட்களைவிட்டுத் திறக்கச் சொல்லி வற்புறுத்த வேறு செய்திருக்கிறார்கள்.

**தமிழகத்தில் விவசாயிகள் அறப்போரில் உயிர்நீத்த தியாகிகளுக்கு நமது அஞ்சலி**

மக்கள் 'ஹர்த்தால்' என்று வாயைத் திறப்பதற்கு முன்னே தலைவர்களையும், பல்லாயிரக் கணக்கான ஏழை விவசாயிகளையும், கிராம வாசிகளையும் மாணவர்களையும் கைது செய்து சிறையில் அடைப்பதும், கட்சிக் குண்டர்களை ஏவிப் பழி வாங்கத் தூண்டுவதும், ஆள்கிறவர்களின் சிறுமையையே புலப்படுத்துகின்றன. ஐ.பி.சி.செக்ஷன் 120 பி. (கிரிமினல் கான்ஸ்பிரசி)படி ஹர்த்தால் செய்ய இருந்தவர்களைக் கைது செய்திருப்பது பல கட்சித் தலைவர்களுக்கும் கோபத்தை உண்டாக்கியிருக்கிறது. நள்ளிரவில் வீடுகளில் வைத்துக் கைது செய்யப்பட்ட சிலர் மீது ஜோடிக்கப்பட்ட வழக்குகளில், 'ரயில்வே லெவல்கிராசின் அருகே சட்ட விரோதமாகப் பேசிக் கொண்டிருந்தபோது அவர்கள் கைது செய்யப்பட்டதாகவும், வேறு பயங்கர சதிகளில் ஈடுபட முயன்றதாகவும்' கூறிக் குற்றச் சாட்டுக்கள் தயாரித்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இது உண்மையாயிருக்குமாயின் ஜனநாயகத்தின் மேல் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் கவலைப்படவேண்டிய விஷயம் இது. பார்தோலி சத்தியாக்கிரகத்துக்கு இணையான இந்த விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபடுகிறவர்களை ஐ. பி. சி. 120 பி, 117, 147, 148, 431, ரயில்வே ஆக்ட் 126 ஆகிய பிரிவுகளின்படி பழி வாங்க முயல்வது உண்மையானாலும் அது பெரிதும் வருந்த வேண்டிய விஷயமாகும். பதினையாயிரத்துக்கும் அதிகமான விவசாயிகளைக் கைது செய்து ஆடு மாடுகளை அடைப்பது போல் அடைத்திருப்பதும் நல்ல உணவு வசதி, வைத்திய வசதியின்றித் தவிக்க விட்டதும் இந்த அரசுக்கோ, ஆட்சிக்கோ ஒரு சிறிதும் நல்லதில்லை. கோவையில் ஹர்த்தாலில் ஈடுபட முயன்ற மாணவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியாதபடி அவர்களுக்கு ஒரு டாக்ஸி, ஓர் ஆட்டோ கூடக் கிடைக்க விடாமல் செய்ததும், மதுரையில் திரு மன்றாடியாரை 'சர்க்யூட் ஹவுஸில் இடமில்லை' என்று வெளியேற்றியதும் இந்தப் போராட்டத்தை ஒடுக்க முயல்கிறவர்கள் எந்த அளவுக்குக் கீழ்த்தரமாக இறங்குவார்கள் என்பதற்குச் சரியான உதாரணங்கள். கோவையில் ஊர்வலமாகச் சென்ற தி. மு. க.வினர் விவசாயிகள் சங்கத்தைத் தாக்கிக் கொடியைக் கிழித்திருக்கிறார்கள். பல போராட்டங்கள், கடையடைப்புக்கள், கிளர்ச்சிகள் எல்லாவற்றையும் நடத்தி அதன்மூலம் பொதுஜன — வெகுஜன அபிப்பிராயத்தை உருவாக்கித்தான் தங்கள் கட்சி ஆட்சியைப் பிடித்தது என்பது தி. மு. க.வுக்கு இன்னும் ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறோம். இதே அடக்குமுறைகளை அப்போது ஆண்டு கொண்டிருந்தவர்கள் இவ்வளவு தீவிரமாகக் கடைப்பிடிக்கவில்லை என்பதை உணர வேண்டும். இப்பகுதி அச்சாகு முன் கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி பெத்துநாயக்கன்பாளையம், கோவில்பட்டி, மாறுமதுரை, அய்யம்பாளையம், ராஜபாளையம் முதலிய ஏழு இடங்களில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பலர் மாண்டிருக்கிறார்கள்.



## உதவி சபாநாயகர் கொடி பிடிக்கப் போகிறார்!

பொதுவாக, சபாநாயகர்களும், உதவி

சபாநாயகர்களும், கட்சி அரசியலிலிருந்து விலகி நிற்கவேண்டும் என்பது ஒரு மரபு. தமிழ் நாடு கடந்த காலத்தில் புதுக சாம்பமூர்த்தி, சிவசண்முகம் பிள்ளை, யு. கிருஷ்ணராவ் போன்றவர்களை அந்தப் புனிதமான மரபுக்கு உதாரணமாகக் கண்டிருக்கிறது. அதற்கு நேர்மாறான உதாரணங்களை இப்போதுதான் காணத் தொடங்கியிருக்கிறது.

''தி. மு. க. அரசைக் காப்பாற்ற நான் கறுப்பும் சிவப்பும் கலந்த கழகக் கொடியைப் பிடித்தும் போராடத் தயார்'' என்று தமிழ் நாடு சட்டசபை – மேலவைத் துணைத் தலைவராகப் பதவி பெற்றுள்ள திரு ம. பொ. சி. சென்ற வாரம் சென்னையில் நடைபெற்ற ஒரு 'கொள்கை விளக்க'ப் பொதுக் கூட்டத்தில் கூறியிருக்கிறார். மேலும் அதே கூட்டத்தில் விவசாயிகள் போராட்டத்தை 'மேட்டுக் குடியினரின் கிளர்ச்சி'யாக வருணித்திருக்கிறார். இப்படி ஒரு சார்பைக் காட்டி வெளிப்படையாகக் கட்சி மேடைகளில் பேசுகிறவர், ஒரு கட்சித் தலைமையை வைத்துக் கொண்டே இன்னொரு கட்சிக் கொடியையும் பிடிக்கிறேன் என்று அறைகூவுகிறவர், மாநில சுயாட்சியில் ஒருமைப்பாட்டைக் கைவிடுகிறவர் அவையில் எப்படி நடுநிலை காண்பிக்க முடியும் என்று தமிழ் மக்கள் ஆச்சரியப்படலாம். ஆச்சரியங்களை உண்டாக்கத்தானே ம. பொ. சி. இப்படிப் பேசியிருக்கிறார். ம. பொ. சி.யைவிட தி. மு. க. வையே சேர்ந்தவர்களான இருவாளர்கள் மதியழகன், சிற்றரசு ஆகியவர்கள் எவ்வளவோ மேல் என்று சொல்லிவிடலாம் போலிருக்கிறது. ஏனெனில், திரு மதியழகனும் திரு சிற்றரசும் கூடக் கட்சி விவகாரங்களை அதிகம் பேசுவதாகத் தெரியவில்லை. சபாநாயகர்கள் பதவிக்குரிய அந்தஸ்தை அவர்களாவது ஓரளவு புரிந்துகொண்டிருக்கிறார்கள் போலும்.

## கால்நடை மருத்துவமும் கட்சிப் பிரசாரமும்

தமிழ் நாட்டில் அங்கங்கே பொறியியல், மருத்துவக் கல்லூரிகளின் மாணவர் தேர்வுக் குழுவில் சமீப காலமாகக் கட்சி ஆட்கள் நுழைக்கப்படுவதும், அந்தத் துறைபற்றிய ஞானமில்லாத மேற்படி கட்சி ஆட்கள் இண்டர்வியூவுக்காக வரும் மாணவர்களிடம் 'இன்ன அமைச்சருக்கு எப்போது திருமணமாயிற்று?' 'அவர் மனைவி பெயர் என்ன?'— என்பது போன்ற கேள்விகளைக் கேட்பதும் வழக்கமாயிருந்ததாம். இப்போது மெல்ல மெல்ல அது இன்னும் தீவிரமாகிக் கட்சி பற்றிய தகவல்களைத் தருவதற்கு ஏற்ற கேள்விகளைக்கூடக் கேட்கிறார்களாம். சமீபத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு இண்டர்வியூ செய்த குழுவினர், ''சென்னையில் தமிழுக்காக உயிர் விட்டவர்கள் யார்?'' என்று ஒரு கேள்வி கேட்டார்களாம். இந்தக் கேள்வி முன்கூட்டியே தயாரிக்கப்பட்டு வேண்டிய மாணவர்களுக்கு இதற்குப் பதிலும் சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கலாம்; அல்லது பதில் கூறுகிற விதத்திலிருந்து அந்த மாணவர் தி.மு.க.வா, இல்லையா என்று கண்டுகொள்ள இதை ஒரு தந்திரமாகக் கையாண்டிருக்கலாம் என்று பல மாணவர்களிடையே சந்தேகம் உண்டாகியிருக்கிறது. 'ஒரு கால் நடை மருத்துவக் கல்லூரிக்கும் இந்தத் தமிழுக்காக உயிர் விட்டவர்களுக்கும் என்ன சம்பந்தம்?' என்று உங்களுக்குக் கூடச் சந்தேகம் வருகிறதல்லவா? தமிழுக்காக உயிர் விட்டவர்களைப் பற்றித் தமிழுக்காக உயிர் வாழ்வதாகச் சொல்லிக் கொள்கிறவர்கள் கேட்காமல் வேறு யார் கேட்க முடியும்? ஆனால் எந்த இடத்தில் எதைப்பற்றிக் கேட்பது என்று வரம்பே இல்லையா?

## மாநில சுயாட்சியும் படுக்கை அறையும்

மதுரை முத்துவின் முன்னிலையில் சென்னையில் ஒரு கூட்டத்தில் 'நீங்கள் விரும்புவீர்களானால் பதவியைத் துறந்து வன்முறைக்குத் தலைமை தாங்கவும் தயார்' என்று தமிழ்நாட்டு முதல்வர் திருவாய்மலர்ந்தருளியிருப்பதைப் பார்த்து நாம் வியப்படைந்து கொண்டிருக்கும் போதே மாநில சுய ஆட்சியைப் புதுமணம் புரிந்து கொண்டவரின் படுக்கை அறையோடு ஒப்பிட்டு அவர் பேசியிருப்பதும் நம் கவனத்துக்கு வருகிறது. வேறு யாரால் இப்படி ஒப்பிட்டுப் பேச முடியும்? உவமைகளுக்காக ஏதாவது 'உலக மகா உவமைப் பரிசு' இருந்தால் அதை நம் முதல்வரைத் தவிர வேறு யாருக்குத் தர முடியும்? எத்தனை அருமையான உவமை?




## அதியமான் கார்ட்டூன்

கல்கி 2–7–73 இதழில் வெளியான அதியமான் கார்ட்டூனைப் பார்த்துவிட்டு 'கல்கி' நேயர்கள் சிலர் தங்கள் ஐயப்பாட்டினைத் தெரிவித்திருக்கிறார்கள்.

அபூர்வ நெல்லிக் கனியைத் தயங்காமல், தாராள மனத்துடன் ஔவையாருக்குக் கொடுத்து விட்டான் அன்றைய அதியமான்.

ஆனால் இன்றைய நவீன அதியமானான நமது முதல்வரோ தமக்கு நீண்ட ஆட்சி என்ற நெல்லிக்கனி கிட்டாதா என்று ஏங்குகிறார். அதைப் பிரதமர் இந்திரா என்ற ஔவையார் தமக்கு அளிக்கலாகாதா என்று ஆசைப்படுகிறார். அதாவது அடுத்த தேர்தலுக்கு முன்பாகவே இங்கே மத்திய அரசின் தலையீடு (அதற்கான சூழ்நிலைகள் தோன்றினாலும் கூட) இருக்கலாகாது என விரும்புகிறார்.

நந்தனுக்கு ஒரு சித்தனார் என்பதுபோல் சிலையும் மேற்படி கருத்துக்குத் தக்கபடி கார்ட்டூனில் மாற்றி வரையப்பட்டது.

# நன்றாக வேண்டும்!



('தமிழரசு' ஜூலை இதழில் புலவர் சி. துரைசுவாமி எழுதிய 'வேண்டுதல் பதிக'த்திலிருந்து சில வரிகள்—படங்கள் நம்முடையன.)

ஆட்சிக்கு நீதியுள்ள அரசு வேண்டும்.





ஏழ்மையற உழைப்பினிலே
ஏற்றம் வேண்டும்.

கொடுங்கோன்மை விடுத்தரசே
ஆற்ற வேண்டும்.



குணமிகுந்த அறிஞருடன் கூட வேண்டும்.





மிகைப்படுத்தித் தனைப்புகழா-
தடக்கம் வேண்டும்.

சைவத்தின் உயர்வறிந்து
போற்ற வேண்டும்.

நன்மை தரும் கூத்திசையில்
நாட்டம் வேண்டும்.



தைப்பொங்கல்
ஏர்த்தொழில்மேல்
போற்ற வேண்டும்.



# உங்கள் சிறுதர தொழில் வளர்ந்து பெருகுவதற்கு அதிக மூலதனம் தேவைப்படுகிறது.



## அது உங்களுக்குக் கிடைக்கக்கூடிய இடம் எது? யூகோபாங்க்

நீங்கள் சிறுதர தொழிலதிபராயிருந்தால் யூகோபாங்க் உங்களுக்குப் பண உதவி செய்வதில் விசேஷ முதலிடம் அளிக்கின்றது. நாங்கள் அளிக்கும் அந்த உதவி, உங்கள் தொழில் முன்னேற்றத்திற்கும் வாழ்க்கை வளத்துக்கும் காரணமாகும் வகையானதாக இருக்கும்.

உங்கள் தேவைகளை நாங்கள் அறிவோம். தொழிலில் அதிக லாபம் அடையவேண்டிய முதலீடு செய்ய உங்களுக்கு அதிக மூலதனம் தேவைப்படுகிறது. இயந்திரங்களோ அல்லது கச்சாப்பொருள்களோ வாங்குவதற்கு உதவி அளிக்கின்றோம். புதுத் தொழிலை ஆரம்பிக்கவும் அல்லது இருக்கும் தொழிலை விரிவாக்குவதற்கும், தொழிலை நன்கு நடத்துவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கும் நாங்கள் பண உதவி அளிக்கின்றோம். இந்த உதவிகள் எல்லாம் நியாயமான வட்டி விகிதத்திலேயே அளிக்கப்படுகின்றன.

யூகோபாங்க், நீங்களே உங்கள் வளத்துக்கு உதவி செய்து கொள்ள உதவுகிறது.

மற்ற விவரங்களுக்கும் அனுபவமிருந்த ஆலோசனைக்கும் உங்களருகிலிருக்கும் யூகோபாங்க்கின் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுகிறது.**

UCO-7/72



# அறமும் அன்பும் அரசாங்கமும்

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

அரசனே தர்மத்துக்குக் காரண புருஷன் — ''ராஜா தர்மஸ்ய காரணம்''—என்று ஒரு முதுமொழி இருக்கிறது. இதன் அர்த்தம் என்ன என்று ஆராய்ந்து பார்க்கலாம். முதலில் தர்மம் என்றால் என்ன?

மனிதராகப் பிறந்த எல்லாருக்கும் பசி, தாகம் இருக்கிறது. அவர்கள் வசிக்க ஓரிடம் வேண்டியிருக்கிறது. குளிர், வெய்யிலிலிருந்து காப்பாற்றிக் கொள்ளவும், மானத்தை ரட்சித்துக்கொள்ளவும் ஆடை அணிய வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் மனிதன் வசதி செய்து கொள்ள வேண்டும். ஏதோ ஒரு தொழிலைச் செய்தே இதற்கு வசதி செய்து கொள்கிறான். அத்தியாவசியமான சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்வதோடு ஒவ்வொரு மனிதனும் பிறர் விஷயமாகச் சில கடமைகளை நிறைவேற்றவும் வேண்டியிருக்கிறது. ஒவ்வொருவனும் ஏதோ ஒரு குடும்பத்தில் பிறப்பதால் அந்தக் குடும்பத்தில் இருப்பவர்களுக்கும், பிற்பாடு கல்யாணமானதும் மனைவி மக்களுக்கும் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. தன்னுடைய சமுதாயம், தேசம் இவற்றுக்கெல்லாம் மனிதன் கடமை ஆற்ற வேண்டியிருக்கிறது. பல விதத்தில் சுயதேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்; பலவிதத்தில் வீடு, நாடு இவற்றுக்கான கடமைகளைச் செய்யலாம். ஆனால் மனத்துக்குத் தோன்றியபடியெல்லாம் இவற்றைச் செய்யாமல், எவருக்கும் தீங்கு விளைவிக்காத விதத்தில், அதீதமான காமமும் குரோதமும் கலக்காமல் செய்ய வேண்டும். தன்னையும் மேம்படுத்திக்கொண்டு, அனைவரையும் உயர்த்துகிற விதத்தில் தொழிலையும், கடமையையும் செய்ய முடியும். இவ்வாறு இக உலகக் காரியங்களை, சம்பந்தப்பட்ட அனைவரது ஆத்ம அபிவிருத்திக்கும் அநுசரணையாகச் செய்வதற்குத்தான் ''தர்மம்'' என்று பெயர்.

பலர் கூடி வாழுகிற சமூகத்தை, அவர்களது பலவித காரியங்களில் உரசலில்லாமல், சமூகம் முழுவதும் ஆத்மாபிவிருத்தி அடையும் முறையில் சீராக வைத்திருக்க வேண்டும். இப்படிச் செய்வதே ராஜாங்கத்தின் கடமை. பிரஜைகளின் லௌகிக வாழ்க்கையை ஒழுங்கு செய்து, அவர்கள் ஆத்மாபிவிருத்தி அடைகிற வாய்ப்புகளையெல்லாம் பூர்த்தி செய்து தரவேண்டியது ராஜாங்கத்தின் பொறுப்பு. இதனாலேயே ''ராஜா தர்மஸ்ய காரணம்'' என்றனர்.

ராஜாங்கம், தனிமனிதர்கள் இவர்களுக்குப் பலவிதமான காரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எத்தனை காரியம் இருந்தாலும் அதற்கெல்லாம் மூலமும் நோக்கமும் அன்பு என்ற ஒன்றாகவே இருக்க வேண்டும். காரியம் என்று ஏற்பட்டால் அதன் விளைவுக்கு ஆளாகிற ஒன்றும் இருக்கத்தான் செய்யும். 'காரியம் செய்பவன்' இருப்பது போல் 'காரியத்தின் விளைவுக்கு ஆளாகிற ஒருவனு'ம் இருந்தே தீருவான். விளைவை அனுபவிக்கப் போகிறவர்களிடம் பூரண அன்பு வைத்தே எந்தக் காரியமும் செய்ய வேண்டும். அன்பிலேயே எந்தக் காரியமும் பிறக்க வேண்டும்.

உலக விவகாரங்களில் போர் முதலியனவும் அத்தியாவசியமாகிவிடுகிற நிர்ப்பந்தம் ஏற்படுவதுண்டு. சிலருக்குத் தண்டனை தரவேண்டி நேருகிறது. ஆனால் போர் செய்யும்போதும், தண்டனை தரும்போதும் கூட எதிராளியிடம் துவேஷம் கொள்ளாமல் அன்புடனேயே செய்ய வேண்டும். காரியம் எப்படிப்பட்டதாக இருந்தாலும் காரியம் செய்கிற மனசில் அன்பு தவிர வேறெதுவும் இருக்கக் கூடாது. காமம், குரோதம், துவேஷம், வஞ்சனை இவற்றைப் பூரணமாக நீக்கிவிட்டு, லோக க்ஷேமத்துக்காக எந்தக் காரியமும் செய்யலாம். அன்பு ஒன்றே சகல காரியங்களுக்கும் வழித் துணையாகி விட்டால் உலகில் உள்ள பல தீமைகள் தானாகச் சிறுகச் சிறுக மறைந்து போகும். இது என்னுடைய உபதேசம் (Message) அல்ல; இதுவே பாரத தேசத்தின் சகல ரிஷிகளும் முனிவர்களும் தந்திருக்கிற உபதேச சாரம்.

# பச்சை நிற கோலினாஸ் குளோரோபில் வாய் துர்-நாற்றத்தை வெல்லுகிறது.

**பச்சை நிற கோலினாஸ் குளோரோபில் பற்பசையில் குளோரோபில் அடங்கியுள்ளது. பசும் இலைகளி-லிருந்து ஆக்கம் பெறும் குளோரோபில் இயற்கை யாகவே துர்நாற்றம் போக்கும் தன்மையுடையது.**

பச்சை நிற கோலினாஸ் பற்பசையால் பல் துலக்கி, அருவருப்பான வாய்நாற்றம் போக்குங்கள். அதன் புதுமையான 'மின்ட்' சுவையையும் வளமான நுரையையும் நீங்கள் ரசிப்பீர்-கள். இரவிலும் காலையிலும் பச்சைநிற கோலினாஸ் குளோரோபில் பற்-பசையால் பல் துலக்குங்கள்.

**இந்த 'நட்பு மிக்க மூச்சு' சோதனையை நீங்களே செய்து பாருங்கள்.**

**உங்கள் வாய்க்கு அருகில் உள்ளங்கையைப் பிடியுங்-கள். அதன் மீது நீண்ட மூச்சு விடுங்கள். விரைவாக மூச்சை உள்ளுக்கு இழுங்-கள். பிறகு பச்சை நிற கோலினாஸ் குளோரோபில் பற்பசையால் பல் துலக்குங்கள். சோதனையை மீண்டும் செய்து பாருங்கள். இப்போது உங்கள் மூச்சு தூய்மையுடன் இனிமையாக விளங்குவதைக் காண்பீர்கள்.**




KC-8

## பச்சை நிற **கோலினாஸ்** குளோரோபில்

Regd. User of TM: Geoffrey Manners & Co., Ltd.

# சத்திய வெள்ளம்



## இரண்டாவது அத்தியாயம்

பல்கலைக் கழகம் வந்தபின் மல்லிகைப் பந்தல் நகரமே ஓரளவு பெரிதாகியிருந்தது. பல ஆண்டுகளுக்குமுன் விமான விபத்தில் மறைந்த மல்லிகைப் பந்தல் கல்லூரி நிறுவனர் பூபதி அதை நிறுவிய போது அது என்றாவது ஒரு நாள் பல்கலைக் கழகமாக வேண்டும் என்ற இலட்சியத்தோடுதான் நிறுவி யிருந்தார். அந்தக் கனவு இன்று நனவாகியிருந்தது. பூபதி மறைந்தபின் மஞ்சள்பட்டி ஜமீன்தார் அந்தக் கல்லூரி நிர்வாக போர்டின் தலைவராக வந்தார். ஜமீன்தார் ஒரு பெரிய கள்ள நோட்டு வழக்கில் சிக்கிச் சிறை செல்ல நேர்ந்தபின் அரசாங்கமே குறுக்கிட்டு நிர்வாக போர்டின் மீதுள்ள பல குற்றங்களை விசாரணை செய்து அதைக் கலைத்துவிட்டு மூவர் கொண்ட ஒரு குழுவைக் கல்லூரி ஆட்சிப் பொறுப்புக்காக நியமித்தது. அந்த ஆண்டிலேயே மல்லிகைப்பந்தல் கல்லூரியைப் பார்வையிட வந்த யுனிவர்ஸிடி 'கிராண்ட்ஸ் கமிஷன்' அந்த ஊரும் கல்லூரியும் ஒரு பெரிய ரெஸிடென்ஷியல் யுனிவர்ஸிடிக்கு மிக மிகப் பொருத்தமாக இருக்கும் என்று சிபாரிசு செய்யவே மாநில அரசாங்கம் தாமதம் செய்யாமல் சட்டசபையில், 'மல்லிகைப் பந்தல் யுனிவர்ஸிடி ஆக்ட்' என்று ஒரு பில் கொண்டு வந்து நிறைவேற்றியது. யுனிவர்ஸிடி கிராண்ட்ஸ் கமிஷன் வழங்கிய ஒரு பெருந்தொகையோடு மாநில அரசாங்கமும் ஒரு பெருந்தொகை வழங்கிக் கல்லூரிக் கட்டடங்

நா. பார்த்தசாரதி

களையும், விடுதிகளையும், பட்டமளிப்பு விழா மண்டபம், செனட் ஹால் ஆகியவற்றையும், மெடிகல், என்ஜினீயரிங், விவசாயம் ஆகிய பிரிவுகளையும் கட்டி முடித்தது. அதன் முதல் நிறுவனர் பூபதியின் நினைவாகப் பட்டமளிப்பு விழா மண்டபம், அட்மினிஸ்டிரேடிவ் பில்டிங் ஆகியவை அமைந்திருந்த பிரதான மாளிகைக்குப் பூபதி ஹால் என்று பெயரும் சூட்டப்பட்டது. பூபதியின் சொத்துக்களில் பெரும் பகுதி ஏற்கனவே அந்தக் கல்லூரி டிரஸ்டைச் சேர்ந்தவையாக இருந்தது. அவருடைய ஒரே மகள் பாரதி போஸ்ட்—கிராஜுவேட் படிப்பு முடிந்ததும் மேற்படிப்புக்காக அமெரிக்கா போனாள். நடுவே அவள் திரும்பியபோது வீடு உள்பட மீதமிருந்த சொத்துக்களையும் பல்கலைக் கழகத்துக்கே எழுதிக் கொடுத்துத் தந்தை பெயரில் ஒரு 'சேர்' ஏற்பாடு செய்துவிட்டு மீண்டும் வெளிநாட்டுக்கே போய் விட்டாள். பூபதியின் அழகிய பங்களா பல்கலைக் கழக வைஸ்சான்ஸலர் மாளிகை ஆகியது. மல்லிகைப் பந்தல் பல்கலைக் கழகத்தில் புதிய புதிய துறைகளை அமைப்பதில் அதன் முதல் வைஸ்—சான்ஸலரும், சிண்டிகேட்டும் பெரும் பணி புரிந்தார்கள். இரண்டு ஆண்டுகள் அந்தப் பல்கலைக் கழக வளர்ச்சியில் பொற்காலத்தைப் படைத்தன.

மொழிப் போராட்டம் வந்தது. அந்தப் பல்கலைக் கழகத்தையும் அது பாதித்தது. மொழிப் போராட்டத்தை அடுத்து வந்த பொதுத் தேர்தலில் அந்தப் போராட்டத்தை முன்நின்று நடத்திய கட்சிகள் வென்றன. முதல் முறையாக ஆட்சி மாறியது. ஆனால் மாறிய ஆட்சி மிகச் சில மாதங்களிலேயே மாணவர்களின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்டது. பொருளாதாரத் திட்டங்கள் எதுவும் இல்லாமல் வெறும் உணர்ச்சியை மட்டும் பரவச் செய்து தங்களை ஏமாற்றி விட்டார்களோ என்ற சந்தேகம் இளைஞர்கள் உள்ளத்தில் வேரூன்றியது. அதன் விளைவாக மொழிப் போராட்டத்தை ஆதரித்த இளைஞர்களே அந்தப் போராட்டத்தின் தலைவர்கள் ஆளும் ஆட்சியை முழுமூச்சோடு எதிர்க்க நேரிட்டது. இந்தக் கால கட்டத்தில் தான் பாண்டியன் மல்லிகைப்பந்தல் பல்கலைக் கழகத்தில் மாணவனாகச் சேர்ந்திருந்தான். அந்தப் பல்கலைக் கழகத்தில் சேரும்போது அவன் இவற்றையெல்லாம் அறியாத ஒரு நாட்டுப்புறத்து மாணவனாகத்தான் சேர்ந்திருந்தான். இரண்டாண்டுப் படிப்பும் தன்னை ஒத்த தேசிய நல நோக்கம் கொண்ட மாணவர்கள் பலரைச் சந்திக்க நேர்ந்ததும், அண்ணாச்சியின் நட்பும் அவனைப் பெரிதும் வளர்ச்சி அடையச் செய்திருந்தன. அவனும் சக மாணவர்களும் அந்த இரண்டாண்டில் அவ்வப்போது நடத்திய உரிமைப் போர்கள் எல்லாம் வெற்றியடைந்திருந்தன. போராட்டங்களும், பிரச்னைகளும் ஒருபுறம் இருந்தாலும் படிப்பைக் கோட்டைவிடாமல் கவனித்துக் கொண்டான் அவன்.

'முதல் ஆண்டு எப்படியிருந்தாலும் டிகிரி எக்ஸாமிநேஷனுக்கு முந்திய ஆண்டிலிருந்தே பொதுக் காரியங்களில் ஈடுபடாமல் இருக்க வேண்டும்' என்ற முடிவோடுதான் அந்த ஆண்டு ஊரிலிருந்து புறப்பட்டு வந்தான் பாண்டியன். ஆனால் அது பலிக்காமல் போயிற்று. அவனை மாணவர் பேரவைச் செயலாளன் ஆக்குவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.



பிற்பகல் மூன்று மணிக்கு மேலாகியிருந்தது. அறையில் உடன் தங்கும் மாணவன் பொன்னையா சுதந்திரதின விடுமுறையையும் அடுத்து வந்த சனி, ஞாயிறு விடுமுறைகளையும் கழிக்க முந்திய தினமே வார்டனிடம் அனுமதி பெற்று ஊருக்குப் போயிருந்தான். அறையில் கட்டிலில் தனியாகப் படுத்திருந்த பாண்டியன் எதிரே ஜன்னல் வழியே பல்கலைக் கழக மணிக்கூண்டு டவரின் உச்சியில் பறக்கும் புத்தம் புதிய மூவர்ணக் கொடியைப் பார்த்தான். உயர்நிலைப் பள்ளிப் படிப்பின் இறுதி ஆண்டுகளில் நடைபெற்ற மொழிப் போராட்டம் அவனுக்கு நினைவு வந்தது. சாலையில் போகிற கார்களை ஒன்றுவிடாமல் நிறுத்தி 'ஒழிக ஒழிக' என்று



எழுதியதும், தபாலாபீஸ் போர்டில் தார் பூசியதும், இரயில்களை மறித்ததும் லாரிகளை நிறுத்திக் கூட்டம் கூட்டமாக ஏறிச் சென்று பக்கத்து ஊர்ப் பள்ளி மாணவர்களையும் மொழிப் போரில் குதிக்கச் செய்ததும் அந்தப் போரில் சிலர் மாண்டதும், சிலர் தீக்குளித்ததும், சில போலீஸ்காரர்கள் கொல்லப்பட்டதும் ஒவ்வொன்றாக நினைவு வந்தன. கார்களை நிறுத்திப் பெட்ரோல் வாங்கியதும், உண்டியல் குலுக்கிப் பணம் வசூலித்ததும் இன்னும் மறந்து விடவில்லை.

இன்று அறிவும் மனமும் விசாலமடைந்தபின் அவற்றைவிடப் பெரிய காரியங்களைப் பற்றிச் சிந்திக்கப் பழகியிருந்தான் அவன். கோடிக்கணக்கான மக்களின் வறுமையைப் போக்கவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபடவும், வேலையில்லாமலிருக்கும் பட்டதாரிகள் வேலை பெறவும் அகில இந்திய — அகில உலக மனப்பான்மைகள் வளரவும் சிந்திக்கத் தொடங்கியிருந்தார்கள் அவனைப் போன்ற மாணவர்கள். காலம் உணர்விலிருந்து அறிவுக்கு மாறியிருந்தது.

பள்ளிக்கூட நாட்களில் தான் இருந்த நிலையை இன்று திரும்ப நினைத்தபோது சிரிப்பு வந்தது அவனுக்கு. ஒவ்வொரு புத்தகத்திலும் முதல் இரண்டாம் பக்கங்களில், 'தமிழ் வாழ்க' என்று எழுதுவது அந்த நாட்களில் அவன் வழக்கம். இப்போது அப்படி எழுதும் வழக்கம் விட்டுப் போயிற்று. தமிழை வளர்க்க வேண்டும், வளர்ச்சியின் மூலமாகவே அதை வாழச் செய்ய முடியும் என்ற புதிய மனப்பான்மை இப்போது அவனுள் வந்திருந்தது. வளராத எதுவும் வாழாது என்றும், ஒன்றை வாழ வைப்பதற்கு 'அது வாழ்க' என்று எழுதி விடுவது மட்டும் போதாது என்றும், கல்லூரி வாழ்வு அவனுக்குக் கற்பித்திருந்தது. வாழ்க, ஒழிக கோஷங்கள் பற்றிய பள்ளிக்கூட நாட்களின் மனப் போக்கும் இப்போது அவனிடம் இல்லை. இந்தச் சில ஆண்டுகளில் நிறைய நூல்களையும், உலக அனுபவத்தையும் அவன் கற்றிருந்தான். புதிய அறிவுகளின் உயரத்தில் நின்று கீழே திரும்பிப் பார்த்தபோது பழைய அறியாமைகளின் இருண்ட பள்ளம் தெளிவாகத் தெரிந்தது. பள்ளி இறுதி நாட்களிலும், அதை ஒட்டிய காலத்திலும் எதுகை மோனையோடு பேசுவது, எழுதுவதில் அவனுக்கு ஒரு வெறியே இருந்தது. அப்படிப் பேசிய சில தலைவர்களை அவன் இமிடேட் செய்து பழகியும் இருந்தான்.

''தகுதியும் மிகுதியும் வாய்ந்த தலைமையாசிரியர் அவர்களே! கூட்டத்தின் ஒரு பகுதியாக அமர்ந்திருக்கும் ஆன்று அமைந்து அடங்கிய ஆசிரியப் பெருமக்களே!'' என்றெல்லாம்தான் அப்போது பேசத் தொடங்குவான் அவன். கருத்துக்களை வற்புறுத்தும் பதங்களைவிடப் பதங்களை வற்புறுத்திக் கருத்துக்களை அவற்றில் கரையவிடும் பழக்கமே அப்போது அவனிடமும் மற்றவர்களிடமும் இருந்தது. 'த'வை அடுத்து 'த' வரவும், 'ஆ'வை அடுத்து 'ஆ'வரவும் ஏற்ற பதங்களைத் தேடியே பேசிப் பழக்கமாகி யிருந்தது. கல்லத்தி மரத்தில் இலைகளிலும், கிளைகளிலும் காய்கள் அப்பிக் கொண்டிருக்கிற மாதிரி வேண்டிய இடங்களில் விவேகத்தோடு அமையாத சொற்களை இட்டு நிரப்பும் அந்த வெறி இப்போதுதான் தணிந்திருந்தது. அந்த மாறுதல் தனக்கு மட்டுமல்லாமல் தன்னைச் சுற்றி உள்ள பல மாணவர்களிடமும் நேர்ந்திருப்பதைப் பாண்டியன் கவனித்திருந்தான். இது ஒரு 'டிரான்ஸிஷன் பீரியட்' என்பது அவனுக்குப் புரிந்திருந்தது.

புதிய காலத்தில் மொழியின் மேல் இருந்த காமம் தணிந்து அவர்கள் மொழியைக் காரண காரியங்களோடு நேசிக்கப் பழகி விட்டார்கள். சிலர் மட்டும் அன்று கண்ட மேனிக்கு மாறாமலே இன்னும் இருந்தார்கள். சி. அன்பரசனைப்போல் எம். ஏ. வகுப்புக்குப் போன பின்பும் அந்த எதுகை மோனைப் பேச்சு யுகத்திலேயே இன்னும் இருந்த சிலரையும் பாண்டியன் அங்கே கண்டான். விஞ்ஞான, பொருளாதார வளர்ச்சியோடு மொழி வளர்ச்சியையும் சேர்த்து நினைத்த பலருக்கும், மொழிக்குத் தாலாட்டுப் பாடி அதைத் தூங்கச் செய்வதே மொழி வளர்ச்சி என்று எண்ணும் சிலருக்கும் நடுவே ஓர் அமைதியான — சில சமயங்களில் ஆர்ப்பாட்டமான சிந்தனைப் போர் இருந்து வந்தது. பல்கலைக் கழக மாணவர் பேரவைத் தேர்தலுக்கான துண்டுப் பிரசுரங்களிலும், சுவரொட்டிகளிலும் கூட இந்த இருவிதமான சிந்தனைப் போக்குகளைப் பிரதிபலிக்கும் வாசகங்கள் தென்பட்டன.

அவன் படுக்கையிலிருந்து எழுந்து முகம் கழுவிக் கொண்டு வரக் குளியலறைக்குச் சென்றான். விடுதியின் கோடியிலிருந்த குளியலறைக்குச் சென்று விட்டு மீண்டும் அறைக்குத் திரும்பிய போது அங்கே சில மாணவ நண்பர்கள் அவனுக்காகக் காத்திருந்தனர். எல்லாருமாக மெஸ்ஸுக்குச் சென்று காப்பி குடித்துவிட்டு மீண்டும் அறைக்கே திரும்பி வந்தார்கள்.




ஹகோபா இவர்கள் தயாரிக்கும் எம்பிராய்டர்ட் துணிவகைகள் மற்றும் எம்பிராய்டர்ட் லேஸ்களுக்கான பதிவுபெற்ற வியாபாரச் சின்னமாகும். ஃபேன்ஸி கார்ப்பொரேஷன் லிமிடெட், 16, பம்பாய் சமாசார் ஸ்ட்ரீட், பம்பாய்-1.

# இப்பெண்ணின் பேரெழிலுக்குக் காரணமென்ன?




# முத்தென
# ஒளிரச் செய்யும்
# லக்மே வேனிஷிங் க்ரீம்

லக்மே வேனிஷிங் க்ரீம் உங்கள் சருமத்தில் மறைந்து செயலாற்றுகிறது. அது உடனடியாக உங்கள் முகத்தை எழிலோங்கச் செய்கிறது. சிறிது தடவிப் பாருங்கள். முத்துப் போல் ஒளிரச் செய்யும் அதன் விசேஷ செயலாக்கம் விந்தை புரிவது தெரியவரும்.

உங்கள் முகமலர் முத்தென ஒளிரும் இந்த இலேசான படிமானத்தின் மீது சிறிது லக்மே முகப்பவுடர் பூசுங்கள். இப்போது கண்ணாடியில் பாருங்கள். நீங்கள் எழிலோங்கி எடுப்பாக விளங்குவீர்கள்!

## லக்மே வேனிஷிங் க்ரீம்

Lakme

ASP/L-86

''பேரவைச் செயலாளர் பதவிக்கு உன்னை எதிர்த்து யார் யார் போட்டியிடுகிறார்கள் என்று தெரியுமா பாண்டியன் ?''

''நான் இன்னும் விசாரிக்கவில்லை. நான் போட்டியிடுவதே இன்று காலையில்தானே உறுதியாயிற்று ?''

''உன்னை எதிர்த்து ஓரியண்டல் ஸ்டடீஸ் பிரிவில் முதுநிலை முதலாண்டு மாணவன் வெற்றிச் செல்வன் போட்டியிடுகிறான். பேரவைத் தலைவர் பதவிக்கு நம் ஆளாக மோகன்தாசும் அவர்கள் ஆளாக சி. அன்பரசனும் போட்டி யிடுகிறார்கள். செயலாளர், கூட்டுச் செயலாளர் பதவிக்கு மேலும் சிலர் உதிரிகளாக நிற்பார்கள் போலிருக்கிறது.''

''நிற்கட்டும்.... அதனால் நமக்கு ஒன்றும் கவலை இல்லை..... மோகன்தாசும், நானும் ஜெயிக்கப் போவது உறுதி....'' என்றான் பாண்டியன்.

''வெற்றிச் செல்வனுக்கும், அன்பரசனுக்கும் கட்சியின் கோட்டச் செயலாளர் மூலம் பண உதவி செய்யப்படுகிறது. மந்திரிகள் வாழ்த்துச் செய்தி அனுப்புகிறார்கள். போலீஸ், ஆர்.டி.ஓ. வைஸ்சான்ஸலர் எல்லாரும் பயப்படுகிறார்கள்......''

''நன்றாகப் பயப்படட்டும். எந்தக் கோட்டையைப் பிடித்தாலும் இனி இந்தக் கோட்டையை அவர்களால் பிடிக்கவே முடியாது.''

''எங்களுக்கும் நம்பிக்கை இருக்கிறது பாண்டியன் ! ஆனாலும் நாம் நிறைய வேலை செய்ய வேண்டும். நியூ ஹாஸ்டல், ஈஸ்டர்ன் ஹாஸ்டல், மெடிக்கல், என்ஜினியரிங் ஹாஸ்டல்கள் வேளாண்மைக் கல்லூரி விடுதி, எல்லாவற்றுக்கும் போய் நாமே மாணவர்களைப் பார்க்க வேண்டும். பெண்கள் ஹாஸ்டலுக்குள்தான் போக முடியாது. அங்கே நமக்காகப் பிரசாரம் செய்யும் வேலையை அண்ணாச்சி கண்ணுக்கினியாளிடமும் அவள் சிநேகிதிகளிடமும் விட்டுவிட்டார். பழைய வழக்கப்படி இருந்தால் நாம் இவ்வளவு சிரமப்பட வேண்டியிருக்காது. பாடப் பிரிவுகளின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் மட்டுமே வாக்களித்துப் பேரவைத் தலைவனையும், செயலாளனையும், மற்றவர்களையும் தேர்ந்தெடுக்கிற முறையையே சென்ற ஆண்டு வரையில் கடைப்பிடித்தார்கள். இந்த ஆண்டு ஆறாயிரம் விடுதி மாணவர்களுக்கும், ஐந்நூறு மாணவிகளுக்கும், வெளியே நகரிலிருந்தும், சுற்றுப்புற ஊர்களிலிருந்தும் வந்து படிக்கும் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களுக்கும் நேரடியாக 'பாலட் பேப்பர்' கொடுத்துத் தேர்தல் நடத்தப் போகிறார்களாம். அன்பரசன், வெற்றிச்செல்வன் வகையறா ஆட்கள் வி.சி.யைப் பார்த்துப் பிரஷர் கொடுத்து வி. சி. ரிஜிஸ்டிராரைக் கூப்பிட்டுச் சொல்லி — அதன்பின் இந்தப் புது ஏற்பாடு அறிவிக்கப்பட்டிருக்கிறது.''

''இந்த ஏற்பாட்டையே நாம் எதிர்த்துப் போராட முடியும். ஆனால் நாம் இதை எதிர்த்தால் இதை வைத்தே அன்பரசன் குழுவினர் நம்மைப் பற்றி துஷ்பிரசாரம் செய்வார்கள். எல்லா மாணவர்களுக்கும் வோட்டளிக்கும் வாய்ப்புக் கிடைப்பதை நாம் எதிர்க்கிறோம் என்று திரித்துப் பிரசாரம் செய்வார்கள். அதனால் இதை நாமோ, நம்மவர்களோ எதிர்க்கக் கூடாது.''

''நீ எப்போதுமே இப்படித்தான் பாண்டியன் ! எதையும் எதிர்க்கக் கூடாதென்கிறாய்.... இதோ பார் ! அவர்கள் வெளியிட்டிருக்கும் துண்டுப் பிரசுரத்தில் நம்மைப் பற்றி என்னவெல்லாம் எதிர்த்து எழுதியிருக்கிறார்கள்'' என்று சட்டைப் பையிலிருந்து ஒரு துண்டுப் பிரசுரத்தை எடுத்து நீட்டினான் அந்த மாணவ நண்பன்.




பாண்டியன் அதை வாங்கிப் பார்த்தான். நோட்டீசின் மேற்பகுதியில், 'தமிழ் வெல்க' என்றும், அடுத்து 'மானம், மரியாதை, மதிப்பு வாழ்க' என்றும் அச்சிட்டிருந்தது. அதன் கீழே, 'தமிழ்த் துரோகிகளை ஒழித்துக் கட்ட தங்கத் தமிழகத்தின் சிங்கச் சிறுத்தைகளே ஒன்றுபடுங்கள் ! இந்தப் பல்கலைக் கழகம் நமது சொந்தப் பல்கலைக்கழகமாக வேண்டுமாயின் அன்பரசனுக்கும், வெற்றிச் செல்வனுக்கும் வாக்களியுங்கள்' — என்று அச்சிட்டிருந்ததோடு பெயர் குறிப்பிடாமல் பாண்டியனைப் பற்றியும், மோகன்தாசைப் பற்றியும்

பழித்துக் கூறும் வாக்கியங்கள் சிலவும் அச்சிடப்பட்டிருந்தன.

அதைப் படித்துவிட்டுப் பாண்டியன் சிரித்தான். பின்பு அந்தப் பிரசுரத்தைச் சுக்குநூறாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் எறிந்தான்.

''எனக்குத் தெரிந்த நாளிலிருந்து ஒவ்வொரு வருஷமும் இதே வாக்கியம், இதே தங்கத் தமிழகம், இதே சிங்கச் சிறுத்தைகள்தான் அவர்கள் துண்டுப் பிரசுரங்களில் எழுதப்படுகின்றது. புதிதாக எதுவுமில்லை.....''

''தங்கத்தைத்தான் மொரார்ஜி தேசாய் பதினாலு காரட் ஆக்கிவிட்டாரே; இங்கேகூட மல்லிகைப்பந்தலில் நகைப் பட்டறை வைத்திருந்த பத்தர் ஒருத்தர் 'மொரார்ஜி கண்டல்' என்று மாலை வேளைகளில் பார்க்கில் சுண்டல் வியாபாரம் செய்கிறார்!''

பாண்டியன் இடைமறித்தான்.

''அவர்கள் தந்திரத்தைப் பார்த்தீர்களா? சோற்றுக்குத் திண்டாடுகிறவர்களுக்கு நடுவே அவர்கள் தங்கத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். வேலைவாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு நடுவே அவர்கள் மொழியின் பழம் பெருமையைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.''

இப்படியே சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தபின் பாண்டியனும் நண்பர்களும் ஈஸ்டர்ன் ஹாஸ்டலில் அறை அறையாக நேரிற் சென்று மாணவர்களைச் சந்தித்து வோட்டுக் கேட்கும் திட்டத்துடன் புறப்பட்டனர். போகிற வழியில் பெண்கள் விடுதிக்கு முன்னாலிருந்த பூங்காவில் அவன் கண்ணுக்கினியாளை அவள் தோழிகளோடு சந்திக்க நேர்ந்தது. ''அண்ணாச்சி - எல்லாம் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன். பெண்கள் விடுதியில் பிரசாரம் முழுவதும் உங்கள் பொறுப்பு'' என்றான் பாண்டியனோடு வந்த மாணவர்களில் ஒருவன். அவள் புன்னகையோடு சம்மதத்துக்கு அறிகுறியாகத் தலையசைத்தாள்.

''நாங்கள் கிழக்கு விடுதியில் மாணவர்களைப் பார்க்கப் போகிறோம்'' என்று சொல்லிவிட்டுப் பாண்டியன் அவளிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட இருந்தபோது,

''ஒரு நிமிஷம் இப்படி வாருங்கள்! உங்களிடம் தனியே கொஞ்சம் பேச வேண்டும்'' என்றாள் அவள். பாண்டியனுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. உடன் நிற்கும் மாணவர்களை விட்டுவிட்டு அன்று காலையில்தான் புதிதாக அறிமுகமாகியிருந்த ஒரு மாணவியோடு பேசப் போவது அந்த மாணவர்களை எப்படி எப்படி உணர வைக்குமோ என்று ஒரு விநாடி கூசினான். அதற்குள் ''ஐ திங் ஐயாம் நாட் டிஸ்டர்பிங் யூ'' என்று மீண்டும் அவள் குரல் குழையவே அவன் அவளைப் புறக்கணிக்க அஞ்சி அவளோடு சிறிது தொலைவு நடந்து சென்றான்.

இன்னும் அதிகம் பழகாத ஓர் இளம் பெண்ணோடு நடந்து செல்வதில் வார்த்தைகளால் சொல்ல முடியாத மகிழ்ச்சி உள்ளே நிறைந்து கொண்டிருந்தது. 'புன்னகையும் நாணமும் இங்கிதப் பேச்சுக்களுமாக எங்கெல்லாம் ஓர் அந்நியமான இளம் பெண் உன்னோடு நடந்து வருகிறாளோ அங்கெல்லாம் உனது உடனடியான சுவர்க்கங்கள் படைக்கப்படுகின்றன' என்ற அர்த்தமுள்ள ஓர் ஆங்கிலக் கவிதையை நினைத்துக் கொண்டான் பாண்டியன்.

''காலையில் அண்ணாச்சி கடையில் நடந்ததை நீங்கள் தவறாக எடுத்துக் கொண்டிருந்தால் அதற்காக என்னை மன்னித்துவிட வேண்டும்....''

''தவறாக எடுத்துக் கொண்டிருந்தால்தானே?''

''நான் செய்தது அதிகப்பிரசங்கித்தனம் என்று நீங்கள் நினைத்ததாக என் மனத்தில் பட்டது. அதனால்தான் மன்னிப்புக் கேட்கிறேன்.''

''மன்னிப்புக் கேட்கவோ, மன்னிக்கவோ அவசியமில்லாத சின்ன விஷயம் இது......''

''அப்படியில்லை! உங்களுக்கு ரோஷம் ஊட்டி உங்களை எப்படியாவது மாணவர் பேரவைச் செயலாளராகப் போட்டியிடச் செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தில்தான் நான் அதைச் செய்ய நேர்ந்தது......''

''அதிலே தவறில்லை! ஒரு பெண் காரணமாக ஏற்பட்ட ரோஷத்தில்தான் இராமாயணம், பாரதம், சிலப்பதிகாரம் எல்லாமே நடந்திருக்கின்றன. நீங்கள் வளையலைக் கழற்றி எறிந்த அந்த விநாடியில் எனக்கும் கோபம் வந்திருக்கலாம். ஆனால் இப்போது எனக்கு உங்கள்மேல் எந்தக் கோபமும் இல்லை.''

''அப்படியானால் நன்றி. அதோடு ஒரு சின்ன வேண்டுகோள்.....?''

''என்ன வேண்டுகோள்?''

''இந்தப் பேரவைத் தேர்தல் முடிகிறவரை எங்கே போவதென்றாலும் நீங்கள் தனியே போகக் கூடாது. பத்துப் பன்னிரண்டு மாணவர்களோடு சேர்ந்துதான் போக வேண்டும்.''

''ஏன் அப்படி....?''

''அப்படித்தான்! எங்கு பார்த்தாலும் நோட்டீஸ்களில், சுவர்களில்,

எல்லாம் ஒரே சிங்கமும் சிறுத்தையுமாக இருக்கிறதே ?''

'' தவறு அவர்களுடையதில்லை ! மனிதர்களைப் பற்றி அவர்களுக்கு அதிகம் தெரியாது.''

அவள் இதைக் கேட்டு அடக்க முடியாமல் வாய்விட்டுச் சிரித்தாள். அப்போது அவள் முகம் மிக மிக இரசிக்கக் கூடியதாயிருந்தது.

மீண்டும் அவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடை கொடுத்தாள் அவள். பாண்டியன் அவளிடம் சொல்லிக் கொண்டு நண்பர்களோடு போய்ச் சேர்ந்தான். நண்பர்கள் மெல்ல அவனைச் சீண்டினார்கள்:

'' காதல், தேர்தல் இரண்டையும் ஒரே சமயத்தில் சமாளிப்பது கஷ்டம் அப்பனே !''

''நீ சொல்வது தவறு! இந்தக் காதலே தேர்தலை ஒட்டித்தானே பிறந்திருக்கிறது ?'' என்றான் மற்றொரு நண்பன்.

''இந்தப் பெண்ணுக்கு இப்போதே 'டிப்ளோமா இன் டிராமா'வைக் கொடுத்துவிடலாம். மூன்று வருடப் படிப்பு அநாவசியம். சாதாரண விஷயங்களைக்கூட ஒரு 'டிரமடிக் எஃபெக்ட்' கொடுத்து நடத்திவிடுகிறாள் இவள். காலையில் அண்ணாச்சி கடையில் செய்ததும் சரி, இப்போது அண்ணனைத் தனியே கூப்பிட்டதும் சரி, எல்லாம் டிராமாவாக இருக்குது.''

ஈஸ்டர்ன் ஹாஸ்டல் போகிறவரை அவர்கள் வம்பு ஓயாமல் தொடர்ந்தது. பாண்டியனும் அதற்கு மறுமொழி எதுவும் கூறாமல் சிரித்துக் கொண்டே கூடப் போனான். மாணவர்களை இரவு உணவுக்காக மெஸ்ஸுக்கு அழைக்கும் விடுதி மணி ஒலிக்கிற வரை பாண்டியனும் நண்பர்களும் அறை அறையாக ஏறி இறங்கினர். வரவேற்பு உற்சாகமாக இருந்தது. ஓர் அறையில் மாணவ நண்பர்கள் சிலர் டொபின் நூலில் 'சாக்லேட்'களைமுடிந்து ஆரம்போல ஆக்கி அவனுக்கு மாலையாகப் போட்டார்கள். வேறோர் அறையில் இவர்களுக்கு வேண்டிய குறும்புக்கார மாணவன் ஒருவன் பாண்டியனுக்குத் திருஷ்டி கழித்தான்.

தன்னுடைய விடுதி உணவு அறைக்குத் திரும்ப இருந்த பாண்டியனையும் அவனுடன் இருந்த மாணவர்களையும் கிழக்கு விடுதி உணவறையிலேயே தங்கள் விருந்தாளிகளாக வந்து உண வருந்துமாறு அழைத்துச் சென்றார்கள் அவர்கள். ஏதோ படையெடுத்துப் பெரிய ஊர்வலம் போவதுபோல்

## விளையாட்டு நீதிபதிகள்!



மியூனிச் ஒலிம்பிக் பந்தயங்களில், விளையாட்டு வீரர்களின் வெற்றி தோல்விகளைத் தீர்மானிப்பதற்கு அனுபவம் வாய்ந்த 1,200 நீதிபதிகளும் நடுவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்! இவர்களில் நீச்சல் போட்டிக்கு மட்டும் 205 நீதிபதிகளும், நடுவர்களும், பெண்டத்லான் என்ற ஒலிம்பிக் ஓட்டப் பந்தயத்திற்கு 184 நீதிபதிகளும், படகுப் போட்டிக்கு 119 நீதிபதிகளும் நியமிக்கப்படுவார்கள். இந்தப் போட்டிகளை நடத்தவும் விளையாட்டுச் சாதனங்களில் எந்தவித குறைபாடும் இல்லாது கவனித்துக் கொள்ளவும் 3,400 விளையாட்டுத்துறை நிபுணர்கள் அமர்த்தப்படுவார்கள்.

— ஜெர்மன் கோரியர்.

அவர்கள் கூட்டமாக உணவறைக்குச் சென்றார்கள்.

மெஸ்ஸில் பரிமாறிய பீன்ஸ் கறி விறகுபோல் முற்றி யிருந்ததனால் கடிக்கும்போது நார் நாராக வந்தது.

''இந்த ஊரிலிருந்து கீழே உள்ள மூன்று ஜில்லாக்களுக்குத் தளதள என்று அருமையான பீன்ஸ், கேபேஜ், காலிஃப்ளவர் எல்லாம் லாரி லாரியாகப் போகிறது. ஆனால் இதே ஊரில் நம்முடைய ஹாஸ்டலுக்கு மட்டும் எப்படித்தான் இந்த விறகுக்கட்டை பீன்ஸ் கிடைக்கிறதோ, தெரியவில்லை.''

குழுவில் ஒரு மாணவன் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்த மெஸ் சூபர்வைஸர் காதில் விழும்படியே இதைச் சொன்னான். உடனே மற்றொரு மாணவன்,

''உனக்குத் தெரியாதா சமாசாரம்? நல்ல பீன்ஸ் கறி வேண்டுமானால் நீ சீஃப் வார்டன் வீட்டிலோ, வி.சி. வீட்டிலோ போய்ச் சாப்பிட வேண்டும். வெஜிடபிள்ஸ் வந்ததுமே இளசாகப் பொறுக்கி வார்டனுக்கும் வி.சி.க்கும் அனுப்பிவிட்டுத்தானே எல்லாம் நடக்கிறது.....?'' என்றான்.

சிரிப்பலைகள் ஓயச் ,சில விநாடிகள் ஆயின.

மெஸ் சூபர்வைஸர் வாயைத் திறக்கவில்லை. அவர்கள் பேசிய எதையும் காதில் போட்டுக் கொண்டதாகவே காண்பித்துக் கொள்ளவும் இல்லை. எப்படியாவது அவர்கள் சாப்பிட்டுமுடித்து வெளியேறினால் போதும் என்று இருந்தது அவருக்கு. பல்கலைக் கழக நிர்வாகம்



**ஒரு சிறந்த, பெரிய எழுத்தாளர் தமது நாட்டில் இரண்டாவது அரசாங்கத்தைப் போன்றவர். ஆகவேதான் எந்த ஓர் அரசும் மேதையான ஓர் எழுத்தாளரை விரும்பியதில்லை; சர்வ சாதாரண எழுத்தாளர்களையே விரும்பும்.**

**— ஸோல்ஜெனிட்ஸின்**

அவர்களுக்குமுன் அவரை நிமிர்ந்து பார்க்கும்படி வைத்திருக்கவில்லை. அவர்கள் பேசிய ஊழல்கள் அங்கே நடைபெறாமல் இருந்தாலல்லவா அவர் நின்று அவர்களுக்குப் பதில் கூற முடியும்? அப்படி எல்லாம் நடப்பது அவருக்கே தெரியும். அப்புறம் பதில் பேச என்ன இருக்கிறது? சமூக, தார்மீக, நிர்வாகத் துறைகளில் இளைஞர்களிடம் 'ஆண்டி—எஸ்டாபிளிஷ்மெண்ட்' மனப்பான்மை வளருவதற்குக் காரணமே 'எஸ்டாபிளிஷ்மெண்ட்'களில் மேலெழுந்தவாரியாகப் பார்த்தால்கூடத் தெரியும் ஊழல்கள்தான். மரக்கட்டையில் நெருப்புப் பற்றுவதைவிடப் பஞ்சில் விரைந்து நெருப்புப்பற்றிவிடும். இளைய சமுதாயத்தினரும், மாணவர்களும்பஞ்சுபோலிருக்கிறார்கள். வயதானவர்கள் எதிர்க்கத் தயங்கும் அநீதிகளை அவர்கள் உடனே எதிர்க்கிறார்கள். நியாய நெருப்பு உடனே அவர்களைப் பற்றிக் கொதிக்கச் செய்கிறது. வயதானவர்கள் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என ஒத்திப் போடுவதை இளைஞர்கள் இன்றே செய்து விடத் துடிக்கிறார்கள். மூத்தவர்கள் சகித்துக் கொள்ளப் பழகிவிட்ட ஊழல்களை இளைஞர்கள் முழு வேகத்தோடு எதிர்க்கும் காலம் இது என்பது மெஸ் சூபர்வைசருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. பல்கலைக் கழக எல்லையிலே அங்கங்கே நடக்கும் நிர்வாக ஊழல்களைச் சம்பந்தப்பட்ட பல முதியவர்கள் சகிப்புத் தன்மையோடு விட்டு விடுவதைப் பார்த்தபோது, 'சகிப்புத் தன்மை' என்பதே ஒரு பெரிய கோழைத்தனமாகியிருப்பதை அவர் கண்டிருந்தார். அந்த சூபர்வைஸரைப் பாண்டியனுக்கு நன்றாகத் தெரியும். உணவை முடித்துக் கொண்டு போகும்போது அவன் அவரை நோக்கிப் புன்னகை புரிந்தான். அவரும் அமைதியாகப் பதிலுக்கு முகம் மலர்ந்தார். அவன் எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் நண்பர்கள் அவனை அறைவரை கொண்டுவந்து விட்டுச் சென்றார்கள்.

''நமக்கு வேண்டாதவர்களில் விவேகம் உள்ளவர்கள் அதிகம் இல்லாவிட்டாலும் அடியாட்கள் நிறைய இருக்கிறார்கள். அதனால் நீ கவனமாக இருக்க வேண்டும்'' என்று போகும் போது ஒரு நண்பன் பல்கலைக் கழகப் பூங்காவில் சந்தித்த சமயத்தில் அவள் எச்சரித்தது போலவே அவனை எச்சரித்துவிட்டுப் போனான். அந்த எச்சரிக்கை அவளை நினைவூட்டிவிட்டது.

அன்றென்னவோ மாலையிலிருந்தே குளிர் அதிகமாக இருந்தது. அறைக் கதவைத் தாழிட்டுக் கொண்டு பாண்டியன் ஸ்வெட்டரை எடுப்பதற்காகப் பெட்டியைத் திறந்தான். இரண்டாண்டுகளுக்குமுன் அந்த ஸ்வெட்டரை வாங்கிய மாலை வேளையும், அறைக்குத் திரும்பியதும் அன்பரசன் கோஷ்டியிடம் சிக்கி அவஸ்தைப்பட்டதும் ஞாபகம் வந்தன.

ஸ்வெட்டரைப் போட்டுக் கொண்டு ஜன்னல்களை அடைக்கப் போனபோது பின்புறம் தொலைவில் மலை உச்சியில் எங்கோ நெருப்பு எரிவது அழகாகத் தெரிந்தது. மலையின் நெற்றியில் யாரோ தாறுமாறாகக் குங்குமம் வைத்துவிட்ட மாதிரி அந்தத் தீ எரிந்து கொண்டிருந்தது. மலையின் நெற்றியைப் பற்றிய கற்பனையை ஒட்டி அந்தப் பெண் கண்ணுக்கினியாளின் அழகிய நெற்றி ஞாபகம் வந்தது, அவனுக்கு. பேரவைச் செயலாளர் பதவியை வெற்றி கொள்ளுமுன் ஓர் அழகிய பெண்ணின் இதயத்தைத் தான் வெற்றி கொண்டிருப்பது மெல்ல மெல்ல அவனுக்குப் புரிந்து கொண்டிருந்தது. தன்னைப் பற்றி நினைக்க, உருக, கவலைப்பட ஒரு பெண் இருக்கிறாள் என்ற எண்ணம் அவனைப் பூரிக்கச் செய்தது. 'தேர்தல் முடிகிறவரை தனியே போகாதீர்கள்' என்று அவள் அக்கறையாக எச்சரித்ததை எண்ணியபோது அவளோடு பல ஆண்டுகள் பழகிவிட்டது போல் ஒரு களிவை அவன் அடைந்தான். 'புன்னகையும் நாணமும் இங்கிதப் பேச்சுக்களுமாக எங்கெல்லாம் ஓர் அந்நியமான இளம் பெண் உன்னோடு நடந்து வருகிறாளோ அங்கெல்லாம் உனது சொர்க்கங்கள்...' என்ற நினைவோடுதான் அவன் தூங்கப் போனான்.

(தொடரும்)



பார்லே க்ளுகோ–
போஷாக்கு நிரம்பிய
அதிக ருசியுள்ள
பிஸ்கெட்
எப்பொழுதும்
இவை அடங்கியது–
வைட்டமின்கள் ஏ-டி-பி1-பி2-
கால்ஷியம்-ப்ரோடீன், பால்,
கோதுமை, சர்க்கரை,
க்ளுகோஸ்
PARLE
BISCUITS
Gluco
பார்லே க்ளுகோ பிஸ்கெட்
புசித்து வளர்வதே பேரானந்தம்!
இந்தியாவின் மிக அதிகமாக விற்பனையாகும் பிஸ்கெட்டுகள் பார்லே க்ளுகோ
everest/306g/PP tan


# தலைசிறந்த புராதனப் படைப்பு ஒன்றும்...
# நவீன கட்டிடம் ஒன்றும்!


## இவற்றிற்குள் பொதுவாக இருப்பது என்ன?
## வலுவான கட்டமைப்பு

நமது முன்னோர்கள், தமது கலைப் படைப்புகள் காலத்தை வென்று பலநூற்றாண்டுகள் நிலைத்திருப்பதை உறுதி செய்வதற்கான தமது ரகசியங்களைப் போற்றிக்காத்தனர், இன்று விஞ்ஞான அறிவும் தொழில் நுட்ப வழி வகையறிவும் ஏஸிஸி சிமெண்டிற்கு காலத்தைவெல்லும் அதே பண்புகளைத் தருகின்றன. வீடு, தொழிற்சாலை, அல்லது பலமாடி வாணிபக் கட்டிடம் எதுவானாலும், எந்த சீதோஷ்ண நிலையிலும்—பல்லாண்டுகளுக்கு வலுவான கட்டமைப்பிற்கு உறுதியான உத்தரவாதம் தருகிறது ஏஸிஸி சிமெண்ட் கொண்டு செய்த கான்க்ரீட்.

**ஏஸிஸி**

**தரம்சிறந்த சிமெண்டிற்கு நீங்கள் பெறும் உத்தரவாதம்**





SISTA'S CMI-445A TM தி அஸோஸியேடெட் சிமெண்ட் கம்பெனிஸ் லிமிடெட்

தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிட்




## 14. பயங்கர நினைவு

அன்று பிற்பகலில் ராகவன் சீதாவைப் பார்த்து, ''அப்படியானால், உனக்கு நிஜமாகவே தலையை வலிக்கிறதா?'' என்று கேட்டான்.

''பின்னே, பொய்யாகவா தலையை வலிக்கும்? இது என்ன கேள்வி?'' என்றாள் சீதா.

''சரி, நான் போய் வருகிறேன்!'' என்று ராகவன் கிளம்பினான்.

''எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டாள் சீதா.

''புறப்படுகிறபோது, 'எங்கே போகிறீர்கள்?' என்று கேட்கக் கூடாது என்று உனக்குத் தெரியாதா? வேறு எங்கே போவேன்? ஏரிக்குத்தான்!''

''என்னை விட்டுவிட்டுத் தனியாகவா போவீர்கள்?''

''தனியாக என்ன? தாரிணியும் அவளுடைய தோழியுந்தான் வருவதாகச் சொல்லியிருக்கிறார்களே?''

''என்னை இங்கே ஒண்டியாக விட்டுவிட்டு அவர்களை மட்டும் அழைத்துக் கொண்டு போவீர்களா?''

''இங்கே நீ ஒண்டியாக இருப்பானேன்? இது என்ன காடா? வீடுதானே? தாமாவும் பாமாவும் உன்னைப் பார்த்துக் கொள்வார்கள்.''

''அவர்களோடு என்னால் பேசிக் கொண்டிருக்க முடியாது.''

''அப்படியானால் பேசாமல் படுக்கையில் படுத்துக் கொண்டிரு!''

''எப்படியாவது நீங்கள் போய்த்தான் தீர வேண்டுமா?''

''போய்த்தான் தீர வேண்டும். போட்ட திட்டத்தை உன்னுடைய தலைவலிக்காக மாற்ற முடியாது.''

''நான் செத்துப் போனால் அப்போதாவது போட்ட திட்டத்தை மாற்றுவீர்களா?''

''செத்துப் போய்ப் பார்! அப்போது தெரிகிறது!''

சீதாவுக்கு அழுகையும் ஆத்திரமுமாக வந்தது. ஆயினும் அப்போது ராகவனோடு தகராறு செய்வதில் பயனில்லை என்று உணர்ந்தாள்.

''பெண் ஜன்மம் எடுத்தாகி விட்டது. தலைவலி என்று சொன்னால் என்ன பிரயோஜனம்? இங்கே தனியாகக் கிடந்து சாவதைக் காட்டிலும் உங்களுடன் வந்தே பிராணனை விடுகிறேன்!'' என்று சொன்னாள்.

''விடுகிற பிராணனைச் சீக்கிரமாக விட்டுத் தொலைக்கலாம். புறப்படு உடனே!'' என்றான் ராகவன்.

காரில் போகும்போது இருவரும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. சீதா மட்டும் அடிக்கடி கைக் குட்டையால் தன் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

தாரிணியும் நிருபமாவும் இறங்கியிருந்த ஜாகையின் வாசலில் வண்டி நின்றது. மேல் மாடியின் முகப்பில் நிருபமா வந்து நின்று, கையைத் தட்டி அழைத்து, ''கொஞ்சம் இப்படி வந்து உட்காருங்கள். தாரிணிக்கு இன்னும் பத்து நிமிஷம் ஆகும்'' என்று சொன்னாள்.

''நான் வரவில்லை; காரிலேயே இருக்கிறேன். எப்போதாவது நான் புறப்பட ஒரு நிமிஷம் தாமதமானால் பிரமாத கோபம் வந்துவிடும். இப்போது மட்டும்?'' என்றாள் சீதா.

''ஏதாவது உளறிக் கொண்டிராதே! தெரியுமா?'' என்று ராகவன் கோபமாகச் சொல்லிவிட்டுக் காரிலிருந்து இறங்கி வீட்டுக்குள் சென்றான்.

சீதாவுக்குக் காரில் உட்கார்ந்திருந்த ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமாக இருந்தது. அத்தகைய பல நிமிஷங்களுக்குப் பிறகு, மேலே கலகலவென்று சிரிப்புச் சத்தம் கேட்டது. அந்தச் சிரிப்புச் சத்தம் சீதாவின் நெஞ்சில் நெருப்பை மூட்டியது. தலையைச் சிறிது காருக்கு வெளியில் நீட்டி மேலே அண்ணாந்து பார்த்தாள். சிறிது நேரம் வரையில் பேச்சுச் சத்தமும் சிரிப்புச் சத்தமும் கேட்டதே தவிர, கண்ணுக்கு ஒன்றும் தெரியவில்லை. சட்டென்று பலகணிக்கருகே ஒரு காட்சி தென்பட்டது. ராகவன் ஏதோ ஒரு கவரைக் கையில் பிடித்துக் கொண்டு



தாரிணியிடம் அதைக் கொடுக்கப் போனான். அவள் அதைப் பெற்றுக் கொள்ள மறுத்தாள். ராகவன் சட்டென்று அவளுடைய கரத்தைப் பிடித்துப் பலாத்காரமாக அந்தக் கவரைத் திணிக்க முயன்றான். அப்புறம் அதைப் பெற்றுக் கொள்ளாமல் தாரிணி தன்னை விடுவித்துக் கொண்டு ஓடினாள். ராகவன் அவளைத் தொடர்ந்து பின்னால் ஓடினான்.

அரை நிமிஷ நேரமே நீடித்திருந்த இந்தக் காட்சி சீதாவின் உள்ளமாகிற காமிராவில் படமாகப் பதிந்துவிட்டது. சிறிது நேரம் சிந்தனா சக்தியையே இழந்திருந்தாள். பின்னர் ஏதேதோ சந்தேகங்கள் உதித்து மனத்தை அரிக்கத் தொடங்கின. உடம்பெல்லாம் வெடவெட வென்று நடுங்கும்படியாக மனத்தில் ஆத்திரம் பொங்கியது.

சிறிது நேரத்துக்கெல்லாம் ராகவனும் தாரிணியும் மட்டும் கீழிறங்கி வந்தார்கள். தாரிணியைப் பின்னால் சீதாவுக்குப் பக்கத்தில் உட்கார வைத்துவிட்டு ராகவன் காரின் முன்புறத்தில் அமர்ந்தான். நிருபமா பின்னால் வருவாள் என்று சீதா நினைத்தாள். ஆனால் அவள் வராமலே கார் புறப்பட்டதைக் கண்டதும் துணுக்குற்றாள். அதைப் பற்றி விசாரிக்க விரும்பினாலும் பேசுவதற்கு நா எழவில்லை.

தாரிணி சீதாவின் முகத் தோற்றத்தைப் பார்த்துவிட்டு, ''ஏன் இப்படி ஒருமாதிரியாயிருக்கிறாய், சீதா! உடம்பு ஏதாவது சரிப்படவில்லையா, என்ன?'' என்று கேட்டாள்.

''ஆமாம்; காலையிலிருந்து தலைவலி'' என்று சீதா முணுமுணுத்தாள்.

''அடாடா! ரொம்பத் தலைவலி போலிருக்கிறதே! குரல்கூட எப்படியோ ஆகிவிட்டதே! இதோடு வெளியில் புறப்படாவிட்டால் என்ன? நாளைக்குப் போயிருக்கலாமே? ஏரி எங்கே ஓடியா போகிறது!'' என்று தாரிணி கூறியது சீதாவின் மனத்தில் எரிகிற தீயில் எண்ணெய் விட்டது போன்ற பலனை அளித்தது.

''வரவில்லையென்று சொன்னால் கேட்டால்தானே!'' என்றாள்.

சற்றுப் பொறுத்துத் தாரிணி, ''உடம்பு சரியில்லை என்றுதான் நிருபமா கூட வராமலிருந்து விட்டாள். இப்போதுகூட மோசம் போய்விடவில்லை. திரும்பிப் போய்விடலாம்! என்ன மிஸ்டர் ராகவன்!'' என்றாள்.

அதற்கு ராகவன், ''அவ்வளவு ஒன்றும் அவளுக்குப் பிரமாதமான தலைவலி இல்லை. ஏரியில் படகிலே போனால் தலைவலி தீர்ந்துவிடும்!'' என்றான்.

* * *

நீல வானத்திலிருந்து ஒரு பெரும் பகுதியை எடுத்துப் பூமியில் வைத்தது போலிருந்தது ரஜனிபூர் ஏரி.

அதன் இரு பக்கங்களில் இரண்டு மலைத் தொடர்கள் சொர்க்கத்தைப் பாதுகாக்கும் மதில் சுவர்களைப் போல் உயர்ந்து நின்றன.

மற்ற இருபுறங்களில் பசுமையான மரங்கள் அழகிய நீல வர்ணச் சித்திரத்துக்குப் பச்சை வர்ணச் சட்டங்கள் போட்டது போல் நின்றன.

அங்கே நள்ளிரவின் நிசப்தம் நிலவியது. வைகறையின் சலனமற்ற சாந்தம் குடிகொண்டிருந்தது. மாலை நேரத்தின் மனோகரம் பரவியிருந்தது.

அந்த விஸ்தாரமான நீல நிற நீர்ப் பரப்பைப் பார்த்தால் ஞானிகள் எங்கும்

நிறைந்த பரம்பொருளைத் தங்களுக்குள்ளே காணும்போது அடையும் ஆனந்தத்தைப் பாமர ஜனங்களும் அடைவார்கள்.

காதலர்கள் தங்களுடைய காதலிகளின் கண்களுக்குள்ளே தங்கள் பிரதிபிம்பத்தைக் காணும்போது அடையும் களிப்பை அந்த ஏரி நீரில் தங்கள் உருவத்தைப் பார்க்கும் எவரும் பெறுவார்கள்.

முதன் முதலில் பெற்றெடுத்த குழந்தையின் இதழ்களில் இலேசாக அரும்பும் புன்னகையைப் பார்க்கும்போது அன்னைக்கு உண்டாகும் மகிழ்ச்சி அந்த ஏரி நீரின் சிற்றலைகள் விரியும் காட்சியைப் பார்க்கும் அனைவருக்கும் உண்டாகும்.

தும்பை மலரைப் போல் வெண்ணிறத்துடன் விளங்கிய ஆயிரக்கணக்கான பறவைகள் அந்த ஏரி நீரின் மீது கூட்டங் கூட்டமாகப் பறந்து செல்லும் காட்சியை ஒரு முறை பார்த்தவர்கள் என்றென்றைக்கும் மறக்க மாட்டார்கள்.

அத்தகைய ஏரிக்கரையில் வந்து ராகவன், சீதா, தாரிணி மூவரும் காரிலிருந்து இறங்கினார்கள்.

ஏரியின் காட்சியைப் பார்த்துவிட்டுத் தாரிணி, "ஆகா! என்ன அழகு! என்ன அழகு! நானும் இயற்கைக் காட்சிகள் எவ்வளவோ பார்த்திருக்கிறேன். இந்த மாதிரி பார்த்த இல்லை!" என்றாள்.

"அதனால்தான் உங்கள் இரண்டு பேரையும் இவ்வளவு வற்புறுத்தி அழைத்து வந்தேன். ஸ்விட்ஸர்லாந்தில் உள்ள உலகப் பிரசித்தமான ஏரிகளை இதன் காலிலே கட்டி அடிக்க வேண்டும். ஆயினும் இதைப் பார்ப்பதற்கு உங்கள் இருவரையும் அழைத்து வருவதற்குள் என் பிராணனில் பாதி போய் விட்டது!" என்றான் ராகவன்.

சீதா மட்டும் ஒன்றும் சொல்லாமல் ஏரியை நோக்கிக் கொண்டிருந்தாள். அவள் முகத்திலிருந்த கடுகடுப்பைப் பார்த்துவிட்டுத் தாரிணி, "ஏரி என்னமோ அழகாய்த்தானிருக்கிறது. ஆனால் இரண்டு பேராக வந்திருந்தால் இன்னும் நன்றாக இதைப் பார்த்து அநுபவிக்கலாம். அல்லது நாலுபேராக வந்திருக்க வேண்டும்!" என்று கூறினாள்.

அவள் மனத்தில் நினைத்துச் சொன்னது, சீதாவும் ராகவனும் மட்டும் வந்திருக்கலாம் என்று.



ஆனால் சீதா அதைத் தப்பர்த்தம் செய்து கொண்டு, "நான் வரவில்லை என்று ஆன மட்டும் சொன்னேன்; கேட்டால்தானே?" என்று முணுமுணுத்து விட்டு ஏரிக் கரையை நோக்கி விடுவிடு என்று நடந்தாள். கரை ஓரமிருந்த மரத்தின் அடியில் உட்கார்ந்து ஏரியைப் பார்க்கலானாள். ஆனால் அவளுடைய கண்கள் ஏரியைப் பார்த்தனவே தவிர, மனம் வேறு எங்கேயோ சஞ்சரித்துக் கொண்டிருந்தது. ஏரியின் குளிர்ந்த நீரில் அளாவிக் கொண்டு வந்து உலாவிய காற்று அவளுடைய உடம்பெல்லாம் அக்னி ஜ்வாலையை மூட்டியது.

அவள் விடுவிடு என்று நடந்து போனதைக் கவனித்த தாரிணி, ராகவனைப் பார்த்து, "உங்கள் மனைவி என்ன இன்றைக்கு இப்படி இருக்கிறாளே? இது தலைவலி மட்டும் அல்ல; உள்ளக் கோளாறும் ஏதோ இருக்கும் போலிருக்கிறது" என்று சொன்னாள்.

"இந்த மாதிரி செய்வாள் என்று தெரிந்திருந்தால் அவளை அழைத்து வந்திருக்கவே மாட்டேன்" என்றான் ராகவன்.

"பெண்களின் மனத்தை அறியும் சக்தி உங்களுக்கு இல்லவே இல்லை என்று தெரிகிறது. உங்கள் மனைவிக்கு உங்களுடன் தனியாக வந்து உல்லாசமாக இருந்துவிட்டுப் போக வேண்டும் என்று எண்ணம்!"

"அவளைத் தனியாக அழைத்துக் கொண்டு வந்து என்ன செய்கிறது? அவளோடு எந்த விஷயத்தைப் பற்றிப் பேசுகிறது? எங்களிருவருக்கும் பொதுவான விஷயம் எதுவும் இல்லை. அவளுடைய பேச்சு என் மனத்தில் ஏறவே ஏறாது. நான் பேசுகிற விஷயம் அவளுக்குப் புரியாது."

"அது யாருடைய தப்பு? அவளை நீங்கள் படிப்பித்து உங்கள் நிலைக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் உங்களுடன் சமதையான படிப்பில்லாதவளை மணம் செய்து கொண்டிருக்கக் கூடாது. அப்போது தப்புச் செய்துவிட்டு இப்போது இப்படிப் பேசுவதில் என்ன பயன்?"

"தப்பு என் பேரில் இல்லை, தாரிணி! உங்கள் பேரில்தான்! உங்களால் வந்த வினைதான் இதெல்லாம்!"

"வெகு அழகு! இப்படியெல்லாம் பேசாதீர்கள். உங்கள் மனைவி உட்கார்ந்திருக்கும் இடத்துக்கு நாமும் போகலாம், வாருங்கள்! இல்லாவிட்டால் அவளுடைய 'கோளாறு' இன்னும் அதிகமாகி விடும்."

"அதிகமானால் ஆகட்டும்; அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை" என்றான் ராகவன். ஆயினும் தாரிணி போகத் தொடங்கியதும் அவளைப் பின்பற்றி அவனும் போனான். இருவரும் ஏரி ஓரம் சென்று சீதாவின் பக்கத்தில் உட்கார்ந்தார்கள்.

ஏரிக் கரையில் படகு ஒன்றும் இல்லை. ஆனால் ஏரியில் சில படகுகள் மிதந்து சென்று கொண்டிருந்தன. அவை ஏரியின் நடுவில் இருந்த சோலை சூழ்ந்த ஒரு சிறு தீவை நோக்கிப்போய்க் கொண்டிருந்தன. அந்தத் தீவின் உயரமான மரங்களின் மத்தியில் ஒரு பெரிய மாளிகை காணப்பட்டது.

"அந்த மாளிகை யாருடையது?" என்று தாரிணி கேட்டாள்.

"சரித்திர நிபுணராகிய தங்களுக்கு இது தெரியாதா, என்ன? பழைய சரித்திரத்தைத்தான் ஆராய்வீர்கள்போல் இருக்கிறது. இந்த சமஸ்தான ராஜாவின் அரண்மனைதான் இது. காலஞ்சென்ற பெரிய ராஜா உயிரோடிருந்த போது இந்த மாளிகையில் அடிக்கடி வசிப்பாராம். அவருடைய உல்லாசக் கேளிக்கைகள் எல்லாம் இதிலேதான் நடக்குமாம்! உங்களுக்குத் தெரியுமோ இல்லையோ? ஐந்தாறு வருஷங்களுக்கு முன்னால் இந்த நாட்டின் ராஜாவைக் கொல்வதற்கு பம்பாயில் ஒரு முயற்சி நடந்தது. கொல்ல முயன்றவள் ஒரு ஸ்திரீ. பத்திரிகைகளிலேகூடப் பிரமாதப் பட்டது. ஆனால் அந்த முயற்சி பலிக்கவில்லை. கொலை செய்ய முயன்ற ஸ்திரீ இரண்டு வருடம் கடுங்காவல் தண்டனை அடைந்ததுதான் லாபம். கத்திக் காயம்கூடப் படாமல் அப்போது ராஜா தப்பிவிட்டார். இரண்டு வருஷங்களுக்கு முன்பு அதிகக் குடி காரணமாகச் செத்தொழிந்தார்."

"இப்போதுள்ள ராஜா யார்? அவருடைய குணம் எப்படி?" என்று தாரிணி கேட்டாள்.

"இப்போதுள்ள ராஜா சிறு பையன். டேராடூனில் படிக்கிறான். நாம் இறங்கியிருக்கிறோமே, அந்த வீட்டில் வசிக்கும் திவான் ஆதிவராகாச்சாரியார் இப்போது ராஜ்ய நிர்வாகம் செய்து வருகிறார்."

"அப்படியானால், இப்போது ராஜ்யம் நன்றாக நடந்து வருகிறதாக்கும்."

"ஏதோ சுமாராய் நடந்துவருகிறது. ஆனால் பழைய ராஜாவின் துர்மந்திரியாயிருந்த விநாயகராவ் மதோங்கர் இன்னும் உயிரோடிருக்கிறான். அரண்மனையிலும் சரி, சமஸ்தானத்திலும் சரி, அவனுடைய அட்டூழியங்கள் அதிகம். திவானும் அவன் விஷயத்தில்

பார்க் - டேவிஸ்

# மூவகை ஆற்றலுள்ள
# நிகோ சோப்

## மற்றெந்த சோப்பையும் விட உங்கள் சருமத்திற்கு மிகுந்த பாதுகாப்பளிக்கிறது

**1** நிகோ சருமக் கிருமிகளைக் கொல்லுகிறது

**2** நிகோ உடல் துர்நாற்றத்தைப் போக்குகிறது

**3** நிகோ உடலைத் துப்புரவாக்கிப் பாது காப்பளிக்கிறது

நீங்கள் ஆரோக்கியமான சருமத்தைப் பெற, நாள்தோறும் நிகோ சோப் தேய்த்துக் குளியுங்கள். நிகோவின் நச்சுநாச நுரைவளம் சரும நோய்க் கிருமிகளைக் கொன்று, உங்கள் சருமத்திற்கு ஆரோக்கியமளிக்கிறது. நிகோவிலுள்ள மருந்துப் பொருள்கள் வியர்வையினால் ஏற்படும் துர் நாற்றத்தைப் போக்குகின்றன. நிகோ சின்னஞ்சிறிய சருமத் தொற்றுகளையும் எதிர்த்துப் போராடி, சருமத்துக்கு மென்மையளிக்கிறது. அதோடு மினுமினுப்பும் புதுமையும் தருகிறது. இது மட்டுமல்ல:

முகப் பருக்கள் மற்றும் வேர்க்குருவிலிருந்தும் உங்கள் சருமத்துக்குப் பாதுகாப்பு தருகிறது நிகோ. ஷாம்புவாகக்கூட இதைப் பயன்படுத்தலாம். இதனால் பொடுகு விழாமல் தடுக்கிறது நிகோ. எனவே, இன்று முதலே, நிகோ சோப் உபயோகிக்கத் தொடங்குங்கள்.

நிகோ பழக்கத்தைக் கடைப்பிடிப்பீர். அது உங்கள் சருமத்திற்கு அவசியம்.

TRIPLE ACTION


**NEKO®**

The Original Antiseptic Soap




® Regd. Trade Mark. Regd. Users—Parke Davis (India) Ltd., Bombay-72 AS.

JAISONS 293




ஆண்மை—
அடக்கியாளும்,
ஆர்வமூட்டும்,
அலைபாயும்,
அதிரடிக்கும்.
ஆண்மையின்
பன்முகப்
பண்புகளைப்
படித்தறிந்த படைப்பு
'டெரோஸெல்'
ஷர்ட்டிங்!

டெரோஸெல்®

'டெரோஸெல்' என்றொரு திருச்சொல்—தரிப்பவனை
மன்னனுக்கும் தாரக மந்திரம்! மபத்லால் 'டெரோஸெல்'
ஷர்ட்டிங்—எழிலாடும் வண்ணங்களில், இளஞ் சாயல்களில்,
திசையெட்டும் வென்றிட்ட டிசைன்களில் வருகுது.
ஒப்பிலா ஆடவ·மாமணிகளுக்கு உறவுசொல்லும் ஷர்ட்டிங்!
உயர்தரக் காட்டன் மற்றும் போலியெஸ்டர் இழைகலந்த
பழுதில்லா நெசவு!

**மபத்லால் க்ரூப்**

AIYARS-M.345 TM

கொஞ்சம் ஜாக்கிரதையாயிருந்து வருகிறார். இல்லாவிட்டால், ஏதாவது இல்லாதது பொல்லாததைக் கிளப்பி விட்டுத் திவானுடைய வேலைக்கே உலை வைத்துவிடுவான்!''

ஆரம்பத்தில் வேறு கவனமாக இருந்த சீதா, பம்பாயில் ரஜனிபூர் ராஜாவைக் கொல்லும் முயற்சி நடந்ததைப் பற்றிக் காதில் விழுந்ததும், அவர்களுடைய பேச்சில் கவனம் செலுத்தலானாள். ராகவன் மதோங்கரைப் பற்றிச் சொல்லி முடித்ததும், ''பம்பாயில் இந்த ஊர் ராஜாவைக் குத்திக் கொல்ல முயன்ற ஸ்திரீ யார்?'' என்று கேட்டாள்.

''ஓகோ! நீகூடக் கவனித்துக் கொண்டிருக்கிறாயா? அந்த ஸ்திரீ யாரோ தெரியாது. சிலர் அவளை ஹிந்து ஸ்திரீ என்றார்கள். சிலர் அவளை முஸ்லிம் ஸ்திரீ என்றார்கள். ஒரு சிலர் அவளைத் தென்னாட்டைச் சேர்ந்தவள் என்றும் சொன்னார்கள். யாராயிருந்தால் என்ன? பெரிய ராட்சஸியாயிருக்க வேண்டும்! பட்டப் பகலில் கொலை செய்ய முயன்றதற்கு அவளுக்கு எத்தனை தைரியம் இருந்திருக்க வேண்டும்?'' என்றான் ராகவன்.

''புருஷர்கள் மட்டும் என்ன அக்கிரமம் வேணுமானாலும் செய்யலாம்; ஸ்திரீகள் அதற்குப் பழி வாங்க முயலுவதுதான் பிசகோ?'' என்றாள் சீதா.

''ஏது? ஏது? கொலைகாரிக்கு ரொம்பப் பரிந்து பேசுகிறாயே? இப்படிப் பேச எங்கே கற்றுக் கொண்டாய்?'' என்றான் ராகவன்.

தாரிணி குறுக்கிட்டு, ''அந்த ஸ்திரீ பிறகு என்ன ஆனாளாம்? தெரியுமா?'' என்று கேட்டாள். இத்தனை நேரம் மௌனமாயிருந்த அவளுடைய குரலில் இப்போது அதிசயமான மாறுதல் காணப்பட்டது. முன்னே சீதாவின் குரல் நடுங்கியது போல் இப்போது தாரிணியின் குரலும் நடுங்கிற்று.

ஆனால் ராகவன் அதைக் கவனியாமல், ''யாருக்குத் தெரியும்? இரண்டு வருஷம் சிறையில் இருந்துவிட்டு வெளி வந்த பிறகு எங்கே போய்க் கெட்டலைகிறாளோ? அதைப் பற்றி நமக்கென்ன கவலை!'' என்றான்.

சீதாவின் மனத்தில் பம்பாயை விட்டுத் தான் ராஜம்பேட்டைக்குப் புறப்படுவதற்குச் சில நாட்கள் முன்பு கையில் கத்தியுடனேயே ஒரு ஸ்திரீ வந்திருந்த சம்பவமும், ரயில் ஏறும்போது பத்திரிகையில் படித்தறிந்த விஷயமும், அப்போது தன் மனத்தில் ஏற்பட்ட சந்தேகமும், இப்போது தில்லிக்கு வந்த பிறகு அன்றொரு நாள் சாலை முனையில் அதே ஸ்திரீயைக் கையில் கத்தியுடன் பார்த்த விஷயமும் நினைவு வந்தன. அதையெல்லாம் பற்றிப் பிரஸ்தாபியாமல் வாயை மூடிக் கொண்டிருந்தாள். அவளுடைய மனம் அந்த ஸ்திரீ வைத்திருந்த கத்தியின் மேல் அடிக்கடி சென்றது. அவள் இந்த ஊர் ராஜாவைக் குத்திக் கொல்ல முயன்றதற்குத் தக்க காரணம் இருந்திருக்க வேண்டும். என்ன அக்கிரமம் செய்தானோ, என்னமோ? ஆனால் புருஷர்கள் மட்டுந்தானா அக்கிரமம் செய்கிறார்கள்? ஸ்திரீகளுந்தான் செய்கிறார்கள். உதாரணமாக இந்தத் தாரிணியைப் போன்ற வெட்கங்கெட்ட ஸ்திரீயைப் பற்றி என்ன சொல்வது? இப்படிப்பட்டவர்களைக் குத்திக் கொன்றால்கூடப் பாதகம் இல்லை. தன்னிடம் மட்டும் இப்போது ஒரு கத்தி இருந்தால்?....

தன்னுடைய எண்ணம் எவ்வளவு பயங்கரமான காரியத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்த சீதா திடுக்கிட்டுத் தாரிணியின் முகத்தை நோக்கினாள். அவளுடைய நெற்றியிலிருந்த இரத்தக் காயம் கண்ணில் பட்டது. ஆகா; நல்ல வேலை செய்தான் சூரியா! அவன் மட்டும் இப்போது இங்கிருந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்? தன்னைவிட்டு ஒரு நிமிஷ நேரமும் அகலாமல் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருப்பான் அல்லவா? அவன் இங்கே இருந்தால், இவர்கள் இருவரையும் நாம் இலட்சியம் செய்ய வேண்டியதேயில்லையே!

இந்தச் சமயத்தில் படகு ஒன்று கரையை அணுகியது. படகில் ஏறிக் கொண்டு வந்தவர்கள் கரையில் இறங்கினார்கள்.

''இந்தப் படகை அமர்த்தட்டுமா? ஏரியில் போய் வரலாமா?'' என்று ராகவன் கேட்டான்.

தாரிணி, ''நான் தயார்; போகலாம். ஆனால் உங்களுடைய மனைவி என்ன சொல்கிறாளோ?'' என்றாள்.

''அவளும்தானே வருகிறாள். அப்படி அவள் வர இஷ்டப்படாவிட்டால் இங்கேயே கரையில் இருக்கட்டும். நாம் இருவரும் போய் வரலாம்.''

இப்படிச் சொல்லிவிட்டு ராகவன் வாடகைப் படகு அமர்த்திக் கொண்டு வருவதற்காகச் சென்றான்.

• • •

ராகவன் அப்பாலே சென்றதும், தாரிணி சீதாவைப் பார்த்து, ''சீதா! உனக்கு ஏதாவது என் பேரில் கோபமா?

ஒரு மாதிரியா யிருக்கிறாயே ?'' என்று கேட்டாள்.

''ஒரு மாதிரி என்ன, ஒரு மாதிரி ? எப்போதும் இந்த லட்சணந்தான் !'' என்று சீதா முணுமுணுத்தாள்.

''மறுபடியும் கோபமாகவே பேசுகிறாயே ! நான் உன்னோடு சிநேகமாயிருக்க விரும்புகிறேன், சீதா !'' என்றாள் தாரிணி.

''எதற்காக? நீயும் நானும் முன்பின் பார்த்ததுகூட இல்லையே?'' என்று சீதா சொன்னாள்.

இதற்குப் பதில் சொல்ல முடியாமல் தாரிணி திகைத்துப் போனாள்.

சற்றுப் பொறுத்து, ''சீதா ! உன் கழுத்தில் ஒரு ரத்தின ஹாரம் போட்டிருக்கிறாயே ? அது ஏது?'' என்று தாரிணி கேட்டாள்.

சீதா திடுக்கிட்டாள். அவள் மனத்தில் என்னவெல்லாமோ உருத் தெரியாத சந்தேகங்கள் உதித்தன. இந்தப் பாதகி எந்த விதத்திலாவது நம்மைக் கெடுத்துவிடுவது என்று தீர்மானித்திருக்கிறாள் போலிருக்கிறது. ஒருவேளை நம் பேரில் திருட்டுக் குற்றம் சாட்டப் போகிறாளோ, என்னமோ? ஐயோ ! இந்த நேரத்தில் சூரியா இங்கு இல்லாமற் போய்விட்டானே !

தாரிணி மறுபடியும், ''சீதா ! நான் கேட்டது உன் காதில் விழவில்லையா ? கழுத்தில் ஒரு ரத்தினஹாரம் போட்டுக் கொண்டிருக்கிறாயே, அது ஏது என்று கேட்டேன்!'' என்றாள்.

''என் அம்மா எனக்குக் கொடுத்தாள் ! நீ எதற்காகக் கேட்கிறாய் ? ஒரு வேளை நான் இதைத் திருடிவிட்டேன் என்று உனக்கு எண்ணமோ?'' என்றாள் சீதா.

''ஐயோ ! என்ன கொடூரமாகப் பேசுகிறாய் ? அந்த ரத்தின ஹாரம் ரொம்ப அழகாயும் வேலைப்பாடாயும் இருக்கிறபடியால், எங்கே செய்தது என்று தெரிந்து கொள்வதற்காகக் கேட்டேன். அதற்கு ஏன் இத்தனை கோபப் படுகிறாய்?''

''எனக்கு ஒன்றும் கோபமில்லை!''

''கோபமில்லையென்றால் சரி. உன் அம்மாவுக்கு எந்த ஊர், சீதா? உன் பிறந்தகம் எங்கே ?''

''அதையெல்லாம் பற்றி இப்போது ஒன்றும் என்னைக் கேட்க வேண்டாம். என் மனம் சரியாயில்லை.''

''அது ரொம்ப நன்றாய்த் தெரிகிறது!'' என்றாள் தாரிணி.

* * *

**ரா**கவன் வாடகைக்குப் படகு அமர்த்திக் கொண்டு வந்து சேர்ந்தான்.

''சீக்கிரம் படகில் ஏறுங்கள். ஏற்கனவே நேரம் ரொம்ப ஆகிவிட்டது!'' என்றான்.

''அவசியம் படகில் ஏறத்தான் வேண்டுமா? பேசாமல் திரும்பிப் போய்விடலாமே?'' என்றாள் தாரிணி.

''அழகாயிருக்கிறது! இந்தப் படகோட்டியுடன் எவ்வளவோ வாதாடிப் படகு கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் இப்போது தகராறு செய்யாதீர்கள். சீதா! எழுந்திரு! சீக்கிரம் வந்து படகில் ஏறிக் கொள்!''

சீதா எழுந்து வந்தாள். அவளுடைய கையைப் பிடித்துப் படகுக்குள்ளே ஏற்றி விட்டான் ராகவன். பிறகு தாரிணி தயக்கத்துடன் வந்து தானாகவே படகில் ஏற முயன்றாள். அது சாத்தியப்படவில்லை. நகர்ந்து நகர்ந்து சென்று கொண்டிருந்தது.

''சொன்னால் கேட்கிறீர்களா ?... இங்கே கையைக் கொடுங்கள்!'' என்று கூறி ராகவன் தாரிணியின் கையையும் பிடித்துப் படகுக்குள் ஏற்றிக் கொண்டான்.

தாரிணி சீதாவின் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

ராகவன் அவர்களுக்கு எதிரேயிருந்த படகுச் சட்டத்தின் மீது உட்கார்ந்தான்.

படகு நகரத் தொடங்கியது.

இதற்கிடையில் திடீரென்று வானம் கருத்து மேக மண்டலங்கள் திரளுவதையும், காற்று பலமாக அடிக்கத் தொடங்கியிருப்பதையும் அவர்கள் யாரும் கவனிக்கவில்லை.

ஏரிக் கரைக்கு அவர்கள் வந்த சமயம் ஏரியின் நீர்ப் பரப்பில் கடற்கரை மணலில் தோன்றுவது போன்ற பூ அலைகள் எழுந்து சத்தமின்றி விரிந்து பரவி மீண்டும் ஜலத் திரளில் மௌனமாகக் கலந்து கொண்டிருந்தன.

இவர்கள் ஏறிய படகு புறப்பட்ட சமயத்திலோ அலைகள் ஓர் அடி உயரம் எழும்பி விழுந்தன. ஆங்காங்கு அலைகளின் நுனியில் வெண்ணுரை காணவும் ஆரம்பித்திருந்தது. அலை அடிக்கும் ஓசை 'கும்' என்று கேட்கத் தொடங்கியிருந்தது.

ஏரிக் கரையிலிருந்து அதன் நடுவில் இருந்த சோலைத் தீவு சுமார் இரண்டு பர்லாங் தூரம் இருக்கும். தீவை நோக்கிப் படகு போகலாயிற்று.

அரை பர்லாங் தூரம் போவதற்குள் காற்றின் வலிவு அதிகமாகி விட்டது. அலைகள் திரைத்தெழுந்து நுரை பொங்கி ஒரு கஜம் உயரம் வரையில் எழுந்து விழுந்தன. அலைகளின் சத்தம் 'ஹோ' என்று பெரும் ஓசையாகிவிட்

டது. படகு அப்படியும் இப்படியும் பலமாக ஆடி எழுந்து விழுந்தது.

படகுக்காரன் அவனுடைய பாஷையில் ஏதோ சொன்னான்.

தாரிணி, "இதென்ன? காற்று இவ்வளவு பலமாகி விட்டதே! திரும்பிப் போய் விடலாமா!" என்றாள்.

"முன் வைத்த காலைப் பின் வைக்க முடியாது. உயிருக்கு அவ்வளவு பயப்பட வேண்டுமா!" என்றான் ராகவன்.

சீதா நாலா பக்கமும் திரும்பித் திரும்பிப் பார்த்துத் திருதிருவென்று விழித்தாள். திடீரென்று, "ஐயோ! அம்மா! எனக்குப் பயமாயிருக்கிறதே!" என்று கூச்சலிட்டு விட்டு விம்மத் தொடங்கினாள்.

ராகவன் மிகக் கடுமையான குரலில், "சீதா! இது என்ன மடத்தனம்? அழுகையை உடனே நிறுத்துகிறாயா, இல்லையா?" என்றான்.

சீதாவின் வெறி இன்னும் அதிகமாயிற்று. "ஐயோ! அம்மா! நீ சொன்னது சரியாய்ப் போய்விட்டதே; அலையில் விழுந்து நான் சாகப் போகிறேனே!" என்று அலறினாள்.

இந்த எதிர்பாராத நிலைமை ராகவனைக் கலங்க அடித்து விட்டது. அவன் பெரும் மனக் குழப்பத்துடன் தாரிணியைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"இந்தச் சனியன்களையெல்லாம் இதற்குத்தான் வெளியில் அழைத்துக் கொண்டு புறப்படக் கூடாது என்கிறது. நீங்கள் கொஞ்சம் சமாதானப்படுத்திப் பாருங்களேன்!" என்றான்.

"மிஸ்டர் ராகவன்! சமாதானப்படுத்திப் பயனில்லை. உங்கள் மனைவிக்கு 'ஹிஸ்டிரியா' மாதிரி இருக்கிறது. படகுக்காரனை உடனே கரைக்குத் திருப்பச் சொல்லுங்கள். வேறு வழியில்லை!" என்றாள்.

## ஸ்பெஷல் பரிசு!



கல்கியில் வெளியான பன்னிரண்டு நகைச்சுவைச் சிறுகதைகளுள் 'காமன் ஸ்பெஷல்' விசேஷப் பரிசான ரூ. 100 பெறுகிறது. இந்தக் கதையை எழுதிய திரு கே. சிவராமன் அவர்கள் 1939ம் வருஷம் தஞ்சை மாவட்டம், நீடாமங்கலத்தில் பிறந்தார்.

எஸ். எஸ். எல். சி. தேறியதும் 1958 முதல் சென்னையில் சதர்ன் ரயில்வே தலைமைக் காஷியர் அலுவலகத்தில் பணியாற்றிவருகிறார். மாலை நேரங்களில் மவுண்ட் ரோடு அரசினர் கலைக் கல்லூரியில் படித்து பி. ஏ. ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றார். இப்போது பச்சையப்பன் மாலைக் கல்லூரியில் எம். ஏ. ஆங்கில இலக்கியம் இரண்டாம் ஆண்டு பயின்று வருகிறார்.

"வேம்பன்", "குண்டலகேசி", "கேசி" என்ற புனைபெயர்களில் ஏற்கனவே எழுதியுள்ளார். கல்கியில் இதுவே இவரது முதல் கதை.

'சாவி'யின் வாஷிங்டனில் திருமணம், 'மெரினா'வின் 'வடபழநியில் வால்மீகி' ஆகிய ஹாஸ்யத் தொடர்கதைகளை நாடகமாக்கித் தந்ததோடு இந்தியன் எக்ஸ்பிரஸ் நாடகக் குழுவினருக்காக 'ஜாக்பாட் ஹவுஸ்' 'சீக்ரெட் ஏஜண்ட்' என்ற ஹாஸ்ய நாடகங்களை எழுதி இந்த நாடகங்களில் முக்கிய பாத்திரமேற்றுப் பாராட்டும் வகையில் நடித்தும் இருக்கிறார்.

'நகைச்சுவையாக எழுதும் ஆற்றலை எப்படிப் பெற்றீர்கள்?' என்றதற்கு நகைச்சுவையுடன் இவர் கூறும் பதில்:

'கல்யாணமாகும் வரை இந்த நாட்டில் ஒருவனால் ஹாஸ்யமாக எழுத முடியும்!'



ராகவனும் படகுக்காரனை இரைந்து கூப்பிட்டு, ''கரைக்குத் திருப்பு!'' என்று உத்தரவிட்டான்.

படகுக்காரன், ''குச் டர் நஹி, சாகிப்!'' என்றான்.

''எப்படியிருந்தாலும் சரி! கரைக்குப் படகைத் திருப்பு!'' என்று ராகவன் கத்தினான்.

''படகுக்காரன் திருப்ப மாட்டான். அவனுக்கு யாரோ சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்!'' என்று கூறிவிட்டுச் சீதா மேலும் விம்மினாள்.

''ஏதாவது பிதற்றாதே, சீதா! வாயை மூடு!'' என்று ராகவன் அதட்டிவிட்டு, படகுக்காரனை மறுபடியும் பார்த்து, ''திருப்பு உடனே! திருப்புகிறாயா இல்லையா?'' என்று கத்தினான்.

''டீக், ஸாகிப்! டீக்!'' என்றான் படகுக்காரன்.

உண்மை என்னவென்றால், படகுக்காரன் படகைத் திருப்பத்தான் பார்த்தான். ஆனால், காற்றினாலும் அலையினாலும் அது அவ்வளவு சுலபமாயில்லை. படகுக்காரன் எவ்வளவு பலமாகக் கழியைப் போட்டாலும், படகு சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

இதற்குள் சீதாவின் விம்மல் சத்தம் அதிகமாயிற்று. இடையிடையே ''அம்மா! அம்மா! நீ சொன்னது சரியாய்ப் போயிற்று!'' என்று அலறிக் கொண்டிருந்தாள். அவளுடைய கைகள் வெட வெடவென்று நடுங்கிக் கொண்டிருந்தன.

இதைப் பார்த்த தாரிணி, ''மிஸ்டர் ராகவன்! 'ஹிஸ்டிரியா' அதிகமாகிக் கொண்டிருக்கிறது. நீங்களும் இங்கே பக்கத்தில் வந்து உட்கார்ந்து கையைப் பிடித்துக் கொள்ளுங்கள்!'' என்று சொல்லிவிட்டு, சீதாவின் ஒரு கையைத் தான் கெட்டியாகப் பிடித்தாள்.

தாரிணி பிடித்த கையைச் சீதா பலமாக உதறி விடுவித்துக் கொண்டு ஒரு துள்ளுத் துள்ளிப் படகில் எழுந்து நின்றாள். படகு பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்தது.

''ஓகோ! எனக்கு ஹிஸ்டிரியா என்று சொல்லி ஜலத்தில் தள்ளிவிடப் பார்க்கிறாயா? எனக்கு ஒன்றும் ஹிஸ்டிரியா இல்லை. நான் விழமாட்டேன்!'' என்று கூவினாள்.

''சீக்கிரம் வந்து உடனே இவளைப் பிடித்துக் கொள்ளுங்கள்!'' என்று தாரிணி கத்தினாள்.

ராகவன் எழுந்து சீதாவை நோக்கி வருவதற்கு ஓர் அடி எடுத்து வைத்தான்.

அந்தச் சமயத்தில் படகை ஒரு பெரும் அலை மோதியது. படகு ஒரே ஆட்டமாகத் தலைகுப்புறக் கவிழ்ந்துவிடும்போல் ஆடியது.

ராகவன் படகுக்குள்ளே கால் தடுமாறி விழுந்தான்.

சீதா, ''வீல்!'' என்று கத்திக் கொண்டு தண்ணீரில் விழுந்தாள்.

தாரிணி, ''ஐயோ! கடவுளே!'' என்று அலறினாள்.

படகுக்காரன் தன்னுடைய பாஷையில் ஏதோ உளறிக் கொட்டிக்கொண்டிருந்தான்.

கவிழ்ந்து விடும் போலிருந்த படகு எழுந்து நிமிர்ந்தது.

தண்ணீரில் மூழ்கிய சீதா மேலே வந்து கொண்டிருந்தாள்.

நிமிர்ந்த படகு சீதாவை விட்டு அகன்று போய்க் கொண்டிருந்தது.

சீதா ஒரு தடவை தலையைத் தண்ணீருக்கு மேலே தூக்கி, ''அம்மா!'' என்று அலறினாள். அந்த அலறல் சத்தம் காற்றின் பேரொலிக்கும் அலைகளின் பெரும் ஓசைக்கும் மேலே கேட்டது. தாரிணி — ராகவன் இவர்களுடைய நெஞ்சில் ஈட்டி பாய்வது போல் அந்தத் தீனக் குரல் பாய்ந்தது.

தாரிணி, ''என்ன சும்மா நிற்கிறீர்களே! தண்ணீரில் குதித்து அவளைக் காப்பாற்றுங்கள்!'' என்று கூவினாள்.

படகுக்குள் தடுமாறி விழுந்த ராகவன் அப்போதுதான் சமாளித்து எழுந்தான்.

''ஐயோ! எனக்கு நீந்தத் தெரியாதே!'' என்று சொல்லிவிட்டு, சீதாவின் தலை தெரிந்த இடத்தைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

ராகவனுடைய அந்தரங்கத்தில் அப்போது ஒரு கணம் ஒரு பயங்கரமான எண்ணம் உதயமாயிற்று. 'ஒருவேளை இதுதான் விதிபோல் இருக்கிறது. சீதா இறந்து போனால்?...' மேலே அந்தப் பயங்கர நினைவுக்கு இடம் கொடுக்க விரும்பாமல், ''படகுக்காரா! அடே படகுக்காரா.....!'' என்று ராகவன் கூவினான்.

மூழ்கிக் கொண்டிருந்தவளின் பக்கத்தில் படகைக் கொண்டு போகும்படி சொல்ல அவன் உத்தேசித்திருந்தான். ஆனால் அதற்குள்ளே தாரிணி படகிலிருந்து தண்ணீரில் குதித்துச் சீதா மூழ்கிக் கொண்டிருந்த இடத்தை நோக்கி வெகு லாகவமாக நீந்திப் போய்க் கொண்டிருந்தாள்!

அந்த அதிசயத்தைப் பார்ப்பதற்காக வருணனும் வாயுவும் அமைதியாக நின்றார்கள். (தொடரும்)



# தவறாமல் பிரஷ் கொண்டு பல் துலக்கி, ஈறுகளைத் தேய்த்துக் கொடுத்தால், ஈறு உபாதைகளையும் பற்சிதைவையும் தடுக்கலாம்.

ஈறுகளை உறுதியுடனும் ஆரோக்கியத்துடனும் வைத்திருக்க,
அவற்றைத் தினமும் தவறாமல் தேய்த்துக் கொடுப்பது சிறந்த வழி
என்று பல் வைத்தியர்கள் கூறுகிறார்கள். அது போலவே,
பற்சிதைவைத் தடுக்கும் சிறந்த வழி, இரவிலும் காலையிலும்,
ஒவ்வொரு முறை உணவருந்திய பின்னும், தவறாமல் பிரஷ் கொண்டு
பல் துலக்கி, பற்சிதைவைத் தோற்றுவிக்கும் உணவுத் துகள்களை
அகற்றுவது. தவறாமல் போர்ஹேன்ஸால் பற்களைத் துலக்கி, ஈறுகளைத்
தேய்த்துக் கொடுக்க, உங்கள் குழந்தைக்குக் கற்பியுங்கள். ஏனெனில்,
போர்ஹேன்ஸ் பற்பசை பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பட்டது.

**போர்ஹேன்ஸ் பற்பராமரிப்பு பற்றிக் கற்பிக்க இதுவே தக்க வயது.**

---

**இலவசம்!** "பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்னும் விவரமான வண்ணப் புத்தகம்* பெற, 25 பைசா தபால் தலையுடன் (தபால் செலவுக்காக) கீழ்க்கண்ட கூப்பனை 'மானர்ஸ் டென்டல் அட்வைசரி பியூரோ, தபால் பை எண் 10031, பம்பாய்-1' என்னும் முகவரிக்கு அனுப்புக. K6

பெயர் ________________ வயது ________

முகவரி ________________________

*விரும்பும் மொழியின் கீழ் கோடிடவும்—ஆங்கிலம், இந்தி, மராட்டி, குஜராத்தி, உருது, வங்காளி, அஸ்ஸாமி, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்.



**போர்ஹேன்ஸ்**

—பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை

102F-R-9-172 TM


அன்பே அகிலா!
14
கதை: குமரன்
சித்திரம்: விஜயா
புது தில்லி. பிரதமர், நாள் தோறும் குறிப்பிட்ட நேரத்தில் தமது மாளிகையை யொட்டியுள்ள தோட்டத்தில் பொதுமக்களைச் சந்திப்பார் என்பதை அறிந்த அகிலா, அச்சமயத்தில் அங்கு போய்ச் சேர்ந்தாள்.
அதோ! இந்திராஜி! அதோ! வந்து விட்டார்!
அகிலாவை அவர் நெருங்கிய போது...
இந்திராஜி! நான்....
பார்த்தாலே தெரிகிறதே, கிழக்கு வங்கத்திலிருந்து வந்த அகதி என்று! ராம்சந்த்! இவளைப் பாதுகாப்புடன் அகதிகள் முகாமுக்கு அனுப்ப ஏற்பாடு செய்!
உனக்கு என்ன தேவையானாலும் ராம்சந்திடம் சொல்லு. இயன்ற வரை அவர் உனக்கு உதவுவார். கவலைப் படாதே!....



# ஸரோஜா ராமமூர்த்தி



ஊரின் அமைதி கனத்துக் கொண்டிருந்தது. யார் வீட்டுக் கடிகாரமோ பன்னிரண்டு முறைகள் அடித்து ஓய்ந்தது. தொலைவில் குறுக்கும் நெடுக்குமாக ஓடும் ரயில் பாதையில் திக்கற்ற பிள்ளைபோல் இன்ஜின் ஒன்று அந்த நிசியில் ஊர்ந்து ஊர்ந்து செல்வது எனக்கு மிகத் தெளிவாகக் கேட்டது.

நான் பரீட்சை விடைத் தாள்களைத் திருத்தும் பேராசிரியர். மேஜையின்மீது ஃப்ளாஸ்க்கில் டீ வைத்திருக்கிறது. எடுத்துக் குடிக்கலாம். இந்தச் சோர்வும் அயர்வும் நீங்கிவிடும். ஆனால் டீ குடிக்க மனமில்லை. அப்படியே புத்தகத்தின் மீது தலையைக் கவிழ்த்துக்கொண்டு படுத்திருக்கிறேன்.

மாடியில் கசமச வென்று பேச்சுக்கள். உரத்த குரலில் யாரோ தெலுங்கில் சண்டை போடுகிறார்கள். சற்றைக்கெல்லாம் பானு விசித்து விசித்து அழுகிறாள். அவளுடைய மூத்தமகன் சியாமளன், இளையவன் அநு, கடைசிப்பையன் விகவம் எல்லோருமே தங்கள் தந்தையைத் திட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

"உனக்கு அறிவில்லையா? எத்தனை தரம் சொல்வது உன்னை இங்கே வரவேண்டாம் என்று? மிருகம்தான் நீ!" — சியாமளன் கத்துகிறான்.

"மிருகம்தான். யூ டர்டி அனிமல்" — இதை யார் சொல்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

"போங்கள். இன்னுமா நீங்கள் போகவில்லை? பசங்கள் பேசினப்புறம் கூடவா போகலை? நீங்க மிருகம்தான்! கண்டிப்பாக மிருகம்தான்." பானு கூறினாள்.

நாட்டுச் சுருட்டின் புகை மாடி அறையைத் தாண்டிக் கீழேயும் இலேசாகப் பரவி யிருந்தது. பானுவின் கணவன் ராமன் நாட்டுச் சுருட்டுத்தான் பிடிப்பான். பதப்படுத்தப் படாத புகையிலையைப் போடுவான். முரட்டுக் கைத்தறித் துணி உடுத்துவான். எதிலுமே ஒரு மென்மை கிராது. எல்லாமே கிராமியம்தான்.

முடிவாக அன்றிரவு சிறிது நேரத்துக்கெல்லாம் சண்டை ஓய்ந்தது. விளக்குகள் அணைக்கப்பட்டன. படுக்கை ஒன்றை எடுத்துப் பானு வெளி வராந்தாவில் வீசி எறிவதை நான் அண்ணாந்து பார்த்தேன். மறுபடியும் இரவின் அமைதி. நானும் விடைகளைத் திருத்தலாமா வேண்டாமா என்கிற சர்ச்சையில் மூழ்கியிருந்தேன். அப்போது ராமன் கீழே வந்தான்.

"குழந்தே...! டீ இருக்குமா?"

"இதோ இருக்கு..." டீயை ஊற்றி அவனிடம் கொடுத்தேன். ஒரே மிடறில் அதை விழுங்கிவிட்டு, "இன்னும் இருக்குமா குழந்தே?" என்று மறுபடியும் என்னைக் கேட்டபோது எனக்கு அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. என் எதிரே நெடிதுயர்ந்த கரிய உருவமாக அவன் நின்றிருந்தான். அவன் எப்போதுமே என்னைக் 'குழந்தே' என்றுதான் கூப்பிடுவான். அவன் எதிரில் படித்துப் பட்டம் பெற்று இன்று நான் பேராசிரியர் ஆகிவிட்டால் அவனுக்குக் 'குழந்தே' யில்லாமல் போய்விடுவேனா?

"படுக்கப் போகலையா ராமன்?"

"இல்லே..." அவன் கண்களில் கண்ணீர் பளபளத்தது.



# மிருகம்

''இப்போ மணி என்ன குழந்தே?''

''பன்னிரண்டரை. இனிமே எப்படி ஊருக்குப் போவே? பேசாமல் போய்ப் படுத்துக்கோ. விடியக் காலம் டீ சாப்பிட்டுட்டுப் போகலாம்.''

அவன் தம் தம் என்று நடந்து மாடிப் படிகளில் ஏறியபோது நானும் ஒரு கணம் அவன் மிருகம் தான் என்று எண்ணினேன்.

கொஞ்சம்கூட மனிதனுக்கு இருக்க வேண்டிய மென்மை, நளினம் எதுவுமே அவனிடம் இல்லையே, ஏன் இப்படி?

விடியற்காலம் எப்போது வந்தது? எனக்குத் தெரியாது. மாடியிலிருந்து பானு பாடிக் கொண்டிருந்தாள். ஏதோ ஒரு பக்திப் பாடல். நல்ல கம்பீரமான தெலுங்கில் வார்த்தைகள் கனத்துடன் இருந்தன.

ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். அவர்கள் தெலுங்கர்கள். பல வருஷங்களுக்கு முன்பு அண்மை மாநிலமாகிய மகாராஷ்டிரத்துக்குக் குடிபெயர்ந்து வந்திருந்தார்கள். அந்தப் பெரிய வீட்டின் சொந்தக்காரி பானுதான். அவள்தாத்தா இவள் பிள்ளையைத் தத்து எடுத்துக் கொண்டு சொத்து முழுவதையும் மைனர் கொள்ளுப் பேரன் மீது எழுதிவிட்டு இவளைக் கார்டியனுகப் போட்டுவிட்டுப் போய்விட்டார்.

இந்த ராமன் இந்தப் பானுவை மணந்தது பெரிய அதிசயம். உழைப்பாளியும்,வெகுளியுமான ராமனைப் பானுவின் தாத்தாவுக்கு மிகவும் பிடித்திருந்தது. அத்துடன் ஆந்திராவில் பெண்ணுக்கு ஆயிரக் கணக்கில் வரதட்சிணை கேட்கும் ஒரு சாராரின் வகுப்பைச் சேர்ந்த அவர்களுக்குக் காலணாச் செலவின்றி ராமன் மாப்பிள்ளையாக வந்து வாய்த்தான்.

நிலவையும் இருட்டையும் அடுத்தடுத்து நிறுத்தியதுபோல் இத்தம்பதி காணப்பட்டனர். பானுவுக்கு அப்போது வயது பதினாறு. உதட்டிலே சுழிப்பும் கண்களிலே குறும்பும் மிளிர அவள் அந்த ஊரின் அழகு ராணியாகத் திகழ்ந்தாள். அந்த அழகை வேட்டையாடிச் சுவைக்கும் மிருகமாக ராமன் இருந்தான். கட்டுக் கட்டாகப் பீடிகளைப் புகைத்துக் கொண்டு, தாத்தாவுடன் வயல் வரப்புகளில் இறங்கிக் கூலியாளைப் போல் வேலை செய்வான்.

ஒரு பாளைக் கூழும், கோங்குராத் துவையலும் இருந்தால் அவனுக்குப் போதும்.

இளையவள் அனு பிறந்த பிறகு பானு விழித்துக் கொண்டாள். காலம் கடந்த விழிப்பாக இருந்தது அது. ஒரு சிரிப்பு, ஒரு கொஞ்சல், ஓர் இதமான சொல் எதுவுமே கற்றறியாத ராமனை அவள் வெறுத்தாள்.

அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் எத்தனை நிறங்களில் ரோஜாக்கள் பூக்கின்றன. ஒரு நாள் ஒரே ஒரு நாள் அவன் ஒரு பூவைத் திருகி மென்மையான இவள் கூந்தலில் அந்தரங்கமான அந்தப் பொழுதில் சூட்ட வேண்டும் என்று பானு ஆசைப்பட்டாள். அதற்காகவே அவள் ஓர் இரவு இரண்டு மலர்களைக்கொண்டு வந்து கண்ணாடி டம்ளரில் போட்டு நீர் தெளித்து வைத்திருந்தாள்.

அவன் பீடிப் புகை நாற்றத்துடன் அறைக்குள் வந்தான். பானு அவனைப் புன்சிரிப்புடன் வரவேற்றாள். அந்த நெளிவான அலையான கூந்தலை அள்ளிச் செருகி, இரு காதுகள் ஓரத்திலும் வளைந்து வரும் மாட்டில்களை இழுத்துக் கூந்தலில் மாட்டியிருந்தாள்.

அப்படியே தெலுங்கச்சியாக மாறியிருந்த அவளை அவன் கவனிக்கவில்லை.

''இன்னிக்கி வயல்லே கத்திரி விதை போட்டோம். நல்ல தரமான காய்கள், செடி முளைத்துப் பூச்சி பொட்டு வராமல் இருந்தால் வியாபாரம் அள்ளிக்கிட்டுப் போகும்—''

அவள் கண்ணாடி டம்ளரில் கிடந்த ரோஜா மலர்களைக் கையில் எடுத்துக் கொண்டு அவற்றையே பார்த்துக்கொண்டிருந்தாள். மனத்தை அள்ளிக்கொண்டு போகும் அவள் அழகை அவன் கவனிக்காமல் கத்தரிக்காய், ஆவக்காய் என்று எதையோ பேசிக் கொண்டு போனான். பானுவுக்கு மனம் வெடித்துவிடும்போல் ஆகிவிட்டது. கையிலிருந்த பூக்களைப் பிய்த்து எறிந்து விட்டு அழுகையுடன் அவள் தன் தாத்தாவின் முன்பாகப் போய் நின்றாள்.

''ஏமி அம்மாயி! எக்கட ஒச்சாவு? என்ன குழந்தே! எங்கே வந்தே?'' என்று அந்தக் கிழம் கண்களை இடுக்கிக்கொண்டு அவளைப் பார்த்துக் கேட்டது. அதன் கிழட்டுக் கண்களுக்கு அதன் பேத்தி செல்வ லக்ஷ்மி போல் அழகுத் தேவதையாகத் தோன்றினாள்.

"ஒச்சானு! தாத்தய்யா, எனக்கு ஏன் கல்யாணம் பண்ணினே?"

கிழம் கடகடவென்று சிரித்தது. "என்னடி அம்மா கூத்து இது? பொண்ணாய்ப் பிறந்தா கல்யாணம் பண்ணிக்காம முடியுமா?"

"இந்த ஜடத்தைப் போய்க் கட்டிக்கிட்டேனே... சரியான ஜடம். வெறும் ஜடம்."

தாத்தாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அடுத்தடுத்து இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி விட்ட பானு யாரை ஜடம் என்று குறிப்பிடுகிறாள் என்பதுகூடத் தெரியவில்லை. அந்த விவரம் ஒன்றும் தெரியாமல் கிழம் மண்டையைப் போட்டு விட்டது.

பிறகு வெகு நாட்களாகப் பானு தன் மூளையைக் குழப்பிக் கொண்டாள். இந்த விசுவம் எப்படித் தன் கருவில் உருவானான்? அந்த ஜடம் எப்படியோ இவளை, இவளையும் அறியாமல் தூக்கத்தில் ஏமாற்றிவிட்டது.

அவள் புழுங்கிப் புழுங்கி அழுதாள். விசுவத்தைக் கையில் எடுக்கும்போதெல்லாம் மனத்தில் ஒரு கரிப்பு இருந்துகொண்டேயிருந்தது. அவன் அப்படியே அப்பாவை உரித்துக் கொண்டு வந்திருந்தான்.

"டேய்! காட்டான்! அப்பனைப் போலவே ஆயிடாதே!" என்று அடிக்கடி பானு அவனை ஏசிக்கொண்டேயிருப்பாள்.

இப்போது பல வருடங்கள் ஓடிவிட்டன. பானுவும் ராமனும் பெயரளவில் கணவன்-மனைவி. ராமனின் நிழலைக் கண்டால் கூடப் பானுவும் குழந்தைகளும் வெறுத்தார்கள்.

ராமன் இப்போது அவர்களுடன் தங்கியிருக்கவில்லை. பக்கத்தில் கிராமத்தில் வயல்களுக்கிடையில் குடிசை போட்டுக் கொண்டு இருந்து வந்தான்.

வாரத்துக்கு ஒரு முறை வருவான். அன்றும் அப்படித்தான் வந்திருந்தான். பானு மணியடித்துப் பூஜை செய்வது கேட்டது. ராமன் வழக்கம் போல் எழுந்து பல் தேய்த்து முகம் கழுவிக் கொண்டு வந்தபோது என் தாயார் அவனுக்கும் ஒரு கோப்பையில் டீ கொண்டு வந்து கொடுத்தாள்.

" அம்மகாரு... உங்களுக்கு என்னாலே ரொம்பக் கஷ்டம்" என்றான் ராமன். அவன் கண்கள் பளபளத்தன.

"என்னப்பா கஷ்டம்? டீ சாப்பிடு. கொஞ்ச நேரம் இருந்தால் ஊத்தப்பம் சுட்டுத் தரேன்..."

"வேண்டாம் அம்மகாரு. நான் கிளம்பிப் போயிடறேன். இந்த மிருகம் கிளம்பிப் போயிடுச்சின்னு அவள்கிட்ட கேட்டா சொல்லுங்க—"

ராமன் அந்த இருட்டில் போவதை நானும் அம்மாவும் பார்த்துக்கொண்டே இருந்தோம்.

பொழுது விடிவதற்குள் பானு கீழே இறங்கி வந்தாள். நெற்றியிலே செந்தூரப் பொட்டும், மினுக்கும் மஞ்சளுமாக அவள் ஒரு தெய்வம் போல இருந்தாள்.

"அம்மகாரு! ஆயன போனுரா?"

"ஊம்..." என்று என் தாய் கூறியபடி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"போகட்டும். வரவேணும்னு வந்துக் கிட்டே யிருந்தால் எப்படி? குழந்தைங்களுக்குப் பிடிக்கலே..."

"ஏன்?"

"பிடிக்கலே... என் குழந்தைங்களைப் பாருங்க. ராஜா வீட்டுப் பிள்ளைகள் மாதிரி இல்லையா? இந்த மிருகம்தான் அப்பான்னு சொன்னா அவங்களுக்கு வெட்கமா இருக்காதா?"

தாய்க்குப் பின்னாடி அனு வந்து நின்று கொண்டாள்.

"அம்மகாரு! அந்த மனுஷன் சரியான 'அனிமல்' அதுவும் 'ஜங்கில் அனிமல்'.



## பண்பாட்டின் சிகரம்

லங்காஷயர் கோஷ்டிக்கு 80 ரன்கள் கிடைத்தால் வெற்றி என்ற நிலை. லங்காஷயர் கோஷ்டி காப்டன் லெஸ்டர் ஒரு பந்தை 'கவர் பாயின்டில்' நான் இருந்த பக்கம் அடித்தார். அது தாழ்ந்து வந்த 'காட்ச்' என்று கருதும்படியாக இருந்தது. பாட்ஸ்மன் லெஸ்டர் 'அவுட்' என்று கருதி மைதானத்தை விட்டு நகரத் தொடங்கினார்.

'ஸ்போர்ட்ஸ்மன்ஷிப்'புக்கு எடுத்துக்காட்டாக என் மனச்சாட்சி வேலை செய்தது. அம்பயர் கொடுத்த முடிவுக்கெதிராக! நான் உரக்க அம்பயர் பிரான்டிடம் கத்தினேன்: "மிஸ்டர் பிரான்ட்! அது 'காட்ச்' அல்ல; நான் பந்தைப் பொறுக்கி எடுத்தேன், அவ்வளவுதான்!"

இதைக் கேட்டதும் அம்பயர், லெஸ்டருக்குச் சைகை காட்டி மறுபடியும் மைதானத்தில் வந்து விளையாடக் கோரினார்.


உடனே ரசிகர்கள் கூட்டம் இந்நிகழ்ச்சியைப் புரிந்து கொண்டு என் பண்பாட்டைப் பாராட்டிக் கௌரவித்தது. கரகோஷ ஆரவாரம் தொடர்ந்து கேட்டது. என் வாழ்க்கையிலேயே கிரிக்கெட் பண்பாட்டின் சிகரத்துக்குச் சென்று விட்ட திருப்தி. எனது பண்பாட்டுக் குறைவினால் வெற்றி கிட்டுவதைவிட தூய வெற்றி கிட்டவே விரும்பினேன்.

- விஜய் மர்ச்செண்ட்

நன்றி: பவன்ஸ் ஜெர்னல் தகவல்: பி. எஸ். எம்,



"பழைமையான கரகரப்-
பான பற்பொடிகள்
உங்கள் ஈறுகளுக்கும்,
பற்களுக்கும் தீங்கு
இழைக்கக்கூடும்...."




**கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களேயும், ஈறுகளேயும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!**

கால்கேட் பற்பொடி நவீன பல் பராமரிப்பை சிக்கனமாக்குகிறது. அதன் குளுமையான, இன்மணத்தை நீங்கள் மிகவும் விரும்பு-வீர்கள். உங்கள் குடும்பத்திற்கு இன்றே ஒரு டின் வாங்குங்கள்.

TP.G. 30. TM

# மூல நோயை


முற்றவிடாமல்
நம்பிக்கையான

# ஹெடன்ஸா

களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
— ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

Bensons-2141 TAM

## தீராத வியாதிகளுக்கு சிறந்த சித்த வைத்தியம்



தவருன பழக்கத்திஞல் இல்லற வாழ்க்கையில் திருப்தி இல்லாத நிலைமை, மலட்டுத் தன்மை, களைப்பு, உப்புசம், தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் வயிற்றுவலி, காது மந்தம், முதலியவைகளுக்குத் தபால் மூலம் சிகிச்சை அளிக்கப்படும்.

**ஸ்ரீ பாலாஜி வைத்தியசாலே**

டாக்டர்
பி. குமாரஸ்வாமி தேவரா
தெனுலி (A. P.)    போன் : 551

— சென்னை கிளே —

9-D. சிவாஜி தெரு.
தி. நகர், சென்னை-17

அவன் இருக்கிறதை விடப் போயிடலாம். எங்க அவமானமும் குறைஞ்சிடும்...''

நானும் என் அம்மாவும் அதிர்ந்து போனோம். அம்மா பானுவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். மஞ்சள் பூசிய அந்த முகத்தில் துலங்கும் திலகத்தைப் பார்த்து விட்டு அம்மா ரோஷத்துடன் தெலுங்கில் கத்தினாள்.

''இப்படி உன் அம்மா பொட்டும், அழகுமாய் மினுக்கறாளே, எல்லாம் அந்த மிருகத்தினால் ஏற்பட்டிருக்கிற பாக்கியமாக்கும்...''

நான் அம்மாவைக் கடிந்து கொண்டேன். ஊர் விவகாரத்தில் நமக்கு என்ன வைத்திருக்கிறது?

கோடை வெயில் ஆந்திராவில் அதிகம். அதைவிட இந்த ஊரில் அதிகம். பரீக்ஷை விடைத் தாள்களைத் திருத்தி அனுப்பியாகி விட்டது. வேறு வேலை ஒன்றும் இல்லை.

ஊரெங்கும் அடர்ந்திருந்த வேப்பமரங்கள் காய்ந்துக் கருகி நின்றன. எங்கிருந்தோ அனல் காற்று பறந்து வீசி வந்து எங்களைச் சுட்டுப் பொசுக்கியது.

ராஜஸ்தானில் மணல் காற்றும். அதன் வேகம் மத்தியப் பிரதேசத்தின் ஊர்களை வறள வைத்துக் கொண்டிருந்தது. பரந்து கிடந்த ஆகாயத்தில் ஒரு நாள் மேகங்கள் திரளும். இனிமையான காற்று வீசும். சட்பட்டென்று மழைத் துளிகள் விழுந்து இப் பூமியைக் குளிர வைக்கும் என்கிற நம்பிக்கையில் நாங்கள் ஆகாயத்தைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தோம்.

அன்று பகல் கொளுத்துகிற வெயிலில் ராமன் தலையில் பெரிய முண்டாசுக் கட்டுடன் தோளில் பெரிய பூசணிக்காயுடன் வீட்டுக்குள் நுழைந்தான். அப்போதும் அவனை அம்மாதான் வரவேற்றாள். நீராகாரமும் கோங்கூராத் துவையலும் கொடுத்தாள். இரண்டு கைகளாலும் கலயத்தைப் பிடித்து எடுத்து மல்லாக்காக வாயில் வைத்து அப்படியே உறிஞ்சிக் குடித்து விட்டான். பிறகு பெரிய ஏப்பம்.

'பாவ்....'

அம்மாவும் நானும் சிரித்தோம். இந்தக் கிராமத்தானுக்கு ஜோடியாக இவனைப் போலவே இருக்கிற ஒருத்தி வாய்த்திருக்க வேண்டும். சிக்கும், சிடுக்குமாய்ப் பறக்கிற கூந்தலில் எண்ணெய் நாற்றம் வீச இவன் பேன் பார்க்க, அவள் இவன் முதுகைத் தேய்த்துக் குளிப்பாட்ட அந்தப் பொருத்தம்தான் சரி.

ராமன் பூசணிக் காயுடன் மாடிக்குப் போய் விட்டான். அன்று குழந்தைகள் வீட்டில் இல்லை. நகரத்தில் ஏதோ சினிமா என்று பார்க்கப் போயிருந்தார்கள். முதலில் வழக்கம்போல் பானு சண்டை பிடித்தாள். பிறகு பூசணிக்காய் அல்வா ஊறும் வாசனை வீசியது. ராமன் மாடியில் தொட்டியில் இருந்த ரோஜாச் செடிகளுக்கு உரம் வைத்து நீர் ஊற்றிக் கொண்டிருந்தான்.

குழந்தைகள் மாலையில் வீடு திரும்பவில்லை. பெரிய பையன் நகரத்தில் பானுவின் உறவினர் வீட்டில் அன்று இருந்துவிட்டு மறுநாள் வருவதாகத் தகவல் அனுப்பி விட்டான்.

பானு மாடிக்கும், கீழுக்குமாய்ப் பதறிக் கொண்டே சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தாள்.

''என்ன பானு சும்மா அலையறே?''

''அந்த மனுஷன் வீட்டுக்குப் போகலையம்மா—''

''அதனாலே என்ன? அவன் வீட்டிலே அவன் இருக்கான்!''

அம்மாவின் ஆணித்தரமான பதிலைக் கேட்டு நான் சிரித்துக் கொண்டேன்.

அவன் வீடு, அவன் மனைவி, மக்கள். உலகம் சொல்கிறது அப்படி. அவர்கள்?

இரவு ராமன் வெகு நேரம் வாசல் திண்ணையில் உட்கார்ந்து சுருட்டுப் பிடித்துக்கொண்டிருந்தான்.

''இன்னும் நாலு நாட்களிலே மழை வரும்'' என்று என்னிடம் சொன்னான்.

''எப்படிச் சொல்லறே?''

''வயக்காட்டிலே தும்பிங்க கூட்டம் கூட்டமாப் பறக்குது. மேற்கேயிருந்து ஈரக் காற்று அடிக்குது...''

''சாப்பிட்டியா ராமன்?''

''உம்... ரொம்ப நாளைக்கப்புறம் அவ சமையலைச் சாப்பிட்டேன் குழந்தே... நல்ல பக்குவம்...''

அம்மாவும் தாழ்வாரம் நின்று இதைக் கேட்டு ரசிப்பது இருட்டிலும் எனக்குத் தெரிந்தது. அப்படியே மாடியை அண்ணாந்து பார்த்தேன். இலேசான இரவு விளக்கின் ஒளியில் பானு என்னவோ படித்துக்கொண்டிருந்தாள்.

அம்மா—உள்ளே போய்ப் படுக்கையில் உட்கார்ந்து நெட்டி முறித்து விட்டு ''அப்பனே! முருகா!'' என்றபடி படுத்துக்கொண்டாள். நானும் உள்ளே போனேன். அன்றிரவு நான் வெகு நேரம் விழித்திருந்தேன். மாடியிலிருந்து சத்தம் வரவில்லை. இரவு என்கிற ரகசியம் இருள் போர்வையில் சுருண்டு கிடந்தது. நான் ஆகாயத்தில் நட்சத்திரங்களை எண்ண ஆரம்பித்தேன். முடியவில்லை. எதுதான் நம்மால் முடிகிறது? தரையில் இருக்கிற விஷயம் ஒன்றுதான் நமக்குப் புரிகிறது. மேலே...

நான் பிரும்மச்சாரி. புரிந்தவன் அல்ல.

பிறகு பல மாதங்கள் ஓடின. பானு முற்றத்தில் அரிசியில் கல் ஆய்ந்து கொண்டே அம்மாவிடம் அழுது கொண்டிருந்தாள். ரோஜா போலிருக்கும் அவள் முகம் செந்தாமரையாகச் சிவந்திருந்தது.

''அதுக்கு என்ன இப்போ? குடியா முழுகிப் போயிடுத்து? விகவத்துக்கு ஒரு துணை வேண்டாமா?. கடவுள் அருளாலே பிள்ளையாகவே பொறக்கட்டும்... ஆனா, இனிமே நீ அவனை....''

''மிருகம்னு சொல்ல மாட்டேன். நான்... நான்தான் அன்றைக்கு மிருகமாயிருந்தேன். அந்த மனுஷன் வாசல் திண்ணையிலே பீடி பிடிச்சுக்கிட்டு உக்காந்து இருக்கச்சே வந்து நின்னு—''

''பேசாம இருடி அசட்டுப் பொண்ணே! இதிலே யார் மேலும் தப்பு இல்லே'' என்று தீர்ப்பு வழங்கினாள் அம்மா.

அதன் பிறகு அந்த வீட்டில் ராமனை யாரும் மிருகம் என்று சொல்வதில்லை.

# லஷ்மியின் விருப்பங்கள் பற்றிய ருசிகரமான தகவல்கள்

எழில் கொழிக்கும் லஷ்மியிடம், அவரது தற்கால விருப்பங்கள் சிலவற்றைப் பற்றிக் கேட்டோம். அவர் சிரித்துக் கொண்டே கூறியதாவது:

ஸித்தார்: அதன் மயக்கும் ஒலியினை நான் மிகவும் விரும்புகிறேன்.

வாசனைப் பொருள்கள்: மென்மையான அத்தர்.

ஞாயிற்றுக்கிழமை: வாரத்தில் நான் மிகவும் விரும்பும் கிழமை.


அவரது எழிலின் ரகசியத்தைப் பற்றிக் கேட்ட பொழுது அவர் புன்சிரிப்புடன் கூறினார். 'லக்ஸ்தான், எப்பொழுதுமே'.






'எனது மேனியின் பாதுகாப்புக்கு நான் வேறெந்த சோப்பையும் நம்புவதில்லை. மென்மையான லக்ஸ்தான் எப்போதும் நான் விரும்புவது'.

இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமான தயாரிப்பு




GOVAN/DCL/711

# "ஸைக்கோ ஸாரநாதன்"



## 23. அழகு மயமான சத்தியம்

நாலாபுறமும் மலைகள் சூழ்ந்திருக்க இடையில் அமைந்திருந்த பேரிஜம் ஏரி, மெய்யாகவே கண்கொள்ளாக் காட்சிதான்! அத்தனை பெரிது! பெரிய குளம் என்கிற ஊருக்கு இங்கிருந்துதான் தண்ணீர் போகிறது என்று பேசிக் கொண்டனர். விஸ்தீரணத்தில் வென்றாலும் எழிலில் கொடைக்கானல் ஏரியிடம் தோற்றுத்தான் போய்விட்டது. ஓர் 'ஆக்டோபஸ்' தன் கரங்களை விரித்தாற்போல் கொடைக்கானல் ஏரி பல திசைகளில் நிலத்தை ஊடுருவி, அதைச் சுற்றி அமைந்திருந்த பாதையிலும் அத்தனை வளைவுகளை உண்டாக்கி இருந்தது. பேரிஜம் ஏரி குழந்தை வரைந்த வட்டம்போல் சற்றுக் கோணல் மாணலாக இருந்ததுடன் சரி. ஆகவே, மொட்டையாகத்தான் இருந்தது. கொடைக்கானல் ஏரியைச் சுற்றிலும் நாலுபுறங்களிலும் நெடிதுயர்ந்த மரங்கள் வானை அளாவி ஒரு கம்பீரச் சூழலை உருவாக்கின. பேரிஜம் ஏரியைச் சுற்றிலும் புதர்களும் குட்டையான மரங்களும்தான் அதிகமாய் மண்டிக் கிடந்தன. வெறிச்சென்றுதான் தோன்றியது.

பஸ்ஸில் வந்தவர்கள் தனித்தனிக் கூட்டமாக இருவராகவும் மூவராகவும் பிரிந்து சென்றனர். சிலர் காலாற ஏரிக் கரையோடு நடந்தார்கள். சிலர் நீரை ஒரு விரலால் துழாவக் கூடிய தொலைவில் துண்டை விரித்துப் போட்டு உட்கார்ந்தார்கள்.


அம்புஜம் பையிலிருந்து பெரிய ஃப்ளாஸ்கையும், பிஸ்கட் பெட்டியையும் எடுத்து ஒரு பாறையின்மேல் வைத்தாள். கழுகாக வந்து பிஸ்கட் டப்பாவைக் கொத்தினான் விக. "டேய்! எல்லாருக்கும் கொடுக்கணும்டா" என்றாள் அம்புஜம். "பெட்டியோடு நீட்டு. அவாளாவே எடுத்துப்பா."

சற்றுத் தள்ளிப் பத்மநாபன், ரங்கநாதன், நடராஜன், அமிர்தலிங்கம் ஆகியோர் அமர்ந்திருந்தனர். அவர்களிடம் பிஸ்கட் டப்பாவை நீட்டினான் விக. ஒவ்வொருவர் கரமும் உள்ளே நுழைந்ததும் ஞாபகமாகக் "கொஞ்சமா எடுத்துக்கணும்" என்று எச்சரிக்கை விடுத்தான்.

"அவனுக்கு அவன் அம்மா சொல்வதை அப்படியே நமக்குத் திருப்பிப் படித்து விடுகிறான்!" என்றார் பத்மநாபன் சிரித்துக்கொண்டே.

" 'பெரிய பெரிய கைகளாக உள்ளே நுழைந்து அள்ளினால் தனக்கு என்ன

ஸ்ராஜேந்திரன்



மிஞ்சும்?' என்ற நியாயமான கவலை இருக்கத்தானே செய்யும்?'' என்றார் நடராஜன்.

பாலடைக் கட்டியைச் சேர்த்துச் செய்த சீஸ்லிங் பிஸ்கட்டுகள் சின்னச் சின்னதாக ரொம்ப ருசியாக இருந்தன.

''காக்டெய்ல் பார்ட்டியின் போது உடைக்கப்பட வேண்டிய டப்பா இது'' என்றான் அமிர்தலிங்கம், பிஸ்கட் பெட்டியின் மேல் இருந்த படத்தைப் பார்த்து விட்டு. ''இந்தக் குளிருக்கு இதமாக இருக்கும். புரொஹிபிஷன் இப்போ இல்லாததால் டி. ஐ. ஜி.யை வைத்துக் கொண்டே தைரியமாக இதைச் சொல்லலாம்!''

''காப்பியோடு சேர்த்துக் கொரிக்கவும் ரொம்ப நன்றாக இருக்கும்'' என்றார் பத்மநாபன். கடச் கடக் காப்பி வழங்கினாள் அம்புஜம். டம்ளர்கள் இரண்டுதான் இருந்தன. ஏரி நீரில் சுத்தமாய்க் கழுவிவிட்டு மாறி மாறிச் சாப்பிட்டார்கள். பத்மநாபன் தொடர்ந்து பேசினார். ''இந்தக் குளிருக்குக் காப்பி மட்டும் இதமா இல்லையா என்ன? எனக்கு யோகாசனம் கற்றுக் கொடுத்த குரு சொன்னார், 'காப்பிப் பழக்கத்தை விட்டுடு. நூறு வயசு இருப்பாய்'ன்னு. நான் பதில் சொன்னேன்: 'காப்பி சாப்பிட்டுண்டு எண்பது பிராயம் வாழ்ந்தால் போதுமே'ன்னு.''

சிரிப்புக்கிடையில் அமிர்தலிங்கம் கேட்டான்: ''ஆயுசு என்றைக்கு முடியும்னு யாருக்குத் தெரியுது? அதுவும் ஸாரநாதன் கொடைக்கானலில் இன்னும் சுதந்திரமாய்த்தானே திரிகிறான். எல்லாருமே இன்றோ நாளையோன்னு யோசனை பண்ணிக்கிட்டுத்தானே உட்கார்ந்திருக்கோம்?''

''இருந்தாலும் அப்படி ஒரு மனுஷன் இருப்பது ஆச்சரியம்தான்'' என்றார் பத்மநாபன். ''நாற்பத்திரண்டோடு மூன்றைக் கூட்டினால் நாற்பத்தைந்தாச்சு. இத்தனை கொலைகளைப் புரிந்துவிட்டு இன்னமும் வெறி அடங்காமல் ஒரு மனுஷனா? நான் ஒரு தடவை தெரியாத்தனமா டிராகுலா சினிமா பார்த்துட்டேன். அப்புறம் நாலு நாட்கள் தூக்கமே வரலே!''

அமிர்தலிங்கம் கிசுகிசு மூட்டியதுபோல் சிரித்தான்.

அம்புஜம் ஃப்ளாஸ்க்கைக் கழுவி வைத்துவிட்டு விகளை மடியில் போட்டுக் கொண்டாள். தூக்கம் கண்ணைச் சுழற்றியது அவளுக்கு. இமைகளை மூடுவதும் திறப்பதுமாய் இருந்தாள். தூங்கிவிட்டால் விஷமம் பண்ணவோ விளையாடவோ முடியாதே என்ற கவலை அவனுக்கு. தூங்குகிற அந்த நேரமெல்லாம் வீணாகிப் போவதாகக் கருதுவான். அனசூயா ஏரிக் கரையோடு மீன்களையும் பட்டாம் பூச்சிகளையும் பார்த்துக் கொண்டே நடந்தாள். ''ஜலத்திலே இறங்கப்படாது. காலை முறிச்சுடுவேன்'' என்று அவளை நோக்கி ஓர் அதட்டல் போட்டு வைத்தாள் அம்புஜம்.

பத்மநாபனின் கேள்விக்கு டி. ஐ. ஜி. நடராஜன் பதில் சொல்ல ஆரம்பித்தார். ''டிராகுலா படத்தைப் பார்த்துக் கஷ்டப்படுவதற்குப் பதிலாக டோனி கர்டிஸ் ஸைக்கோவாக நடித்த படத்தைப் பார்த்திருக்கலாமே?'' என்றார் அவர். ''படத்தின் பெயர் மறந்து விட்டது. தவிர்க்க முடியாத ஓர் உந்துதலால் பல கொலைகளைச் செய்கிறான் அந்த ஸைக்கோ. அந்த உத்வேகம் ஏற்படுகின்ற சமயங்களுக்கு இடைப்பட்ட கால





கட்டத்தில் ரொம்ப அன்பான கணவனாகவும் பாசமுள்ள தகப்பனாகவும் நடந்து கொள்கிறான். பொறுப்புடன் வேலை செய்து சம்பாதித்துக் குடும்பத்தை நடத்துகிறான். கடைசியில் பிடிபட்டு மனோதத்துவ நிபுணர்களிடம் ஒப்படைக்கப்படுகிறான். அவன் பேரில் நமக்கு அனுதாபமே பெருகுமளவுக்கு அத்தனை அழகாக நடித்திருந்தான் டோனி கர்டிஸ். உண்மைக் கதையாம் அது!''

''அவ்வளவு தூரம் போவானேன், அப்பா? பம்பாயிலேயே ராமன் ராகவ் கேஸ் அமர்க்களப்படவில்லையா இரண்டு வருஷங்களுக்கு முன்?'' என்றான் ரங்கன். இப்படிச் சொல்லிக் கொண்டே அவன் எழுந்தான். இடுப்பில் பேண்டைச் சரி செய்துகொண்டு அவன் மெல்ல நழுவி நடந்தான். சற்று முன்னால் மீனா தனிமையை நாடிச் சென்றதை அவன் கண்கள் கவனித்து விட்டிருந்தன. பஸ்ஸில் அவள் கண்ணீர் உகுத்ததன் காரணத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று பரிவும் கனிவுமாக அவன் அவளைப் பின்தொடர்ந்தான். டிரான்ஸிஸ்டர் பாட்டொலி அவள் இருக்கும் இடத்தை அவனுக்குக் காட்டிக் கொடுத்தது.

இங்கே பேச்சுத் தொடர்ந்தது: ''சமீபத்தில்கூட நான் 'டைம்' பத்திரிகையில் ஒரு கட்டுரை படித்தேன்'' என்றார் நடராஜன். ''கலிபோர்னியா மாநிலத்தில் ஒரு நகரத்தில் கரோனா என்கிறவனை இருபத்தி ஐந்து கொலைகள் புரிந்ததற்காகப் பிடித்திருக்கிறார்கள். ஆனால் ஒருவிதத்தில் இவன் ரொம்ப 'டீஸெண்ட்' பேர்வழி. பிரேதங்களை அப்படி அப்படியே போட்டுவிடுவதில்லை. தன்னால் கொல்லப்பட்ட ஒவ்வொருவரையும் ஆழக் குழிதோண்டிப் புதைத்துவிட்டுத்தான் வருவான்! கல்யாணமாகி நாலு குழந்தைகள் அவனுக்கு. சுற்று வட்டாரத்தில் ரொம்பக் கௌரவமான மனிதன் என்று கருதப்பட்டவன். வயல்களில் வேலை செய்ய 'காண்ட்ராக்ட்' எடுத்து ஆட்களைத் திரட்டி வருவது அவன் தொழில். தவறாமல் சர்ச்சுக்குப் போகும் ரோமன் கத்தோலிக். இவன் மீது சுமத்தப்பட்ட குற்றங்களைக் கேட்டபோது இவன் மனைவி பிரமித்து விட்டாளாம். 'எத்தனை பிரியமாக என்னிடமும் குழந்தைகளிடமும் நடந்துகொள்வார்? அவரா இப்படி?....' என்று ஆச்சரியப்பட்டாளாம். ஆனால் அப்படிப்பட்டவன்தான் தான் இனி கொல்லப் போகிறவர்களுக்காக முன் கூட்டியே இரண்டு சவக்குழிகளைத் தயாரித்து வைத்திருந்தான்!''

''எனக்கு இன்னொரு நிகழ்ச்சி கூட நினைவுக்கு வருகிறது. அமெரிக்காவில் ஒரு பல்கலைக் கழகத்தின் மணிக்கூண்டின் மேல் ஏறி அங்கிருந்து கொண்டு வருவோர் போவோரை யெல்லாம் ஒரு காரணமுமின்றி டெலஸ்கோப் பொருத்தப்பட்ட துப்பாக்கியால் குறி பார்த்துச் சுட்டுத் தள்ளினானே, சார்லஸ் விட்மன்'' என்றார் பத்மநாபன்.

''ஏன், நர்ஸ்களுக்கான ஹாஸ்டலில் புகுந்து ஒரே இரவில் ஏழெட்டு நர்ஸ்களைக் கழுத்தை நெரித்துக் கொன்று போட்டானே ரிச்சர்ட் ஸ்பெக், ஞாபகமிருக்கிறதல்லவா? அதுவும் அமெரிக்காவில் நிகழ்ந்த கோரம்தான்!''

''போதும் ஸார்! போதும்!'' என்று கூறியபடி எழுந்தான் அமிர்தலிங்கம். ''ஸைக்கோ கேஸ்களை மாறி மாறி நீங்கள் சொல்வதைக் கேட்டால் எனக்கே பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது'' என்று கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

அவன் போனதும் நடராஜனுடன் தனித்து விடப்பட்ட பத்மநாபன், 'மீனா—ரங்கன் விவகாரத்தை இப்போது இவரிடம் பிரஸ்தாபித்தால் என்ன?' என்று நினைத்தார். கூடவே, 'அம்புஜத்திடம் இன்னும் ஒரே ஒரு தடவை வாதாடிப் பார்த்து விடலாமே' என்றும் அவருக்குத் தோன்றியது. எனவே 'இவரிடம் அது பற்றிப் பேசுவதை இன்னும் ஒரு நாள் ஒத்திப் போடலாம்' என முடிவு செய்தார். 'பேசுங்கள் பேசுங்கள்' என்று அம்புஜம் ஜாடை காட்டியதையும் பொருட்படுத்தாமல் வாளாவிருந்தார்.

* * *

இப்பால் சாலையை யொட்டினாற்போல் நிழல் படர்ந்திருந்த இடத்தில் வெட்டிச் சாய்க்கப்பட்டிருந்த ஒரு மரக் கிளை மேல் சோகச் சாயல் முகத்தில் இழையோட அமர்ந்திருந்தாள் மீனா. அந்த மரக் கிளையைப் போலவே அவள் காதலையும் வெட்டிச் சாய்க்கப் போகிறார்கள். காதலின் தலையில் கோடாலியைப் போடும் வேலையை இன்னும் இருபத்துநாலு மணி நேரத்துக்குப் பத்மநாபன் ஒத்திப் போட்டிருப்பதை அவள் அறியவில்லை. அதன் மரண ஓலத்தைக் கேட்க வேண்டிய தருணம் மிக நெருங்கி வந்து கொண்டிருப்பதாய் எண்ணியபோது அவளால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. 'பாவி ஸைக்கோ ஸாரநாதன் யார் யார் உயிரையோ பறிக்கிறானே; என் உயிரைக் கொண்டு போகக் கூடாதா?' என்று மனம் குமுறினாள். 'தற்கொலை

செய்து கொள்ளத்தான் துணிவில்லை என்றால் அவனுமா உதவிக்கு வராமலிருக்க வேண்டும்?'

பக்கத்தில் இருந்த டிரான்ஸிஸ்டர் ''மேரே ஸப்னோங்கி ராணீ கப் ஆயேகி தூ!'' என்று பொருத்தமில்லாமல் ஒரே உற்சாகத்துடன் முழங்கிக் கொண்டிருந்தது.

''என்ன இப்படித் தனியாக...?'' என்று கேட்டுக் கொண்டே அங்கு வந்தான் ரங்கன்.

பெற்றோரின் பார்வையிலிருந்து மறைந்தும் ஆனால் கூப்பிடு தூரத்திலும் அவர்கள் இருந்தார்கள். டிரான்ஸிஸ்டர் ஒலி அவர்கள் பேச்சைப் பிறர் கேட்கவொட்டாமல் செய்ததன் மூலம் மனம் விட்டு உரையாட உதவிக்கொண்டிருந்தது.

''இனி வாழ்நாள் முழுவதும் தனியாக இருக்க வேண்டியவள்தானே? ஒத்திகை பார்த்துக்கறேன்'' என்றாள் மீனா.

'திக்'கென்றது ரங்கனுக்கு. ''என்ன இப்படிப் பேசுகிறாய் மீனா? என்ன வந்துவிட்டது உனக்குத் திடீரென்று?''

''திடீரென்றுதான் விழுந்துவிட்டது. இடி விழுந்து விட்டது'' என்று சொல்லி அடக்க மாட்டாமல் அழுதுவிட்டாள்.

''எப்பேர்ப்பட்ட இடியானாலும் நான் தாங்கிக் கொள்கிறேன் மீனா. நீ கவலைப் படாதே! ப்ளீஸ்! அழுகையை நிறுத்த மாட்டாயா? உம்?'' என்று கேட்டபடி ரங்கன் தன் கரத்தை நீட்டி அவள் முகத்தை மூடியிருந்த நீண்ட மென்மையான விரல்களை மெல்லப் பற்றி அகற்ற முயன்றான்.

''என்னைத் தொடாதீர்கள், ரங்கன்! என்னைத் தொடாதீர்கள்!'' என்று பதறிக் கூறிய அதே நேரத்தில் அவனுடைய அகன்ற பெரிய உள்ளங்கைகளில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள் மீனா. எங்கே அவன் தன் கரத்தைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டு விடுவானோ என்று பயந்தவளாகத் தன் முகத்தோடு ஒட்டி யிருந்த அவன் கரங்களைச் சேர்த்துப் பிடித்துக் கொள்ளவும் செய்தாள்.

சொல் ஒன்றும் செயல் ஒன்றுமாக இருக்கக் கண்டு ரங்கன் புன்முறுவல் பூத்தான். அவள் தோள்மீது தலை சாய்த்தான் ஆறுதலாக.

''நான் உங்களுக்கு உரியவளாவேனா என்பது சந்தேகமாக இருக்கும்போது நீங்கள் என்னைத் தொடுவது எனக்குப் பயமாயிருக்கிறது'' என்று கூறி அவன் உள்ளங் கைகளைக் கண்ணீர்க் குளமாக்கினாள் மீனா.

''இதென்ன அசட்டுச் சந்தேகம்? யார் நம்மைப் பிரித்துவைக்க முடியும்?''



## விசித்திர விநாயகர்!

பத்மநாபபுரத்திலிருந்து ஒரு மைல் மேற்கே கேரளபுரம் சிவன்கோவில் உள்ளது. இங்கு ஓர் அரச மரத்தின் அடியில் வெய்யிலையும் மழையையும் தாங்கிக் கொண்டிருக்கும் ஒரு விநாயகர் சிலை ஆவணி மாதத்திலிருந்து ஆறு மாதங்கள் வெள்ளை நிறமாகவும் மாசி மாதத்திலிருந்து ஆறு மாதங்கள் கறுப்பு நிறமாகவும் தோற்றமளிப்பது விஞ்ஞான உலகுக்கு ஒரு புதிராகவே இருக்கின்றது.

ஆதாரம்: எஸ். பத்மநாபன் எழுதிய ''கன்யாகுமரி'' என்ற நூல்.

''ஜாதி, குலம், கோத்திரம், நட்சத்திரம், ஜாதகம் என்றில்லையா ஐம்பெரும் பூதங்கள்? நமக்கு முதல் பூதமே முட்டுக்கட்டை போடுகிறதே!''

ரங்கன் சிரித்தான். ''இதற்காகவா இப்படிப் பயப்படுகிறாய்? இதோ பார்! உன் அப்பா இது போன்ற விஷயங்களில் பரந்த மனப்பான்மை உடையவர் என்பது எனக்குத் தெரியும். கொஞ்ச நாட்கள் பழக்கத்திலேயே இதை நான் உணர்ந்திருக்கிறேன். என் அப்பாவும் அப்படித்தான். ஆக உன்னை நீயே ஏன் கஷ்டப்படுத்திக் கொள்கிறாய்? ஜாம் ஜாம் என்று நம் கல்யாணம் நடக்கும். துணிச்சலான காரியம் என்று பலரும் நம்மைப் பாராட்டவே செய்வார்கள்; கவலைப்படாதே!''

''பாராட்டைக் கொண்டு போய்க் கடலில் போடுங்கள்; நீராடட்டும். எனக்கு அன்புதான் முக்கியம்!''

''கடல் கொள்ளாத அளவுக்கு அது இருக்கிறது மீனா. என்னை நம்பு.''

''உங்களை நம்பாமலா இருக்கிறேன்? சமூகத்தை அல்லவா நம்பமுடியவில்லை?''

''சமூகம் என்று தனியே ஒன்று இருக்கிறதா மீனா? நாமே சமூகத்தின் ஓர் அங்கம்தானே? நாம் எப்படிச் சமைக்கிறோமோ அப்படிச் சமூகம் அமையும். சமூகம் நம்மை மதிப்பது போல் நாம் நடந்து கொள்வோம். அப்போது நாம் மட்டுமில்லை, சமூகமே உயரும்.''

''நீங்கள் ஏதேதோ வாசாலகமாகப் பேசுகிறீர்கள். எனக்குச் சமாதானமாக வில்லை.''

''உன் குறை என்ன என்று தெரிந்தால் அல்லவா நான் சமாதானப்படுத்துவது சாத்தியம்? இடி விழுந்தது, சமூகம் சினந்தது என்று பொதுப்படையாக நீ பேசினுல் நானும் பொதுவாகத் தானே பதில் கூற முடியும்?''

''குறிப்பிட்டுச் சொல்ல எனக்குத் தைரியம் வரவில்லையே?''

''வேண்டாம். நீ சொல்ல வேண்டாம். நானே உன் அப்பாவைக் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்.'

''ஐயய்யோ! அது ஏதாவது விபரீதத்தில் கொண்டு போய் விட்டுவிடப் போகிறது. நானே சொல்லிவிடுகிறேன்'' என்ற மீனு, தயங்கித் தயங்கி, முதல் நாள் இரவு நடந்ததைச் சொன்னுள்.

குழந்தைகள் இருவரையும் படுக்க வைத்துவிட்டு வந்த அம்புஜம், மீனுவும் தூங்கிவிட்டாள் என்று நினைத்து விளக்கை அணைத்துவிட்டு முன்புறம் வராந்தாவுக்கு வந்தாள். 'நெவில் ஷூட்'டின் நாவல் ஒன்றில் ஆழ்ந்து போயிருந்த பத்மநாபனை அணுகினுள்.

''இதோடே இரண்டு மூன்று தடவை சொல்லியாச்சு; நீங்க காதிலே போட்டுக்கவே மாட்டேங்கறேள்'' என்று ஆரம்பித்து அவள் கூறியது இதுதான்:

ரங்கனும் மீனுவும் ஒருவரை யொருவர் நேசிக்க ஆரம்பித்து விட்டார்கள் போல் அவளுக்குத் தோன்றுகிறது. இதை முளையிலேயே கிள்ளி எறியவில்லை என்ருல் பின்னுல் ஆபத்தாகப் போய் விடும். ஏதாவது ஏடாகூடமாக நடப்பதற்கு முன்னுல் பத்மநாபன் நடராஜனிடம் பேசவேண்டும். அவர் மகன் இனி தங்கள் மகளை அணுகித் தனிமையிலோ பிறர் மத்தியிலோ பேசவே கூடாது என்று இவர் தடை விதிக்க வேண்டும். ஒன்று அவர் தம் மகனை ஊருக்கு அனுப்பி விடட்டும். அல்லது நாம் கிளம்பி விடலாம். ஆனுல் கொடைக்கானலிலிருந்து கிளம்பி விட்டால் மட்டும் போதாது. சென்னை திரும்பிய பிறகு இவர்கள் — அதாவது மீனுவும் ரங்கனும்—ஒருவரை யொருவர் சந்திக்க முயல மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? அதனுல்தான் பத்மநாபன் நடராஜனிடம் 'கண்டிஷ'னுக இப்போதே கூறிவிட வேண்டும். இல்லாத போனுல் நாளைக்கு நாலு பேர் மத்தியில் தலையைத் தொங்கப் போட்டுக்கொள்ளும்படியாகி விடும். நண்பர்கள் உறவினர்கள் எல்லோரும் கிண்டலும் கேலியுமாக வார்த்தைகளைக் கொட்டி அளப்பார்கள். சிறிசுகள் மீனுவும் ரங்கனும் இதையெல்லாம் லட்சியம் பண்ணுமல் போய்விடலாம். ஆனுல் அம்புஜத்தால் தாங்கிக் கொள்ள முடியாது.

பத்மநாபன் தம் மனச்சாட்சியின் சார்பிலும் தமது மகள் சார்பிலும் வாதாடிப் பார்த்தார். அம்புஜம் ஒரே பிடிவாதமாக இருந்து விட்டாள். 'மீனுவுடைய எதிர்காலம் பற்றி உங்களுக்கு எவ்வளவு அக்கறை உண்டோ அத்தனை எனக்கும் உண்டு' என்று அடித்துப் பேசினுள். அவள் கொஞ்சம்கூட விட்டுக் கொடுக்காமல் உறுதியாக இருக்கவே, மறுநாள் பேரிஜம் போகும்போது நடராஜனிடம் இது விஷயமாகப் பேசுவதாக வாக்களித்தார் பத்மநாபன்.

இதையெல்லாம் தூங்குவது போல் பாசாங்கு செய்தபடியே கேட்டுக்கொண்டிருந்த மீனு அந்த வினுடி முதல் தூண்டில் புழுவாகத் துடித்துக் கொண்டிருக்கிருள்.

விவரம் தெரிந்து கொண்ட ரங்கன் அவளைவிட அதிகமாக இல்லாவிட்டாலும் அவள் அளவுக்கே தானும் மனம் பதைத்துப் புழுங்கினுன். அதே சமயம் இத்தனை நேரமாக மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இந்த விஷயத்தை மனசுக்குள்ளேயே வைத்திருந்து மருகியிருக்கிருளே என்பதால் மீனுவிடம் அனுதாபம் பொங்கியது அவனுக்கு. அதோடு, 'அம்புஜமா இப்படிச் சொன்னுள்?' என்ற ஆச்சரியம் இதயத்தைக் கவ்வியது.

அவன் கேட்டான்: ''உன் அம்மாவா இப்படிச் சொன்னுள்? தாயில்லாத என்னை மகனுகச் சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறதாக அன்றைக்குச் சொன்னுங்களே. என் வயதைப் பற்றிக் குறிப்பிட்டு அவள் வயதோடு அதை ஒப்பிட்டபோது 'ரங்கன் மாதிரி எனக்கு ஒரு பிள்ளை இருக்கான்னு சொன்னு நான் இப்பவே தொண்டு கிழவியாகி விடத் தயார்'னு சொன்னுங்களே, அதே அம்புஜமா?''

''அதே அம்புஜம்தான். ஆனுல் உங்களை மகனுகத்தானே ஏற்றுக்கொள்கிறதாகச் சொன்னுள்? மருமகனுக இல்லையே? 'ரங்கன் என் பிள்ளையைப் போல' என்று சுலபமாகச் சொல்லும் வாய்க்கு 'மாப்பிள்ளை' என்று கூற வராது!''

''உன் தங்கையைக் காப்பாற்றிக் கொடுத்தேன் என்பதால் அன்றைக்கு எவ்வளவு தூரம் உன் அம்மா என்னை வாய் விட்டு வாழ்த்தினுங்க! நாமகூட அப்புறமா தமாஷாகப் பேசிச் சிரிச்சுக் கிட்டிருந்தோமே? அனுவைக் கை தூக்கி விட நான் கோக்கர்ஸ்வாக்கில் தரையில் படுத்தபோது உன் அப்பா

அலகாபாத் பாங்கில்
ஸேவிங்ஸ் பாங்க் கணக்குத்
தொடங்குவது சிறுபிள்ளை
விளையாட்டுப் போன்றது



***இன்றே ஒரு சேவிங்ஸ் பாங்க் கணக்குத் தொடங்குங்கள்***

[illegible]

[illegible]

# அலஹாபாத் பாங்க்

ஹெட் ஆபீஸ்: 14, இந்தியா எக்ஸ்சேஞ்ச் பிளேஸ், கல்கத்தா-1

**நீங்கள் தாராளமாகப் பழகுவதற்குரியது என்று உணர்த்துகின்ற பாங்க்**

PASTN



குடும்பங்களின் பேராதரவு பெற்றது
லிப்டன் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் டீ
நல்லதோர் தேயிலையிடம் நீங்கள் கோரும் அனைத்தையும் அளிக்கிறது
LIPTON'S
பாக்கில் செய்த தேயிலை மட்டுமே புதிதாகவும், மணத்துடனும் கிடைக்கிறது

என் காலைப் பிடிச்சுக்கிட்டார் இல்லையா? அதுக்கு நாம் வேடிக்கையாக என்ன விளக்கம் கொடுத்தோம்?''

'''சின்னப்பெண்ணைக் காப்பாற்றிக் கரை சேர்த்துப் புண்ணியத்தை வாரிக் கட்டிண்டது போதாது. பெரியவளைக் கல்யாணம் பண்ணிண்டு என் கவலையைப் போக்குடாப்பா' என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிற வகையில்தான் அவர் உங்கள் கால்களைப் பிடிச்சுண்டதா நாம் தனியே இருக்கும்போது வியாக்கியானம் பண்ணிச் சிரிச்சோம்'' என்று சொல்கையிலேயே மீனுவின் செவ்விய இதழ்களில் சிரிப்பு இழையோடியது. பளபளக்கும் பிளம் பழத்தில் சூரிய ஒளிக் கீற்று ஒன்று தங்கி நர்த்தனமாடியது போல. அடுத்த விநாடி, ''ரங்கன், இதையெல்லாம் நாம் இனி எப்படி மறக்க முடியும்?'' என்று அவள் கேட்டபோது பொலபொலவென்று கண்ணீர் உகுத்தன நயனங்கள்.

''மறப்பதா? சாத்தியமில்லை!'' என்றான் ரங்கன். ''உன் அம்மா தான் என்னை என்னவென்று நினைச்சுட்டாங்க? அவங்களுக்கு என்னை விட உயர்ந்த ஜாதியிலே மாப்பிள்ளை கிடைக்கலாம். ஆனால் என்னைவிட உயர்ந்த ஒரு மனிதன் மாப்பிள்ளையாகக் கிடைக்க மாட்டான் மீனு! இது சத்தியம்! நான் தற்பெருமைக்காகச் சொல்லவில்லை. நிர்ப்பந்தம் ஏற்பட்டதால் பேசுகிறேன்.''

மீனு உடல் சிலிர்த்து நிமிர்ந்தாள். அவள் கண்கள் பிரகாசித்தன. ''எனக்குத் தெரியும்! ரங்கன், எனக்குத் தெரியும்'' என்றாள், இதயம் நிரம்பி வழியும் ஆனந்தத்தோடு. ''நீங்கள் குறிப்பிடும் இந்தச் சத்தியம்தான் எத்தனை அழகாக இருக்கிறது! அழகு மயமான இந்த சத்தியம் என் தாயாருக்கு ஏன் புலப்படவில்லை?''

''பார்க்க மறுக்கறாங்க மீனு. நான் பார்க்க வைப்பேன்! அதற்குக் காலம் வரும்!''

அவர்கள் பேச்சு மேலே தொடர முடியாது தடைப்படும் விதமாக ஒரு சலசலப்புச் சத்தம் கேட்டது. தாங்கள் தனிமையில் இருப்பதை வேவு பார்ப்பது போல் ஒளிந்திருந்து யாரோ கவனிக்கிறார்கள் என்று உணர்ந்தாள் மீனு. 'சை! எதற்கு மறைந்திருந்து பார்க்க வேண்டும்? இங்கே நடக்கக் கூடாதது என்ன நடந்துவிட்டது? என்ன வேண்டுமோ

## கடவுள் அருள்!



□ "கடவுள் அருளால் சுகமாய் முடிந்தது" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பான் வேலைக்காரன். ஆனால் இந்தச் சொற்களைக் கேட்டாலே கடுங் கோபம் வரும் அரசனுக்கு. "என்னடா, எதற்கெடுத்தாலும் 'கடவுள் அருள், கடவுள் அருள்' என்று சொல்கிறாய்?" என்று கடிந்து கொள்வான்.

ஒரு நாள் சொந்த ஊருக்குச் சென்று திரும்பினான் வேலைக்காரன். அடிக்கடி ஊருக்குப் போய் வரும்போதெல்லாம், தன் தோட்டத்தில் விளைந்த பழங்களைக் கொண்டு வந்து அரசனுக்குக் கொடுப்பது வழக்கம். அதே போல் இம்முறையும் சில பழங்கள் கொண்டு வந்தான். அரசன் பழங்களைக் கண்டதும் ஒவ்வொன்றும் எடுத்து, வேலைக்காரனின் மீது வீசி எறிந்தான். பழங்களும் குறி தவறாமல் வேலைக்காரன் தலையில் பட்டுக் கீழே விழுந்தன.

அரசன் கேட்டான்: "எதற்கெடுத்தாலும் 'கடவுள் அருள்' என்பாயே இப்போது எங்கே அந்த அருள்?"

வேலைக்காரன் பொறுமையோடு, "அரசே! இப்போதும் கடவுள் அருளால் எல்லாம் சுகமாய் முடிந்தது. பாருங்கள், தோட்டத்திலிருந்த மரங்களிலிருந்து விளாம் பழம், அத்திப் பழம் ஆகியவற்றைப் பறித்தேன். தங்களுக்கு விளாம்பழம் கொண்டு வரலாம் என்று நினைத்தேன். பிறகு, வருஷா வருஷம் ஒரே வகைப் பழத்தைக் கொடுப்பானேன் என்று அத்திப்பழம் கொண்டு வந்தேன். அத்திப் பழத்துக்குப் பதில் விளாம்பழம் கொண்டு வந்திருந்தால் இன்றைக்கு என் கதி என்னவாயிருக்கும்?" என்றான். - சேநாவி. பாரதி. □

## ஷேக்ஸ்பியரால் பிழைப்பவர்கள்!



□ ஆங்கில நாடகாசிரியரும், மகா கவியுமான ஷேக்ஸ்பியரால் உலகம் முழுவதிலும் சுமார் எட்டு லட்சம் பேருக்கு நிரந்தரமான வேலையும் வருமானமும் கிடைத்து வருகின்றன. எழுத்தாளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், இலக்கிய விமர்சகர்கள், புத்தக வெளியீட்டாளர்கள், நடிகர்கள், தயாரிப்பாளர்கள், சிற்பிகள், ஓவியர்கள், புத்தகம் பைண்டு செய்வோர், உல்லாசப் பயண வழிகாட்டுவோர் மற்றும் ஷேக்ஸ்பியர் சம்பந்தப்பட்ட பொருள்களை விற்பனை செய்வோர் ஆகியோர்தான் அந்த நபர்கள்.

ஆதாரம்: 'நியூ டைம்ஸ்' □

நேருக்கு நேர் வந்து கேட்கட்டுமே?'' என்று ஆத்திரப்பட்டவளாகச் சரே லென்று திரும்பினாள். புதர்களை விலக்கி வழி ஏற்படுத்திக் கொண்டு வந்ததால் சலசலப்பு உண்டான திசையில் அமிர்த லிங்கத்தின் முகம் ஒரு விநாடி தெரிந்தது. அது முன்னெப்போதையும் விட அதிக மான அருவருப்பைத் தரும் வகையில் விகாரமான பாவத்துடன் காணப்படுவ தாக மீனாவுக்குத் தோன்றியது. அடுத்த கணம் அவன் விலக்கிப் பிடித்திருந்த கிளைகளை விட்டுவிடவே அவை சுய நிலைக்குத் திரும்பி அவன் முகத்தை மறைத்து விட்டன. அவனும் திரும்பிப் போய்விட்டான் என்பதற்கான காலடி ஓசையும் கேட்டது.

பேரீஜம்மிலிருந்து கிளம்பி வழியில் வைகை அணையின் தொலை தூரக் காட் சியைப் பார்த்துவிட்டு ஹோட்டலை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். பஸ், பில்லர்ராக்ஸை நெருங்கியதும் சாலை ஓரமாக ஒரு திருப்பத்தில் நினை வுச் சின்னம் ஒன்று அமைக்கப்பட்டிருப் பதைப் பார்த்து விட்டுப் பிரயாணி களில் ஒருவர் கேட்டார்: ''என்ன இது? ஏதோ எழுதியிருக்கே?''

''அதை நான் பில்லர்ராக்ஸுக்கு வந்திருந்தபோது விசாரிச்சேன்'' என் றார் பத்மநாபன். ''இங்கே ஒரு லாரி கவிழ்ந்தபோது ஒரு பெண்மணி இறந்து போனாளாம்! அவள் ஞாபகார்த்தமாக அதை வைத்திருக்கிறார்கள். ரோடே வளைஞ்சு வளைஞ்சுதான் போறதுன் னாலும் குறிப்பாக இந்த வளைவு காலை வாரி விட்டு விடக் கூடியதுதான். ரொம்ப ரிஸ்க்கி!''

'''சக்கரத்தை வாரி விட்டு விடக் கூடியதுதான்' என்று சொல்லுங்கள்'' —முதலில் பேசியவர் திருத்தப் பிரே ரணை கொண்டுவந்துவிட்டுச் சிரித்தார்.

''ஆமாம்; இது ஒன்றுதான் பாக்கி யிருந்தது. இதையும் கேள்விப்பட்டாகி விட்டது'' என்று முணுமுணுத்தாள் அம்புஜம். ''இந்த ஊருக்கு வந்ததி லிருந்து கொலை, தற்கொலை, விபத்து என்றுதான் பேச்சு.''

''ஏன் ஸார், கால்ஃப் கிளப் வந்து விட்டதே, நீங்க இறங்கிக்கலையா?'' என்று கேட்டார் பத்மநாபன் அமிர்த லிங்கத்தைப் பார்த்து.

''டயர்ட்!'' என்றான் அவன். ''பஸ்ஸிலேதான் போயிட்டு வந்தோம் என்றாலும் அசதியாகத்தான் இருக்கு. ஹோட்டலுக்கே வந்துடறேன்.''

ஐந்தாறு நிமிஷங்களுக்குப் பிறகு பஸ் ஹோட்டல் கேட்டைத் தாண்டி உள்ளே நுழைந்தது. அதைப் பார்த்த துமே காரியாலய அறையிலிருந்து முத லாளி தனராஜ் ஓட்டமும் நடையுமாக வந்தார். டி. ஐ. ஜி. கீழே இறங்கக் காத்திராமல் இவரே பஸ்ஸுக்குள் ஏறி அவரை அணுகினார். தமக்கு ஒரு முக்கியத்துவத்தை வ ர வ ழை த் து க் கொண்டு ரகசியமாகப் பேசுவது போல் ஆனால் பலர் காதில் விழும்படி சொன்னார்: ''ஸார்! ஸைக்கோவைக் கண்டுபிடிச்சுட்டேன்! இங்கே வந் திருந்தான்!''

''என்னது!'' என்ற ஆச்சரியக் குரல் களும், ''என்னது?'' என்ற கேள்விக் குரல்களும் பல கண்டங்களிலிருந்து எழுந்தன.

''எதற்காக ஐயா இப்படிப் பீதியைக் கிளப்பறீங்க, அனாவசியமாக? என்ன நடந்தது? ஆபீஸுக்கு வந்து நிதான மாகச் சொல்லுங்க'' என்றார் நட ராஜன்.

அவ்வாறே அவர் பஸ்ஸிலிருந்து இறங்கிக் காரியாலய அறைக்கு வரும் வரை காத்திருந்துவிட்டுத் தனராஜ் கூறி னார்: ''ஐந்து நிமிஷங்களுக்கு முன்னால் தான் அவன் இங்கே வந்தான். அறை ஏதாவது இருக்குமான்னு கேட்டான். 'ஸீஸன் ரொம்ப டல்லு தம்பி; ஒண் ணுக்கு ரெண்டா வேணுமானாலும் அறைகள் தரேன்'னு சொல்லிக்கிட்டே ரிஜிஸ்தரை எடுத்து அவன் முன்னால் வைச்சேன். அந்தச் சமயம் பார்த்து உங்களைப் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து யாரோ டெலிபோனில் கூப்பிட்டாங்க. 'யாரு டி. ஐ. ஜி.யா? பேரீஜம் போயிருக்காரே! வர்ற நேரம்தான். வந்தவுடன் பேசச் சொல்றேன்'ன்னு சொல்லிவிட்டு ஃபோனை வைச்சேன். அதைக் கேட்டுக்கிட்டு இருந்தான் பாருங்க, முகம் வெளுத்துப் போச்சு. 'ஏன் ஸார்! டி. ஐ. ஜி. இங்கே தங்கி இருக்காரு?'ன்னு கேட்டான்.

'''ஆமாம். ஒரு மாசம் லீவிலே ஓய் வுக்குன்னு வந்தார். பாவம் வந்ததி லிருந்து ஒண்ணு மாத்தி ஒண்ணு அவ ருக்கு வேலை வந்துக்கிட்டே யிருக்கு'ன்னு நான் பேச்சை முடிப்பதற்குள் அவன் பெட்டியைத் தூக்கிக்கிட்டுக் கம்பி நீட்டிட்டான். வெளியே கார் கிளம்பற சத்தம் கேட்டுச்சு.''

''என்ன கார்? நம்பர் என்ன?'' என்று டி. ஐ. ஜி. நடராஜன் கேட்கவும், தனராஜ் தலையைச் சொறிந்தார். அதற் குள் காக்கி உடை அணிந்த ஹோட்டல் சிப்பந்தி ஒருவன் கூறினான்: ''எனக்குத் தெரியும் ஸார்! ஃபியட். பழுப்புக் கலர். நெம்பர் 3428.''

''குட்'' என்று அந்தப் பையன் தோளில் தட்டிக் கொடுத்துவிட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு ஃபோன் போட் டார் டி.ஐ.ஜி. நடராஜன். (தொடரும்)



# இளைஞர் சமுதாயம்

## 14. சேவையில் ஒருமைப்பாடு

'என் பிள்ளை பொல்லாதவன்; உங்கள் பிள்ளைகளைக் கொஞ்சம் கண்டித்து வையுங்கள்' என்கிற கதையைக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஒவ்வொருவருக்கும் தவறு செய்பவர்கள் பிறர்தான் என்று ஒரு தீர்மானம். இந்தத் தீர்மானம்தான் நம் சமுதாயத்தையே கெடுக்கிறது.

நான் பழனியில், இளைஞர் பேரவை அங்கத்தினர்களைக் காணச் சென்றபோது அவர்கள் இதுபற்றித்தான் வருத்தம் தெரிவித்தனர்.

இளைஞர் பேரவையின் செயலாளர் எம். எஸ். ஜாபர் அலி மிகவும் துடிப்புள்ள இளைஞர். "மக்கள் ஒருவரையொருவர் நன்றாய்ப் புரிந்து கொள்ள வேண்டும், ஸார்! நாம் அனைவரும் இந்தியர்; அனைவரும் ஒரு தாய் மக்கள். நம்மில் வேற்றுமை இல்லை. நமக்காக நாம் வாழுவதோடு மற்றவர்களுக்காகவும் வாழ வேண்டும். இளம் தலைமுறையினருக்கு இவ்வழியில் பயிற்சி அளிக்க வேண்டும். அது தான் நம் தலையாய கடமை..." என்று அவர் என்னிடம் உணர்ச்சி பொங்கக் கூறினார்.

"அதற்கு என்ன செய்யலாம் என்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"ஒவ்வொரு தனி மனிதனும் தன்னிடமுள்ள குற்றம் குறைகளை உணர வேண்டும். இந்த எண்ணத்தை இளைஞர்களிடம் வளர்க்க வேண்டும். இதைத்தான் நாங்கள் எங்கள் இளைஞர் பேரவையின் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

ஏதிலார் குற்றம்போல்
தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு"

என்ற வான்புகழ் வள்ளுவரின் வாக்கையே உபதேசமாகக் கொண்டுள்ளோம். இளைஞர் பேரவையின் அங்கத்தினர்களான நாங்கள் எங்களிடமுள்ள குற்றங்களை உணர்ந்து திருத்திக்கொண்டு பாவ மன்னிப்புக் கோருவதை முக்கியமான குறிக்கோளாகக் கொண்டுள்ளோம். இது சிரமமான குறிக்கோள்தான். ஆனால் 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது" என்ற செயலாளரின் உணர்ச்சிமிக்க பேச்சு எனக்குப் பரம திருப்தியை அளித்தது.

"இன்னும் என்ன குறிக்கோள்கள் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு இளைஞர் பேரவையின் செயலாளர் அளித்த பதில் ஒரு கவிதை மாதிரி இருந்தது. அதை அப்படியே உங்களுக்காகக் கீழே தந்திருக்கிறேன்.

1. அரசியல் சடுபாடில்லாத அறப்பணி ஆற்றுதல்.

2. கல்வி வளர்ப்பதில் கவனமாயிருத்தல்.

3. அறிவு வளர்ச்சியில் அனைவரும் உழைத்தல்.

4. ஏழை மாணவர்கள் ஏற்றமுற உழைத்தல்.

5. பட்டி மன்றங்கள் பாங்குற அமைத்தல்.

6. ஆன்ம நெறியில் ஆர்வம் காட்டுதல்.

7. கவியரங்குகள் கவினுற அமைத்தல்.

8. கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி அனைவரும் மகிழ அடிக்கடி அமைத்தல்.

9. இலவசக் கல்விப் பயிற்சி அளிக்க இயன்றவரையில் முயற்சி எடுத்தல்.

இளைஞர் பேரவை, பழனியம்பதியில் 22-1-72 அன்று பழனி நகரவைத் தலைவர் டாக்டர் கே. கோபாலன் அவர்கள் தலைமையில் தொடங்கப்பட்டது. இதுவரையில் இளைஞர் பேரவை ஆற்றிய தொண்டுகளைப் பற்றி ஆர்வத்தோடு கேட்டேன். செயலாளர் சொன்னார்:

"பழனியில் நடைபெறும் திருவிழா உற்சவக் காலங்களில் சுகாதார இலாகாவினரால் போடப்படும் தடுப்பு ஊசிக்கு யாத்திரிகர்களை அணுகி, அவர்களின் பயத்தைப் போக்கி,

அமைத்தும் சென்று ஊசி போட வழி செய்து வருகிறோம்.

''நரை வார்டுகளில் எரியா மின் விளக்கு கிடம் எரிய வைக்க வார்டு கவுன்சிலர்களை அணுகி ஆவன செய்து வருகிறோம். (சென்னையில்கூட இந்தப் பணியை மேற்கொள்ள இளைஞர் சங்கம் ஏதேனும் ஒன்று முயலலாம். இருள் சூழ்ந்த பல தெருக்களுக்கு வெளிச்சம் போட்ட புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொள்ளலாம்!)

''பழனி எல்லைக்கு உட்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் சம்பத்தில் நடைபெற்ற பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவருக்கு அன்பளிப்பு வழங்கி வருகிறோம். பழனி நகரில் [illegible] பணி நகராட்சி ஆணையாளர் திரு கே. பொன்னுச்சாமி அவர்களின் தலைமையில் தொடங்கப்பட்டுச் சிறப்பாக நடந்து வருகிறது. பேரவை அங்கத்தினர்கள் திடகாத்திரத்துடன் நோயற்ற வாழ்வு வாழ விளையாட்டுப் பயிற்சி பெறுகின்றனர். மேலும் அங்கத்தினர்களின் சொல்லாற்றல் வளர வாரம் தோறும் பொதுத் தலைப்பு ஒன்றைத் தேர்ந்தெடுத்துச் சிறந்த சொற்பொழிவாளர்கள் தலைமையின் கீழ் மேடைப் பேச்சில் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் அரசியல் கலக்கக் கூடாது என்று உறுதி பூண்டிருக்கிறோம். இளைஞர் பேரவை அங்கத்தினர்களாக உள்ள பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு வசதியற்ற மாணவர்களுக்கு இலவசக் கல்வி போதனை அளிக்கப்பட்டு வருகிறது.''

பழனி இளைஞர் பேரவையின் தொண்டுகளைக் கேட்டு நான் அயர்ந்து போனேன். இந்த இளைஞர் மன்றத்தில் மிகவும் பாராட்டப்பட வேண்டிய அம்சம் ஒன்று உள்ளது. பல முஸ்லிம் இளைஞர்கள் மன்றத்தில் அங்கத்தினர்களாக இருப்பதுதான் அது. இன, மத, வேறுபாடுகள் எதுவும் இன்றி இளைஞர்கள் இணைந்து தொண்டாற்றுவது மிகவும் பாராட்டுக்கு உரியது. அங்கத்தினர்களில் கண்ணன், ஆறுமுகம், கணேசன், கோபால் ஆகிய அசல் தமிழ்ப் பெயர்களுக்கு இடையில் உபயதுல்லா, ஜாபர் அலி, பஷீர் அகமது, மீரான், யாக்கூப் என்ற முஸ்லிம் பெயர்களையும் பார்க்கும்போது சந்தோஷமாகத்தான் இருக்கிறது.

கடைசியில் பேட்டி முடியும் தருணத்தில், இளைஞர் பேரவை அங்கத்தினர்கள் சுவையான விஷயத்துக்கு என்னைக் காத்திருக்கும்படி விடவில்லை. பழனிப் பஞ்சாமிர்தத்தை விடச் சுவையான விஷயம் ஒன்று இருக்க முடியுமா? அது கிடைத்துவிட்டது! — [illegible]



# அம்மா

## ரா. கணபதி

தன் மகள் ராது, தன்னைப் பொருட்படுத்தாமல் சாரதையிடம் ஒட்டிக் கொண்டிருக்கிறாளே என்ற ஆத்திரத்தில் ஸுரபாலா தகாத பழியைச் சுமத்தினாள் திவ்விய மாதாவின்மீது.

அம்மா மிகவும் தெளிவாக, ''சரி ஸுரபாலா! இதோ உன் பெண் கண் எதிரிலேயே படுத்திண்டிருக்கா. நான் உங்களுக்குக் குறுக்கே நிற்கவில்லை. இப்பவே இவளை அழைச்சுண்டு போய்ச் சேரேன்'' என்றாள்.

இப்படி அம்மா தீர்மானமாகச் சொன்னதும் ஸுரபாலாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவள் சற்றும் எதிர்பாராத பேச்சு அது. திகைத்தாள். பிறகு முன்னிலும் கொதிப்படைந்து, ''எங்களையா போகச் சொல்றே? எங்களோட சொத்தையெல்லாம் அமுக்கிட்டு வெளியிலேயும் துரத்தறியா, ராட்சஸி! நீ தொலை இங்கேயிருந்து! ஓடு இந்த வீட்டை விட்டு'' என்று கூச்சலிட்டாள். அவள் முகம் செந்தணலாயிற்று. அடுக்களைக்குச் சென்றாள். அடுப்பிலிருந்து ஒரு கொள்ளிக்கட்டையை எடுத்துக் கொண்டு அசுர பலத்துடன், அம்மாவை நோக்கிப் பாய்ந்தாள் ஸுரபாலா.

வீட்டிலிருந்த பெண்டுகள், பிரம்மசாரிகள், அடியார் அனைவரும் ''ஹா ஹா'' என்று பேயறைந்தாற் போல் ஸ்தம்பித்து நின்று விட்டார்கள்.

இதோ, அம்மாவின் தலையில் கொள்ளிக்கட்டையின் பலத்த அடி விழப் போகிறது! ''ஒரு பைத்தியத்தின் கையாலே இதோ சாகிறேன். யாரும் இங்கே இல்லையா?'' என்ற தீனமான அலறலுடன் நம் மாதா சாய்ந்தாள்.

பிரம்மசாரி வரதனுக்கு ஓர் ஆவேசம் வந்தது. மின்னல் வேகத்தில் பாய்ந்து ஸுரபாலாவின் கையிலிருந்த கொள்ளியைப் பிடுங்கினார். அதை அவளை நோக்கியே ஓங்கினார். அவள் மகா பீதிகரமாகக் கூச்சலிட்டுக் கொண்டே வெளியில் ஓடினாள்.

அம்மா உடல் படபடக்க எழுந்து அமர்ந்தாள். ''பைத்தியக்காரி! என்ன காரியம் பண்ண இருந்தே! அந்தக் கை உன் உடம்பிலே தரிச்சு நிற்குமா?'' என்ற வார்த்தைகள் அவள் வசமில்லாமலே உதட்டிலிருந்து உதிர்ந்தன.

''நான் என்ன சொன்னேன்?'' என்றாள் அடுத்த விநாடி. ''என்ன சொன்னேன், என்ன சொன்னேன்?'' என்று பைத்தியம்போல் சிறிது நேரம் கேட்டுக் கொண்டேயிருந்தாள். ஒரு பரம பரிதாபமான விம்மல் அவள் தொண்டையிலிருந்து வெடித்தது. நடக்க முடியாமல் நடந்து சென்று டாகுரின் படத்தின் முன் கைகுவித்து அஞ்சலி செய்தாள். கண்கள் மழையாகப் பொழிந்தன. டாகுரின் பாதத்தில் விழுந்து உடலே பிளந்து போவதுபோல் தேம்பித் தேம்பி அழுதாள். உடைந்து உடைந்து வார்த்தைகள் வெளியாயின: ''என் பிரபோ! நான் அபராதியாகி விட்டேன். ஜன்மா எடுத்ததுக்கு ஒரு பெரிய குற்றமும் பண்ணிவிட்டேன்! என்ன காரியம் செய்துட்டேன்! இதுக்

---

தலைப்பில் காண்பது ஜெயராம்பாடியில் அம்மாவின் ஜன்ம ஸ்தலத்தில் அமைந்துள்ள ஆலயம்.

எதிர்ப் பக்கத்தில்: பேலூரிலுள்ள அம்மாவின் சமாதி ஆலயம்.

குத் தண்டனை என்ன? டாகூர், டாகூர், என்னோட இந்த வாயிலிருந்து சாபம் வந்துடுத்தே. நான் என்ன பண்ணுவேன்? அறுபத்தைந்து வருஷமா ஈ எறும்பைக் கூடத் தூஷிக்காமல் இருந்ததெல்லாம் சொப்பனமாப் போச்சு அப்பனே! நான் அம்மாவாக மட்டுமே இருக்க முடியும்னு நினைச்சுண்டிருந்தேன். இன்னிக்கு அம்மாத் தன்மை என்னை விட்டுப் போச்சே! இனி இந்தச் சரீரமும் போயிட வேண்டியதுதான், பிரபு. உங்களோட உலகத்துலே அம்மாவாக வாழத் தெரியாத எனக்கு ஏது இடம்? போறும் ஸ்வாமி போறும். இன்னமும் பராமுகம் பண்ணுதேள். இனியும் காலம் கடத்திச் சோதிக்காதேள், ஸ்வாமீ....'' கேட்கிறவர்களின் நெஞ்சமெல்லாம் கரைந்துருகக் கதறினுள் அம்மா.

டாகூர் செவி சாய்த்து விட்டார்! அன்று அம்மா படுத்த படுக்கையானது தான். அதுவே அவளை மீளா நித்திரைக்கு இட்டுச் சென்றது.

## 43. உடலை உகுத்தாள்; உலகை உகுப்பாளா?

அனைத்திலும் நிறைந்துள்ள பொருள் எதுவோ அது அழிவதே யில்லை என்று உணர்வாய். என்றும் மாறு அப்பொருளை அழிக்கும் ஆற்றல் எதற்கும் இல்லை. நித்திய வஸ்துவாம், நாசமற்றதாம், அளவிடற்கரியதாம் உள்ளவன் சரீரி. அவன் எடுக்கும் சரீரங்களுக்கே அழிவுண்டு.

— பகவத்கீதை 2-17,18

**1919** டிசம்பர் பதின்மூன்றும் தேதி. ஜயராம்பாடியில் ஒரே ஜய கோஷம். அம்மாவின் ஜயந்தித் திருநாள் அல்லவா? உடல் நலமிழந்த அம்மா நீராடவும் முடியாமல் கடற்பஞ்சைத் தோய்த்து உடம்பைத் துடைத்துக் கொண்டாள். பக்தி தரும் சக்தியை கொண்டு டாகூருக்குப் பூஜை செய்தாள். பிறகு அன்பு தரும் பலத்தைக் கொண்டு நீண்ட நேரம் தரிசனம் தந்தாள். அடியார் பலர் அவளுக்குச் சந்தன குங்குமம் மட்டித்தனர். மெலிந்த தோளில் ஏராளமான மலர் மாலைகள் ஏறின. மகா சுமங்கலியாக, நித்திய கல்யாணியாகக் கட்டிலில் அமர்ந்து அனைவருக்கும் பாத ஸ்பரிசன பாக்கியத்தை வழங்கினுள்.

அடியார் எல்லோரும் உண்டு முடிந்த பின்பே ஆகாரம் கொள்ளுவதை ஒரு விரதமாக வைத்திருந்த அம்மா இன்று அதிசயத்திலும் அதிசயமாக, டாகூரின் பிரசாதத்தில் ஒரு சிறிதைத் தானே முதலில் உட்கொண்டாள். உணவு வகைகளைத் தனது பிரசாதமாகவும் ஆக்கி, இரட்டிப்புப் புனிதமாக்கி அடியாருக்கெல்லாம் பரிமாறச் செய்தாள். இது நாள்வரை அம்மாவிடம் எத்தனையோ அநுக்கிரகங்களை எளிதிலே பெற்றவர்களுக்கும் அவள் உண்டு எஞ்சிய பிரசாதத்தைப் பெறும் பாக்கியம் மட்டும் கிடைத்ததில்லை. இன்று அந்தக் குறையைத் தீர்த்து விட்டாள் தேவி. இதில் ஆனந்தம் கொள்ளும்போதே சில உள்ளங்கள், 'அம்மா வழக்கத்துக்கு மாறுக நடந்து கொண்டாளே! இந்த ஜயந்தி தான்...?' என வேதனையில் சிந்தித்தன.

அதன் பின் அம்மாவின் காய்ச்சல் உக்கிரமாயிற்று. அப்போதும் அடியார்கள் வந்த வண்ணமிருந்தனர். முன்னிலும் அதிகமாகவே வந்தனர்—அம்மா இந்தப் புவியில் இருப்பதற்குள் அவளைக் கண்டுவிட வேண்டும் என்பதால். எல்லையிலா அசக்தியுற்றிருந்த போதிலும் அம்மாவுக்கு அவர்களை ஏமாற்ற மனம் வருவதில்லை. அவர்களிடம் பேச முடியாமல் பேசினுள். ஏன், மந்திரோபதேசம்கூடச் செய்தாள். சிதைந்து கொண்டேயிருக்கும் சரீரத்தில் அவர்களது பாவத்தை வாங்கிப் புதைத்துக் கொண்டு மேலும் துயர் அநுபவித்தாள்.

காசியில் ஏதோ முக்கியமான பணியில் ஈடுபட்டிருந்த சாரதாநந்தர், அம்மாவைக் கல்கத்தா உத்போதனில் 'கடுங் காவல்' வைத்தாலே பக்தர்களின் படையெடுப்பைத் தடுக்க முடியும் என்று தீர்மானித்தார். அப்படிச் சொன்னுல் அம்மா வரமாட்டாள் என்பதால் அவளுக்கு நிபுணர்களைக் கொண்டு சிகிச்சை செய்ய வேண்டியது தங்கள் கடமை என்றும் அதன் பொருட்டு அவள் கல்கத்தாவுக்கு வந்தாக வேண்டும் என்றும் தகவல் அனுப்பினுர். அம்மாவும் சம்மதித்தாள்.



ராது, ஸுரபாலா, நளினி, மாகு, பிரம்மசாரி வரதன் ஆகியோர் புடைசூழ அம்மா ஜயராம்பாடியை விட்டுப் புறப்பட்டாள். (இடைக் காலத்தில் அம்மாவிடம் அநியாயமாகச் சண்டை போட்டுப் பிரிந்த நளினி, மாகு ஆகியோரையும், சகிப்பு சொரூபிணியான சாரதை ஜயராம்பாடியில் தன்னுடன் சேர்த்துக் கொண்டு விட்டாள்.)

**‘ஸ்**வர்காதபி கரீயஸீ’ (பொன்னுலகினும் மேலானது) என்று சொல்லி எந்தப் பிறந்தவூர் மண்ணை அம்மா தலையில் தூவிக்கொள்வாளோ அந்த ஜன்மஸ்தலத்திலிருந்து அம்மா விடை கொண்டது அன்பும் சோகமும் இழையும் நிகழ்ச்சி. ஊர்த் தெய்வங்களனைத்திடமும், "போகிறேன், போகிறேன்" என்று சொல்லிக் கொண்டாள்.

குழந்தைப் பிராயத்திலிருந்து எத்தனையோ முறை தன் புண்ணிய மேனி நனைக்க நீராடிய புண்ணியபுகுர் ஏரிக் கரைக்குச் சென்று நிமலமாக நின்றாள். அங்கிருந்து திரும்புகையில் படித் துறையில் தடுக்கி விழுந்தாள் தேவி. ஊராருக்கு நெஞ்சிற் சுட்டாற் போலிருந்தது.

டாகூருக்குப் பூஜை செய்துவிட்டு, அந்தப் படத்தைத் துணியில் சுற்றி ஒரு பெட்டியில் வைத்தாள். விழுந்து நமஸ்கரித்தாள். அந்தப் பூஜாக் கிருகத்தில் பிரேமைச் சிகரமான அம்மாவின் சிரம் கடைசி முறையாகப் படிந்தது.

வாசலில் பல்லக்கு வந்து நின்றது.

அம்மா சிரித்தாள். "என் சிம்மவாஹினியோட எல்லைக்குள் நான் பல்லக்கிலே ஆரோகணிச்சுப் போவேனா? ஊஹூம்! கிராம எல்லை முடிகிற வரை நடந்தே வருவேன்" என்று கிளம்பினாள். வயோதிகம், வியாதி, அதோடு காலையில் குளக்கரையில் தடுக்கி விழுந்த வலி வேறு. உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. ஆயினும் பல்லக்கில் ஏறாமல் பாத மலர் நோக நடந்தாள்.

ஊர் ஜனங்கள் வந்து மொய்த்துக் கொண்டனர்.

"தேவி, காளீ! உடம்பெல்லாம் குணமாகி, சீக்கிரமே திரும்பி வா, தாயே! எங்க கண்கண்ட தெய்வமே!" என்று கூறி அவர்கள் நமஸ்கரித்தார்கள்.

"சகலமும் டாகூர் கையிலே இருக்கு: அவர் விட்டபடியாகும்" என்று அம்மா விட்டேற்றியாக விடை பகர்ந்தாள்.

"அப்படிச் சொல்லாதே மகராஜி! எங்களை மறந்துடாதே தாயே!" என்று மக்கள் முறையிட்டனர்.

"உங்களை மறக்கறதா? அது நடக்காத காரியமாச்சே" என்று கருணை கொட்டச் சொல்லிக் கொண்டே நடந்தாள் அம்மா.

கிராம எல்லை கடந்ததும் ஜயராம்பாடி என்ற அந்தப் பரம பாக்கியம் செய்த கிராமத்தைத் திரும்பிப் பார்த்துக் கைகுவித்தாள். "ஸிம்மவாஹினி, நமஸ்காரம்; யாத்ராஸித்திராயா, நமஸ்காரம்; ஷஷ்டி மாதா, நமஸ்காரம்" என்று ஊர்த் தெய்வங்களின் பெயரையெல்லாம் சொல்லி வணங்கினாள்.

அவள் பல்லக்கிலே அமருகிற தருணத்தில் தம்பி பிரஸன்னரின் இரண்டாவது மனைவி ஸுவாஸினி, அம்மாவுக்குத் தாம்பூலம் அர்ப்பணித்து நமஸ்கரித்தாள். "ஸுவாஸின்யர்சன: ப்ரீதா" என்று லலிதா சகஸ்ரநாமம் சொல்வதற்கேற்ப, அதை அம்மா பிரீதியுடன் ஏற்று அவளைத் தழுவி ஆசி வழங்கினாள். அம்மாவின் பிறந்தக உறவினருள் அவளது மகிமையை ஓரளவு புரிந்து கொண்ட ஒரே ஒருத்தி சுவாஸினி. அவள் கொண்டு வந்திருந்த கும்ப தீர்த்தத்தால் தன் பாதத்தைக் கழுவுமாறு பிரம்மசாரி ஹரியைப் பணித்தாள் அம்மா. அவர் அவ்விதமே செய்தார். "இந்தா, என் ஞாபகார்த்தம்" என்று அவரிடம் தான் போர்த்திக் கொள்ளும் துப்பட்டாவை வீசினாள்.

கிராம மக்கள் அனைவரும் நனைந்த கண்களுடன் பார்த்துக் கொண்டிருக்கையில், ‘ஜய் மாதாஜி’ என்ற கோஷத்துடன் போயிக்களின் தோள் மீது பல்லக்கு உயர்ந்தது; விருவிருவென்று நகர்ந்தது; பார்வையிலிருந்து மறைந்தது!

**ப**ல்லக்குக் குலுக்கலில் அம்மாவின் உடல் ஆடிக் களைத்துவிட்டது. வழியில் சாந்திநாதர் ஆலயம் வந்தவுடன் இறங்கினாள். சுவாஸினி செய்து அனுப்பியிருந்த பட்சணங்களை சாந்திநாத சிவனுக்கு நிவேதனம் செய்தாள். அங்கு கூடியிருந்த ஏழைப் பாலகர்களுக்குத் தானே அதை விநியோகம் செய்தாள். உடன் வந்த மற்றவர்களுக்கும் அளித்தாள். ராது வேறு ஒரு பல்லக்கில் முன்னமே சென்றுவிட்டதால் "ராதுவுக்கு" என்று சொல்லிக் கொண்டு சிறிது பட்சணத்தைப் புடவைத் தலைப்பில் முடிந்து கொண்டாள். பாச முடிச்சு இன்னும் பூரணமாக அவிழவில்லைதான். முற்றிலும் அவிழ்ந்திருந்தால் அம்மாவின் உடல் இந்த உலகில் இருந்திருக்கவே முடியாதே!

மேலும் பல காதங்கள் சென்றபின் அம்மா மீண்டும் பல்லக்கை விட்டிறங்கினாள். மரத்தடியில் ஜமுக்காளத்தை

விரித்து அமர்ந்து கொண்டாள். பல்லக்குத் தூக்கிகளுக்கு அவல் வாங்கி வருவதற்காக வரதனிடம் இரண்டு ரூபாய் கொடுத்து அனுப்பினாள். அங்கிருந்த சுள்ளிகளைக் கொளுத்தி மாகுவின் கைக் குழந்தைக்குப் பால் காய்ச்சிக் கொடுத்தாள். அன்பும் ஊழியமும் அவளது உடலோடு அப்படி ஊறிப் போயிருந்தன!

கல்கத்தா உத்போதனில் வந்திறங்கிய அம்மாவைக் கண்டதும் யோகின்மாவும் கோலாப்மாவும் பதறிவிட்டனர்.

"அம்மா, இப்படி எலும்புக் கூடாக ஆயிட்டேளே! உங்களுக்கு இத்தனை 'உடம்பு'ன்னு எங்களுக்கெல்லாம் தெரிவிக்காமலே கிராமத்தில் இருந்துட்டேளே" என்று அவ்விருவரும் அரற்றினர். அம்மா அவர்களைத் தடவிக் கொடுத்து ஆசுவாசம் செய்தாள்.

டாக்டர் கஞ்ஜிலால் என்ற ஹோமியோபதி வைத்தியர், கவிராஜ் சியாமதாஸ் வாசஸ்பதி என்ற ஆயுர்வேத நிபுணர், டாக்டர் விபின் விஹாரி கோஷ் என்ற ஆங்கில முறை மருத்துவர் ஆகியோர் அம்மாவுக்கு சிகிச்சை செய்தனர். என்ன செய்து என்ன? அம்மாவின் நோய் அவர்களுக்குப் பிடிபடவே இல்லை. வறுத்தெடுத்தது அவளை தாப ஜ்வரம். தினமும் மாறி மாறித் தேக உஷ்ணம் ஏறுவதும் இறங்குவதுமாக, வாரக் கணக்கில் ஓடியது.

எப்பேர்ப்பட்ட இனிய அம்மாவுக்கு எப்படிப்பட்ட கொடூர சித்திரவதை! உடல் வதையை விட உள்ளத்தின் வதைப்பே அதிகமாக இருந்தது. அவளைப் பொறுத்த மட்டில் அது தாப ஜ்வரம் அல்ல. சாப ஜ்வரமாகவே இருந்தது. அன்று கொள்ளிக்கட்டையை ஓங்கி வந்த ஸுரபாலாவைச் சபித்ததற்காகத் தனக்குள்ளேயே கொள்ளியைச் சொருகிக் கொண்டு மாதக் கணக்கில் கடுங் காய்ச்சலை அநுபவித்தாள். அவளே பகர்ந்ததுபோல், நினைத்த மாத்திரத்தில் தன் உடம்பைக் கற்பூரமாகக் கரைத்துச் செல்லக் கூடியவள்தான் அம்மா! ஆயினும் உலக நியதிப்படி தவற்றுக்குத் தண்டனை அநுபவிக்க வேண்டும் என்றே, பிறரது பாபங்களை வாங்கிக் கொண்டதற்காகவும், தன் வாய் திறந்து சபித்ததற்காகவும் அநுபவித்தாள்! மனித காயம் படைத்த எவரும் அம்மாவைப் போல் உழைக்க முடியாது, பொறுமை காட்ட முடியாது, அன்பு செய்ய முடியாது என்பது மட்டுமின்றி, அவளைப் போல் எந்த மனித காயத்தாலும் அத்தனை காய்ச்சலைத் தாங்கியிருக்கவும் முடியாது!

> ஸ்வர்க்கமும் நரகமும் நமக்குள்ளேயே இருக்கின்றன. காமத்தையும் குரோதத்தையும் வளர்த்துக் கொண்டால் நரகத்தில் இருக்கின்றோம். அவற்றைக் குறைத்துக் கொண்டால் ஸ்வர்க்கத்தில் இருக்கிறோம்.
>
> - ஸ்ரீ ரமண மகரிஷிகள்

ஆனாலும் அந்தச் சாபம் அதனால் சக்தி இழக்கவில்லை. தன்மீது கொள்ளி வீச வந்த கை சரீரத்திலிருந்து இற்று விழும் என்று அம்மா மறைமுகமாகச் சொன்னது மெய்யாகத் தொடங்கியது. அம்மா உலகிலிருந்து மறைந்தவுடனே ஸுரபாலாவின் கையில் குஷ்டம் கண்டு அது அழுகத் தொடங்கியது. இது அம்மாவுக்கு முன்னரே தெரியாதா என்ன? ஸுரபாலாவின் கை அழுகி அவள் காணவிட்டாலும் தன் மனசு அழுகிற்றே என்று அழுது கொண்டாள்.

வாலி வதத்துடன் ராமாயணம் முடிந்தால் எத்தனை மாளா வேதனையாக இருக்கும்? அம்மாவின் பரம புண்ணியமான சரிதையின் முடிவில் இப்படி ஒரு பயங்கர சோதனை ஏன்தான் நிகழ்ந்ததோ? ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியாவது வாலி வதத்தில் தன் நடத்தை முற்றிலும் தர்மமானது என்று உறுதியாகக் கருதியதாகவே காண்கிறோம். ஐயனைப் போலவே மநுஷ்ய தர்மத்துக்கு ஆதர்ச மூர்த்தியாக வந்த நம் அம்மாவோ தன்னைக் குற்றவாளியாகவே கருதிக் குமைந்தாள். இந்தச் சரிதையைப் படிப்பவர் யாவரும் அந்த விகல வேதனையில் பங்கு பெறுவதால் ஒருவேளை உலகின் பாப பாரம் சிறிது குறையுமோ என்னவோ? உலக வாழ்வில் பங்கு கொண்டு உலகத் துயரையும் பாபத்தையும் வாங்கிக் கொண்ட அம்மா, தன் குழந்தைகளான நம்மை அவளுக்குக் கடனாளியாக நிறுத்திவிடக் கூடாது என்று காருண்ய மனத்தில் எண்ணினாளோ? அதற்காகவே அவளது துயரத்திலும் பாபத்திலும் நாம் பங்கு கொள்ள வேண்டும் என இப்படி ஒரு நாடகம் நடித்தாளோ? நம் அம்மாவின் தவற்றுக்காக, பச்சாத்தாபத்துக்காக இன்று நாம் வடிக்கும் கண்ணீரே பரம புனிதமானது. வாழ்நாள் முழுதும் சாரதை புரிந்த அநுக்கிரகத்தைப் போலவே, வாழ்நாளில் ஒரே முறை அவளிட்ட சாபமும் நம்மிடம் உண்டாக்கும் உணர்வினால் நம்மைத் தூய்மைப் படுத்துகிறது.

பராசக்தியின் சங்கற்பத்தை நாம் அறிய வொண்ணாது. எக்காரணத்தாலோ அம்மாவால் தானிட்ட சாபத்துக்கு விமோசனம் தர முடியாமலிருந்

தது. ஆயினும் அம்மா உடலே உருத்த சிறிது காலத்திலேயே அவளது ''வெறித் தோழி'' ஸாரபாலாவும் அவளைச் சென்றடைந்துவிட்டாள். குஷ்ட ரோகியாக அவள் நீண்ட காலம் தவிக்காமல் அம்மா அவளைத் தன்னிடம் சேர்த்துக் கொண்டாள்.

**ரா** தியிடம் அம்மாவின் பாச முடிச்சு பெருமளவு அவிழலாயிற்று.

'அத்தை படுத்து விட்டாள். இனி எழுந்திருக்க மாட்டாள். துர்க்குண முண்டமாகவும், துர்ப்பல பிண்டமாகவும் உள்ள தன்னைக் கணவனும் பிரியமாக வைத்து நடத்த மாட்டான்' என்று ராதுவுக்குத் தெரிந்துவிட்டது. ஆத்திரத்திலும், அவலத்தனத்திலும் அடியோடு அறிவிழந்தாள் ராது. தான் பெற்றெடுத்த பச்சைக் குழந்தையையே கரித்தாள். அம்மாவுக்கு அற்புதமாக சுசுரூஷை செய்த சரளாதேவி தான் ராதுவின் குழந்தைக்கும் செவிலித் தாயாக இருந்தாள். தாய் கொடுமைப்படுத்திய சேய் நோய்வாய்ப்பட்டது. டாக்டர் கஞ்ஜிலால், ''ராது ஒரு வழியாக இந்தக் குழந்தையை விட்டுப் போனாலொழிய நான் வைத்தியம்செய்து பயன் இல்லை'' என்று அம்மாவிடம் கூறினார். அந்நியர் அசலார் அனைவருக்கும் அன்னையாக இருந்த சாரதைக்கு, ராதியின் போக்கு சொல்லொணா வேதனையை — ஏன், தோல்வி உணர்ச்சியையே — கொடுத்தது. ''ராதி! உன்னை நாளுக்கும் எடுத்து அரும்பாடு பட்டு வளர்த்தேன். உனக்காக என் மற்றக் குழந்தைகளை எல்லாம் ஓரளவு அலட்சியம் செஞ்சேன். அப்படியிருந்தும் உன்னை உத்தம ஸ்திரீயாக உருவாக்க என்னாலே முடியலையே! நீ எங்கிட்டேயிருந்து எதையுமே எடுத்துக்கலியே!'' என்று கண்ணீர் முட்டக் கூறினாள்.

பரிதாபம்!

கலியின் கோர தாண்டவத்துக்கு இடையில் பாரத ஸ்திரீ தர்மத்தைப் பூரணமாக வாழ்ந்து காட்டி ஜயக் கொடி நாட்டிய தேவி, தோல்வி உணர்ச்சியும் கொண்டாள்! அரற்றினாள்: ''டாகூர் சித்தத்திலே என்ன இருக்குன்னே புரியல்லே. தன்னையே ரட்சிச்சுக்கத் தெரியாத ராதிக்குக் குழந்தை வரம் வேறு ஏன் கொடுத்தாரோ?''

அம்மா ஒருவிதத்தில் அமாநுஷ்யமானவள் எனில், அவளையே உலகில் கட்டிப்போட வந்த ராதியும் இன்னொரு விதத்தில் அமாநுஷ்யமானவள்தான். அம்மாவே புரிந்து கொள்ளாத அந்தப் புதிரை நாம் எப்படி விளங்கிக்கொள்ள இயலும்?

அன்று புத்தாண்டு தினம். உத்போதனில் மாலை வழிபாடு அப்போது தான் முடிந்திருந்தது. ராதுவின் குழந்தை நிணமாக அழுகிறது. ''சரளா எங்கே போய்த் தொலேஞ்சா? அவளைக் கூப்பிட்டு இந்தப் பீடைக்குப் பால் போட்டச் சொல்லுங்கோ'' என்று ராது கத்துகிறாள்.

அம்மா தன் படுக்கையிலிருந்தே, ''இப்போ பால் கொடுக்கிற வேளையில்லே. சித்த முன்னாடிதான் பால் கொடுத்துட்டுப் போனா...'' என்று ஈன சுவரத்தில் குரல் கொடுக்கிறாள். ராது ரௌத்திராகாரமாக இடைமறிக்கிறாள்: ''இந்த வீட்டிலே மூணு தலைமுறையா உனக்கு அடிமையாயிட்டோம். முதலில் எங்கம்மா, அப்புறம் நான். இப்போ இந்தக் குழந்தையும் உன் அடிமை. நீ மனசு வைச்சாத்தான் அதன் பசிக்கற வயித்துக்குப் பால்!'' குழந்தையன்பே அறியா ராது சொல்லத் தகாத வார்த்தைகளால் அம்மாவைச் சுட்டெரிக்கிறாள்.

''போறும், போறும், எனக்கு உங்களோடு போறும். மகாராஜி! உன் பிள்ளையை எடுத்துண்டு நீ இந்த நவ கண்டத்திலே எங்கே வேணா போய் க்ஷேமமாயிரு'' என்றாள் அம்மா.

''நான் ஏன் போவேன்? நீதான் போயேன்! ஒரேயடியா உலகத்தை விட்டுப் போ. என் குழந்தை வாயை நனைச்சுக்கப் பால் கிடையாதுன்னு சொன்ன உன்னைச் சிதையிலே வைச்சு உன் வாயிலே எல்லாரும் அரிசி கொட்டட்டும்'' — மனிதர்களால் பேச முடியாத கொடூரத்தை அன்புத் தத்துவமான அம்மாவின் தத்துப் பெண் மொழிந்தாள்.

அம்மா கரை கடந்த வேதனையும், எல்லையற்ற அநுதாபமும் பொங்க, ''பெண்ணே! என்னைப் போகச் சொல்லிட்டே. நான் போக வேண்டியவள் தான். ஆனால் என்னைத் தவிர உன்னை யார் பார்த்துக்க முடியும்? நான் போனவிட்டு உனக்கு என்ன கதி என்கிறது என் கண் முன் தெரியறது. அதை நினைக்கிறச்சே, வருஷப் பிறப்பா இருக்கிற இன்னிக்கு, 'எனக்கு முன்னாடி இந்த அவலப் பெண் போய்ச் சேராதா?'ன்னு வேண்டிக்கிறேன். உன்னை விட்டுட்டு நிம்மதியில்லாமல்தான் சாகப் போகிறேன். நீ போயிட்டா நிம்மதியாப் போவேன். ஆனால் டாகூர் சித்தத்தை யார் மாற்ற முடியும்?'' என்றாள்.

பக்கத்திலிருந்த பக்தையிடம் திரும்பி, ''மகளே! என் எலும்புக்குள்ளேகூட இவாளுடைய உபாதை ஜ்வாலை வீசித் தகிக்கிறதம்மா! விசிறியைத் தண்ணீ


அழகான காதல் காட்சிகள் உண்டு.. அசிங்கத்தை காண மாட்டீர்கள்!
சோக காட்சிகள் உண்டு.. கண்ணீர் விட மாட்டீர்கள்!!
திடீரென்று பேய் வரும்.. திடுக்கிட மாட்டீர்கள்!!!
சண்டைக் காட்சிகளும் உண்டு.. அதிர்ச்சி அடைய மாட்டீர்கள்!!!!
வெற்றி நடைபோடுகிறது!
சென்னை சித்ரா
ஸ்ரீமுருகன்
சயானி
கமலா
மற்றும் தென்னகமெங்கும்
விஜயா பைனான்ஸ் கார்ப்பரேஷன் வழங்கும்
சிவலக்ஷ்மி மூவீஸாரின்
அவசரக் கல்யாணம்
-நகைச்சுவை சித்திரம்-
கதை-வசனம்: பாலமுருகன் டைரக்ஷன்:

யிலே தோய்ச்சுண்டு வந்து கொஞ்சம் விசிறுவியா?'' என்றாள்.

(அம்மா மறைந்து ஒன்பது மாதத்துக்குள் ராதுவை அவளது கணவர் ஒதுக்கி வைத்து மறுமணம் செய்து கொண்டு விட்டார். ஸ்வாமி சாரதாநந்தர் கருணையுடன் வழங்கி வந்த மானியத்தைக் கொண்டு அவள் ஜயராம்பாடியில் நடைப்பிணமாகக் காலம் தள்ள வேண்டியதாயிற்று. ஆனால் இது லூசபாலாவுக்கு அம்மா கொடுத்தது போன்ற சாபமல்ல. 'இப்படி நடக்க வேண்டும்' என்று அம்மா சபிக்கவில்லை. 'இப்படித்தான் டாகூர் நடத்தப் போகிறார்' என்று முன்கூட்டியே கண்டு அதை வெளியிட்டாள்!)

உலகெல்லாம் திவ்விய மாதாவாகப் போற்றிய சாரதையைச் சுற்றத்தினர் புரிந்துகொள்ளாமல் பாடாகப் படுத்தியது விந்தையாகத் தோன்றலாம். இதில் விந்தையில்லை. அதுவே அவதார உத்தேசம். ஓயாத தொந்தரவுக்கிடையிலும் ஆத்ம சுதந்திரத்தையும் அன்புச் சுந்தரத்தையும் வாழ்ந்து காட்ட வந்தாள் அம்மா. அப்படியானால் அவளைச் சுற்றி யிருந்தவர் ஓயாமல் உபாதைப் படுத்தித்தானே ஆகவேண்டும்? அவதாரமும் ஒரு நாளில் முடிந்தாக வேண்டும். அன்பு குறைந்தாலொழிய உலகை விட்டுப் புறப்பட முடியாது! எனவேதான் அம்மாவும் அலுப்புக் கொண்டாள்!

பிரபல வைத்திய டாக்டர் பிராணதனபோஸ் அம்மாவின் முக்கியவைத்தியரானார். ஆனால் அவரால்கூடப் பிராணனைத் தர முடியுமா என்ன? அம்மா நலிந்து கொண்டே வந்தாள்.

வைத்தியர்களிடம் அம்மா காட்டிய அன்பு அபரிமிதமானது. அவர்களுக்குப் பிரசாதமும் பட்சணமும் வாரி வாரி அளிக்கச் செய்வாள். கிறிஸ்துவரான பிராணதன போஸ் ஆரம்ப காலத்தில் எக்கச்சக்கமாகப் பணம் வாங்கி வந்தார். ஆனால் நாளடைவில் அம்மாவின் அன்பில் உருகி, தமக்குப் பணம் ஏதும் வாங்கிக்கொள்ளாததோடு தம் செலவிலேயே டாக்ஸி வைத்துக் கொண்டு வரலானார்.

காய்ச்சலோடு கடுங் கோடையும் சேர்ந்து தேவியைத் தகித்தது. ''எங்கேயானும் ஜலத்துக்கு அடியிலே கொடி அடர்ந்த இடத்திலே முழுகிக் கிடக்கணும்போலிருக்கு. என்னைக் கங்கைக் கரையிலே கிடத்துங்கோ'' என்பாள். உலகுக்குத் தண்மை சொறிந்த அம்மாவைச் சுற்றி இஸ் மயமாக்குவார் சிருமை ஷ்ரத். தமது ஜிப்பாவைக் கழற்றிவிட்டு முதுகைக் குனிந்து கொண்டு அம்மாவின் கையை எடுத்து அதில் வைத்துக் கொள்வார். ''குளிர்ச்சியாக இருக்கடா குழந்தை'' என்பாள் மாதா.

இப்போதெல்லாம் பக்தர்களை அம்மாவிடம் அனுமதிப்பதில்லை. இருப்பினும் சிலர் அம்மாவின் அண்மைக்கு வந்துவிடுவர். இத்தனை இன்னலிலும் அம்மா இன்முகம் காட்டுவாள். அவர்களது க்ஷேம லாபங்களை வினவுவாள். ஜுர வேகத்தில் தன் வயமிழந்தபோது யாரார் வந்திருந்தார்கள் என்று கேட்டறிந்து, ''அவாளை விசாரிக்காமல் போயிட்டேனே என்று வருத்தப்பட்டுண்டு போயிருப்பா. நான் அவாளுக்கெல்லாம் ஆசிர்வாதம் பண்ணறேன்னு தெரிவியுங்கோ'' என்பாள்.

இச்சமயத்தில் அவளுக்குச் சுசுருஷை செய்வதைப் பரம பாக்கியமாக எண்ணிப் பலர் போட்டி போட்ட போதிலும் அவள் அத்தியாவசியம் தவிர வேறெதற்கும் எவரது பணிவிடையையும் ஏற்க மறுத்தாள். ஊழியம் புரியவே வந்த அவளால் பிறர் ஊழியத்தை ஏற்க முடியுமா? பசு எங்கேனும் பால் குடிப்பதுண்டா?

அம்மா இறுதிப் படுக்கையில் மும்முறை புத்திர சோகத்துக்கு ஆளானாள். காசியில் அத்புதாநந்தர் (அம்மாவின் அத்தியந்த 'லாடு') காலகதி அடைந்தார். பலராம் போஸின் மகன் ராமகிருஷ்ண போஸூம் ராமகிருஷ்ணரிடம் போய் விட்டார். தம்பி என்பதைக் காட்டிலும் பிள்ளை என்றே கருதி அம்மா எடுத்து வளர்த்த வரதாப்பிரசாத் நிமோனியா காய்ச்சலில் கண் மூடிவிட்டார். அம்மா தானும் கண்ணை மூடுகிற நாளுக்கு அவாவலானாள்.

''**இ**ந்தச் சரீரத்தாலே டாகூருக்கு என்ன காரியமெல்லாம் பண்ணணும்னு இருந்ததோ, அத்தனையும் பண்ணித் தீர்த்தாச்சு. மற்றவாளுக்கு வழிகாட்டறதுக்கு எவ்வளவு சேப்பணுமோ அதுக்கும்

> ஓர் அடியார், தாம் ராமகிருஷ்ணரையும் சாரதையையும் சரணடைந்து நீண்ட காலமாகியும் தமக்கும் பரிபக்குவமேற்படவில்லை என்று குறைப்பட்டுக் கொண்டார். அப்போது அம்மா அர்த்த புஷ்டியுடன் கூறினாள்: ''சாதகனுக்குத் தன் ஆத்ம அபிவிருத்தி உடனுக்குடனே தெரிய வேணும் என்பதில்லை. குழந்தே! நீ தூங்கிக் கொண்டிருக்கும்போது, இன்னொருத்தர் உன்னைத் தூக்கிக் கொண்டு போய் இன்னொரு இடத்தில் சேர்ப்பதாக வைத்துக் கொள். உன்னை இடம் மாற்றும்போதோ, அல்லது புதிய இடத்தில் நீ கண் விழித்துக் கொண்ட உடனேயோ உனக்கு இடம் மாறியிருக்கிறோம் என்று தெரிந்து விடுமோ?''

அதிகமாகவே செஞ்சு காட்டியாச்சு. இப்போ என் மனசு அவர் ஒருத்தரைத்தான் தேடிப் போறது. பாருங்களேன், ஒரு காலத்தில் இந்த ராது கிட்ட எத்தனை பாசம் வைச்சிருந்தேன்? இப்போ அவள் என்கிட்ட வந்தாலே எங்கே மறுபடி இந்த மனசைக் கீழே இழுத்துடுவாளோன்னு கிலியாயிருக்கு. டாகூர் தானே தன் காரியத்தை நடத்திக்கிறதுக்காக என்னைத் தளையாலே லோகத்துலே பிணைச்சிருந்தார்? இல்லாட்டா அவர் போனவிட்டு க்ஷண காலம் என்னாலே ஜீவிச்சிருக்க முடியுமா?'' என்று நிச்சலனமாகக் கூறினாள் அம்மா.

ராதுவை ஜயராம்பாடிக்கு உடனே அனுப்பிவிட வேண்டும் என்று அம்மா கட்டளையிட்டபோது அனைவரும் அதிர்ந்து விட்டனர். அதன்பின் அம்மாவின் முடிவு வெகு வெகு நெருக்கமாகிவிடும் என்பது அவர்கள் அறிந்ததே. ''நீங்கள் இப்படி மனசை எங்க கிட்டேயிருந்து நீக்கி, உள்ளுக்கு வாங்கிண்டா அப்புறம் எங்கள் கதி?'' என்றனர்.

''இதென்ன பேச்சு? பக்தாள் என்னிக்கும் தேடி வந்துண்டேதான் இருப்பா. அதுக்காக, சரீரம்னு ஏற்பட்ட ஒரு வஸ்து அழியாமலே இருக்க முடியுமா? என் காரியம் ஆச்சு, பாசம் போச்சு. குறுக்கே வராதேள்'' என்று கண்டிப்பாகச் சொன்னாள் அன்னை.

ராதுவின் குழந்தை வனு தவழ்ந்து கொண்டே வந்து அவள் மீதேற முயன்றபோது, ''யாரங்கே, இந்தக் குழந்தையை எடுத்துண்டு போங்கோ'' என்றாள். குழந்தையைப் பார்த்து, ''அப்பாடா! நான் எல்லா ஆசைகளிலிருந்தும் விடுபட்டுட்டேன். உன் ஜாலக்கு இங்கே பலிக்காது'' என்றாள்.

ராது, நளினி முதலியவர்களை ஊருக்கு அனுப்பிவிட வேண்டியது தானா என்று சாரதாநந்தர் யோசித்த போது, நளினி அவரிடம் வந்து, ''அத்தைக்கு எங்களை அவ்வளவு கரிக்கிறதுன்னா நாங்க போகத்தான் வேணும். ஆனால் ஊரிலே என்ன சொல்லுவா? 'அந்த அம்மாகிட்டேயே வளர்ந்து ஆளான சிறுக்கிகள் அவளை மரணாவஸ்தையிலே விட்டுட்டு வந்துடுத்துகள்'னு சொல்ல மாட்டாளா?'' என்றாள்.

ஷரத் அம்மாவிடம் இதை விளக்கினார். ''சரி, சரி. அப்போ அதுகள் இங்கேயே இருந்துவிட்டுப் போகட்டும். ஆனா அவா நிழல்கூட என் மேலே விழாமல் பார்த்துக்கோ'' என்றாள் அம்மா.

சாரதாநந்தரின் கரத்தைப் பிடித்துக் கொண்டு ''ஷரத், எல்லோரையும் உன்கிட்டே விட்டுட்டுப் போறேன்'' என்று கூறினாள்.

இன்னொரு நாள், ''இந்த ஸரளாவுக்கு 'சாப்பிடு', 'சாப்பிடு'ங்கறதைத் தவிர வேறெதுவும் சொல்லத் தெரியலை ஷரத். இல்லாட்டா அந்தக் குச்சியை (தெர்மோ மீட்டர்) சொருகிறதுக்கு வரா. இம்சை தாங்கலை'' என்றாள்.

''அம்மா, இனிமேலே உங்களை யாரும் இம்சைப்படுத்த மாட்டா. அது போகட்டும், ஒரு வாய் பால் நான் விடட்டுமா அம்மா?'' என்று பரிவு வழியக் கேட்டார் சாரதாநந்தர்.

''சரியப்பனே! உன் கையாலே நாலு சொட்டுப் பால் விடு. இந்த ஸரளா ஒண்ணும் பண்ணவேண்டாம்'' என்று குழந்தைபோல் கூறினாள் அம்மா.

மூக்கு வைத்த, கோப்பையிலிருந்து சிறிது சிறிதாக தேவியின் திருவாயில் பால் வார்த்தார் சாரதாநந்தர். இரண்டு முழுங்கு முழுங்கியதும் அம்மா போதுமெனக் கையைக் காட்டினாள். உடனே நிறுத்திவிட்டார் சாரதாநந்தர். அம்மாவின் தலையணைகளைச் சரிசெய்துவிட்டு, ''அம்மா, கொஞ்சம் தூங்குங்கோ. அப்புறம் இன்னொரு வாய் பால் சாப்பிடலாம்'' என்றார்.

''பார்த்துக்கோ சரளா! என் பிள்ளை எப்படி அமிருதமாப் பேசறான் பாரு. நீயும் நச்சுப் பண்ணறியே?'' என்றாள். ''என் மகனே! பாதி ராத்திரியிலே உனக்கு என்னாலே எத்தனை இம்சை? தூங்கப்பா'' என்று கூறி அவரைத் தட்டிக் கொடுத்தாள். அவர் கொசு வலையைப் படுக்கைக்குக் கீழே சொருகிவிட்டு, அம்மாவை வணங்கிச் சென்றார்.

அம்மாவின் 'சுமைதாங்கி' அவரே எனினும், தம் கைப்பட அம்மாவுக்கு உண்பித்ததில்லையே என்று அவருக்கு ஓர் ஆறாத குறை உண்டாம்! அதை இன்று ஆற்றிவிட்டாள் அம்மா!

அம்மா தன்னிடம் அதிருப்தி கொண்டதால் சரளா தேவி இரு தினங்கள் ஒதுங்கியே இருந்தாள். அரைப் பிரக்ஞையில் இருந்த அம்மா இதைக் கவனித்தவுடன் சரளாவை அழைத்து வரச் செய்தாள். அவள் தலையைத் தன் மார்பின் மீது சாய்த்துக் கொண்டு அவளது கன்னத்தை வருடினாள். ''செல்லப் பொண்ணா! இந்த அசட்டு அம்மா கிட்ட கோவிச்சுண்டுட்டியா? நான் ஏதாவது ஏறுமாறாச் சொல்லியிருந்தாக் கூட மனசுலே வைச்சுக்காதே, என் ராஜாத்தி'' என்று உருகிச் சொன்னாள். அம்மாவின் கொதிக்கும் உடலைச் சரளாவின் கண்ணீர் பன்னீராக நனைத்தது.

உடல் விக்கம் கண்டுவிட்டது! அருகே ஏதோ நிழலாடியதால் அம்மா தலையைத் திருப்ப முடியாமல் திருப்பிப்

பார்த்தாள். கதவருகே அன்னபூரணி யம்மா தயங்கி நின்றாள். அருகில் வருமாறு சைகை காட்டினாள் அம்மா.

அம்மாவின் பக்கத்தில் வந்து நின்ற அன்னபூரணியம்மா தொண்டை யடைக்க, ''அம்மா, எங்களை நிர்க்கதி ஆக்கிடுவேளா?'' என்றாள்.

குளிர்ந்த தளிர்க் குரலில் அம்மா, ''பெண்ணே! டாகூரைச் சரணடைஞ்ச பின் ஏதுக்குப் பயப்படணும்?'' என்றாள். பேச்சுத் தடைப்பட்டது. டாகூரைச் சரணடைந்து அறுபது ஆண்டுகளுக்குப் பின்னும் தான் ஒரு முறை தடுமாறி விழுந்து. ஸுரபாலாவைச் சபித்தது அந்த வேளையிலும் அவளது உள் மனத்தை அரித்தது போலும்! முன்னிலும் மிருதுவான குரலில், ''மகளே! ஒண்ணு மட்டும் நிச்சயமாச் சொல்வேன். சாந்தம்தானே சகலத் துக்கும் முடிவு? நீ சாந்தமாக வாழணும்னு, பிறத்தியார் எத்தனை தப்பு பண்ணினாலும் அதை மனசில் வாங்கிக்காதே. மற்றவாளுடைய குற்றங் களைப் பாராட்டாமல் இரு அம்மா. அவா வாளும் தங்களுடைய குற்றங்களையே பார்த்துக்கணும். அதுதான் ஸ்வாதீ னியம். உலகம் முழுவதையும் உன் னுடையதாக ஆக்கிக்கணும். அப்படி ஆக்கிக்க முடியும். அதுக்கே அப்பியாசம் பண்ணிண்டிரு. ஆமாம், யாருமே அந்நியம் இல்லே, என் பிரிய மகளே! இந்த உலகம் பூராவும் உன்னுடையது'' என்றாள்.

அம்மாவின் வாழ்க்கைத் தத்துவமே அதுதான். எதை வாழ்ந்து காட்டி னாளோ அதையே வார்த்தையிலும் தந்துவிட்டாள். தேவியின் மதுர அதரத்திலிருந்து உதிர்ந்த கடைசி உபதேச மொழி இதுவே. அதன் பின் மௌனத்தில் முழுகலானாள்.

1920ம் ஆண்டு, ஜுலை 21ந் தேதி - ஆடி மாதம் சுக்ல ஷஷ்டி. காலை ஒன்றரை மணி. ஆழ்ந்த சுவாசம் ஒன்று, சுவாசமூலமான ஹம்ஸத்திலே, பராசக்தி வடிவான ஸ்ரீ ராமகிருஷ்ண ஹம்ஸத்துள்ளே நம் அன்பு அம்மாவை இரண்டறக் கரைத்து விட்டது!

அம்மா போய்விட்டதாகச் சொன் னார்கள். அம்மா எப்படிப் போக முடி யும்? ''இந்த சாரதா சாகிறதாவது?'' என்று அவளே ஒரு முறை சொல்லி யிருக்கிறாளே! ''உலகம் எல்லாம் உன் னுடையது'' என்று சொன்ன அம்மா உலகத்தை விட்டுப் போவதுண்டா?

பஞ்சபூத சரீரம் ஒன்று உண்டானால் அது அழிந்தும் தீரவேண்டும். ஆனால் பஞ்சபூதங்களையும் செய்த அன்பு எப்படி அழிய முடியும்?

பஞ்சபூதத்திடை மாட்டிக் கொண்ட தற்குக் கூலியாக அந்த அன்பும் ஒரு சமயத்தில் அலப்புறுகிறது. அப்போது உலகை வெறுத்து ஓட எண்ணுகிறது. சரீரச் சட்டையை அவிழ்த்து ஓடியும் விடுகிறது. அப்புறம்? பஞ்சபூதச் சட்டை கழன்று, பரமாகாசமாக ஆனவுடன் அலப்புற எதுவுமே இல்லை என்று அது உணர்கிறது. அரூபமாகவே மீண்டும் தன் அன்பைப் புரியத் தொடங்குகிறது.

நம் அம்மா சாரதாமணி நம்மை விட்டுப் போகவே யில்லை. தஞ்சம் புகுந்த நெஞ்சுக்கெல்லாம் அஞ்சல் பாலிக்கப் பக்கத்திலேயே நிற்கிறாள்!

'ராம ராம ராம ராம' என்று தாரக நாமத்தைச் சொல்லிக்கொண்டே தேவி யின் தேகத்தைச் சுமந்து சென்று பேலூர் மடத்தைத் தொடும் கங்கை விளிம்பில் இறக்கினார்கள். அம்மாவின் அருமைப் பெண்கள் புண்ணிய சரீ ரத்தை கங்கையால் நீராட்டினர்.

அறிவுக் கனலான ஸ்வாமி விவேகா நந்தர் அக்னியில் கலந்த ஸ்தலத்துக்கு சில கெஜ தூரம் வடக்கே சந்தனக் கட்டைகள் அடுக்கி யிருந்தது. சார்ந் தார்க்கு மட்டுமின்றி, சாராதார்க்கும் சந்தனமாக இருந்த சாரதா தேவியின் சரீரம் பாவன அக்னியை மேலும் பாவனமாக்கிற்று.

விசுவதேவியின் சோகமூட்டம்போல் தலைக்கு மேலே மழைக் கொண்டல்கள் மண்டிக் கிடந்தன. தகன காரியம் தடையின்றி நடக்குமா என்று அடியார் ஐயுற்றனர். ஆயினும் முட்டிக்கொண்டு நிற்கும் மழையைப் பொழியாமலே கண் ணீரை அடக்கிக் கொண்டு பல மணி நேரம் காத்திருந்தாள் வானமா தேவி.

அக்கினி பகவான் தன் புனிதப் பணியை முடித்து விட்டு மௌனமாக அடங்கிப் போனான்.

வானம் தாரை தாரையாகப் பொழிய லாயிற்று. அந்த மழை நீர் நிலத்திலே ஊறும்போது—

அன்புக்கு ஆசிரயமாகவும், உழைப் புக்கு உறைவிடமாகவும், பெண்மைக் குப் பேடகமாகவும், எளிமைக்கு உருவக மாகவும், அடக்கத்துக்கு அணிகலனாக வும், தூய்மைக்குத் தாயகமாகவும் பூவுலகில் அறுபத்தாறாண்டுகள் உலவிய பூதவுடலின் நுண் அணுக்கள் புண்ணிய பாரத மண்ணினுள் ஊறி உறைந்தன.

அங்கவர் மாய அவருடல் பூந்துகள்
ஆர்ந்ததும் இந்நாடே - இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ?

**சக்தி ஓம்!**

# சீதா, என் தோழி!

ராமப்ரியா

“சீதா வியாதி ஏதாவது சொல்லிக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருப்பானேன்? புது லேடி டாக்டர் இதோ கூப்பிடு தூரத்தில் வந்திருக்கிறாள். போய்ப் பார்த்துவிட்டு வாயேன்!'' என்றார் என் கணவர் இடக்காக.

''ஆமாம்! நான் யார் என்று அறிமுகப் படுத்திக் கொள்ளவேணும். அப்புறம் என் உடம்பைப் பற்றிச் சொல்லணும்!'' என்று முணுமுணுத்தேன்.

''முதலில் இரண்டு தடவை நீ உன் வியாதியைச் சொல்லி விட்டால் இந்த டாக்டரும் உன்னைப் புரிந்து கொண்டு விடுவாள்!'' என்றார் மீண்டும் குத்தலாக.

எனக்குக் கோபமும் எரிச்சலும்தான் பற்றிக்கொண்டு வந்தன. நான் சொல்லும் வியாதிகள் முற்றும் என் சொந்தக் கற்பனை தான் என்பது என் கணவரின் அசைக்க முடியாத நம்பிக்கை. அப்போதுதான் மாற்றலாகி வந்துள்ள டாக்டரிடம் போகச் சற்றுத் தயக்கமாக இருந்தது. 'இவர் கொஞ்சம் கூட வந்தால் என்னவாம்?' என்று முணுமுணுத்துக் கொண்டே தான் புது டாக்டர் வீட்டுக்குப் போனேன்.

வழக்கம் போல் வாசலில் போட்டிருக்கும் நீள பெஞ்சியில் நான்காவதாக உட்கார்ந்து கொண்டேன். என் முறை வந்ததும் உள்ளே போனேன். முதல் முதலில் பார்க்கிற சம்பிரதாயக் கும்பிடுகளும் என்னை யார் என்று நானே செய்துகொள்ளும் அறிமுகப் படலமும் நடந்தன.

டாக்டர் சீதா என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் அப்படி என்னையே பார்ப்பதைக் கண்ட நானும் அவளை உற்று நோக்கினேன். பளிச்சென்று பொட்டில் பழைய நினைவு தெறித்தது. சற்றே நீளவாட்டமான முகம். கூர்மையான மூக்கு. அகலக் கண்கள். அமைதியானதொரு பார்வை. தலை நிறைய கருகருவென்ற கூந்தல். பாவாடை சட்டையுடன் உயர்நிலைப் பள்ளி மாணவி சீதா என் முன்னால் தோன்றினாள்.

'அவளுக்கும் அதே மாதிரி என்னைப் பற்றித் தோன்றியிருக்க வேண்டும்.

''நீ... நீ... ஸாரி... நீங்கள் வேதா தானே!'' என்றாள். அவள் இமைகள் படபடத்தன.

''சீதா!... சீதா! நீயா? நான் கனவில் கூட நினைக்கவில்லையடி!'' என்றேன். அவள் என்னை அணைத்துக் கொண்டாள். அவளை அப்படியே நான் பற்றிக் கொண்டேன்.

ஆறும் வகுப்பிலிருந்து ஸ்கூல் பைனல் வரை ஒன்றாகப் படித்த அத்தனை வருடங்களும் சில நிமிடங்களில் மனக்கண் முன்பு வந்து நின்றன.


''இதென்ன வேதா! குச்சி மாதிரி எலும்பும் தோலுமாய் இருந்த உடம்பை எப்படிப் பீப்பாயாக்கிக் கொண்டாய் இப்படி?'' என்று கேட்டுவிட்டுச் சிரித்தாள் சீதா.

அந்தக் கேள்வியில் நான் வெட்கிப் போனாலும் சமாளித்துக் கொண்டு, ''நான் இப்பொழுது இரண்டு பேத்திகளுக்கும் பேரனுக்கும் பாட்டியாக்கும்!'' என்றேன் பெருமையாக.

''சரி! அதற்காக உன் உடம்பைப் பீப்பாயாக்கிக் கொள்ளணுமாக்கும்! நாளையிலிருந்து கண்டிப்பாக நான் சொல்ற டயட்டில் இரு. ஆறு மாதங்களில் உன்னைப் பழைய வேதாவாக்கி விடுகிறேன்!'' என்றாள். நான் சிரித்தேன். என் உடம்பைப் பற்றி இவளுக்கென்ன தெரியும்!

மனசெல்லாம் அவளைப் பற்றியே நிறைந்திருந்தது. மனசின் ஒரு மூலையில் அவளைப் பற்றிப் பொறாமையாகக் கூட இருந்தது. ஒரு பக்கம் பெருமையாகவும் இருந்தது. கொடி போல உடம்பை வைத்துக் கொண்டு எப்படித்தான் இருக்கிறாள் மகராசி! அவள் சொன்ன மாதிரி இதென்ன உடம்பு பீப்பாய் உருளுகிற மாதிரி! என்னைப் பார்த்துக் கொள்ளவே எனக்கு வெட்கமாக இருந்தது. ஜம்மென்று ஆண்பிள்ளை மாதிரி சீதா சம்பாதிக்கிறாள். வயது சென்ற பெற்றோரைக் காப்பாற்றுகிறாள். கைநிறையப் பணம். எப்படி வேண்டுமானாலும் செலவு செய்ய அவளுக்கே அதிகாரம். தன் காலில் பட்டு ரத்தம் வந்தால்தான் அவளுக்கு வலிக்கும். எனக்கு அப்படி இல்லையே! நான் பெற்றதுகள் மூலைக்கு மூலை இருக்கும் போது அவர்கள் காலில் பட்டதென்று தெரிந்தால்கூட இங்கு என் வயிற்றில் சொரேர் என்கிறதே! அந்தக் கவலை சீதாவுக்கு இல்லை. அது எத்தனை பெரிய நிம்மதி. சீதா ஏன் கல்யாணமே செய்துகொள்ளவில்லை? அவளுடன் கூடப் பிறந்தவர் நாலைந்து பேர் உண்டே? எல்லாவற்றையும் விவரமாகக் கேட்டுவிட வேண்டும்.

சாயந்திரம் அவரையும் அழைத்துக் கொண்டு சீதாவின் வீட்டுக்குப் போனேன். உள்ளே அழைத்துக் கொண்டு போய் அவள் பெற்றோருக்கு அறிமுகப்படுத்தினாள். அதிகம் பேசக் கூடத் தயங்கியபடி இருந்தாள். சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பினோம். ''அவருக்கு வேலை இருந்தால் வேண்டுமானால் போகட்டும். நீ கொஞ்ச நேரம் இருந்து விட்டுப் போயேன்!'' என்று வேண்டினாள் சீதா. நான் என் கணவர் சம்மதத்தைக்கூடப் பார்க்கவில்லை. சரியென்றேன்.




நானும் சீதாவும் அவளுடைய கன்ஸல்டிங் ரூமுக்கு வந்தோம். அவள் நோயாளிகளைப் பார்த்து அனுப்பியபடியே என்னுடன் பேசிக் கொண்டிருந்தாள். எனக்கு முற்றிலும் புதிதான அந்தச் சூழ்நிலை மனதுக்குத் திருப்தியாக இருந்தது.

''ஹைஸ்கூல் படிப்பு வரை தான் உனக்குத் தெரியுமே? அதன் பின்தான் உனக்குக் கல்யாணம் ஆகி நீ எங்கள் கோஷ்டியை விட்டுப் பிரிந்து போய்விட்டாய். எங்கள் குடும்பம் மிகவும் சாதாரணமான குடும்பம். அதிகக் குழந்தைகளுடன் இருக்கும் குடும்பம். வசதி மிக மிகக் குறைவு. பள்ளி இறுதிப் படிப்பு முடிந்தவுடனேயே என்னுள் நானே ஒரு தீர்மானம் செய்து கொண்டேன். கல்லூரிப் படிப்புப் படித்து டாக்டர் ஆகி நல்ல வசதியுள்ள வாழ்க்கை வாழ வேண்டும். ஒரு நாளைக்கு நான்கு தரம் உடுப்பு மாற்ற வேண்டும். பழங்களாகச் சாப்பிட வேண்டும்.' இப்படிக் குழந்தைத்தனமான கற்பனைகள் கோடி கோடி என் மனத்தில் உதித்து வேரூன்றிப் போனது என்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது இதுவரை. குழந்தைப் பிராயத்தில் அநுபவித்த வசதியின்மை அப்படியோர் ஏக்கத்தை எனக்கு அளித்திருந்தது.

''அதே மாதிரி ஒரே மூச்சாகப் படிப்பைத் தவிர வேறொன்றிலும் கவனம் போகாமல் படித்தேன், படித்தேன், அப்படிப் படித்தேன். நான் டாக்டர் படிப்புப் படித்து முடிப்பதற்குள் என் அக்கா கல்யாண வயதையும் தாண்டி நிற்பதையும் அவள் கல்யாணத்துக்கு என்ன வழி என்று புரியாமல் அப்பா விழித்துக் கொண்டிருப்பதையும் கண்ட நான் வேலைக்குப் போகத் தீர்மானித்தேன்.

''உடனே சர்க்கார் வேலை கிடைத்தது. உன்னைப் போல என்னை நம்புகிற சிநேகிதர் ஒருத்தரிடம் போனேன். அவர் கொஞ்சம் பணத்தில் புழங்குகிறவர். 'என் மேல் உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் எனக்கு ஐயாயிரம் ரூபாய் கொடுங்கள்' என்றேன் எடுத்த எடுப்பிலேயே.

''அவர் என்னை ஒரு தினுசாகப் பார்த்தார். 'நம்பிக்கை வராது என்றுதான்



கையோடு இதைக் கொண்டு வந்திருக்கிறேன். இதை வைத்துக் கொண்டு கொடுங்கள்' என்று நான் கையோடு கொண்டு போன ஸ்டாம்பு ஒட்டின பிராமிசரி நோட்டு ஐயாயிரத்துக்கு எழுதினதை அவர் முன் காட்டினேன். அவர் அவசரம் அவசரமாக அதைப் படித்தார். என்னை மீண்டும் பரிதாபமாகப் பார்த்தார். பீரோவைத் திறந்து நோட்டாக ஐயாயிரத்தை எண்ணி என் கையில் கொடுத்தார். கூடவே அந்த நோட்டையும் என் கையில் இரண்டாகக் கிழித்துக் கொடுத்தார். அவரும் என்னை எதற்கு என்று கேட்கவில்லை. நானும் சொல்லவில்லை.

" 'நீங்களே இந்தப் பணத்தை வைத்திருங்கள். எந்த நிமிஷம் நான் கேட்டாலும் கொடுக்க வேண்டும்' என்று எதையோ கொடுத்து வைத்தவள் போல் ஓர் உத்தரவைப் போட்டுவிட்டு வீடு திரும்பினேன்.

"வீட்டுக்கு வந்தேன். 'அப்பா! அக்காவுக்குக் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க' என்றேன் பெரிய மனுஷி மாதிரி.

" 'பணத்துக்கு?' என்று அப்பா அதிசயத்துடன் கேட்டார். 'எவ்வளவு தேவைப்படும்?' என்றேன். அப்பா தலையைச் சொறிந்து கொண்டார். 'அம்மாவிடம் இருக்கும் நகைகளை அட்ஜஸ்ட் பண்ணினாலும் குறைந்தது ஐ யா யி ர ம் வேண்டாமா?' என்றார். 'நான் ஏற்பாடு செய்தாகி விட்டது. கல்யாணத்தை நிச்சயம் செய்தால் பணம் தானாக வரும்' என்றேன் தலை நிமிர்வோடு. அப்பா அப்படியே அசந்து போய்விட்டார்.

" கல்யாணம் ஜாம் ஜாம் என்று நடந்தது. முதல் தேதி என் சம்பளம் ஐந்நூறு ரூபாயை அந்த நல்ல மனிதரிடம் கொடுத்துக் கடனை அடைத்தேன். திரும்பிப் பார்ப்பதற்குள் கடன் ஒரு வருடத்தில் அடைந்தது.

"அப்பா கொஞ்சம் கொஞ்சமாக என் வருமானத்தின் மீது கண் வைக்க ஆரம்பித்தார். 'சம்பளத்தை என்ன செய்கிறாய்? வீட்டில் எவ்வளவு வருகிறது?' என்றெல்லாம் கேட்க ஆரம்பித்தார்.

" 'ஏம்பா! அக்கா கல்யாணத்துக்கு எப்படி ஐயாயிரம் ரூபாய் வாங்கினே, அதை எப்படி அடைச்சே என்று கேட்க முடியவில்லை. இப்போ மட்டும் கணக்குக் கேட்கிறீர்களா?' என்றேன் சற்றுக் கோபமாகவே.

" 'நான் ஒருத்தன் வீட்டில் இருப்பதற்கு என்ன அடையாளம்? ஒன்றையும் தெரிந்து கொள்ளாமல் என்ன ஆண்பிள்ளையாக வீட்டில் நடமாடுவது?' என்றார் அவரும் பதிலுக்குக் கோபமாகவே.

"நான் பயப்படவில்லை. 'நீங்கள் நிம்மதியாக ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நான் எல்லாம் பார்த்துக் கொள்கிறேன்' என்றேன். அன்றைய தினம் ஆரம்பித்த கசப்பு உள்ளூற அதிகமானதே தவிர குறையவும் இல்லை; அறவே போகவும் இல்லை!" என்றாள்.

மணி எட்டு அடித்தது. நான் பதறி எழுந்து அவளிடம் பிரியா விடை பெற்று வீடு வந்தேன்.

சீதா எனக்குப் பெரியதொரு புதிராகவே இருந்தாள். அவள் கவலைகள் என் மனதில் பாதி ஏறி யிருந்தன.

வாசற் கதவு 'டொக் டொக்' என்று தட்டப்படும் சத்தம் கேட்டு அலுத்துக் கொண்டே போய்த் திறந்தேன்.

வாசலில் சீதாதான் நின்று கொண்டிருந்தாள். "என்ன அபூர்வம், சீதா! வா!" என்று மகிழ்ச்சியோடு அவளைக் கூப்பிட்டு வரவேற்பு அறையில் உட்கார வைத்தேன்.

"வேதா! என்னுடன் படித்த டாக்டர்கள் ரவியும் கிரிஜாவும் நாளை வருகிறார்கள். அவர்களோடு சேர்ந்து எங்காவது பிக்னிக் போகலாமென்று நினைக்கிறேன். நீயும் வருகிறாயா?" என்றாள் மிக ஆவலுடன்.

"எனக்கும் ஆசையாகத்தான் இருக்கிறது, சீதா. நானும் சில தினுசு சமைத்துக்கொண்டு வருவேன். வீட்டிலும் ஒருத்தரும் இல்லை. நீங்கள் எல்லோரும் டாக்டர்கள். நான் படித்துப் பட்டம் பெறாதவள். உங்கள் நடுவில் நான்....!" என்று சொல்வதற்குள் அவள் இடைமறித்து என் வாயைப் பொத்தினாள்.

"அசடு! அப்படி யெல்லாம் பேசாதே! சரி சரி. நாளை பத்து மணிக்குத் தயாராக இரு! அவர்கள் காரிலேயே போகலாம்" என்று கூறி விடைபெற்றுப் போனாள்.

கணவரிடமும் மாமியாரிடமும் 'பிக்னிக்' போக உத்தரவு பெற்றாகி விட்டது. நான் பெற்றதுகளில் யார் இருந்தாலும் 'அம்மா பிக்னிக் போகிறாள்' என்று கேலி செய்து என் உயிரை எடுக்கும். அது இல்லாமல் குறையாகத்தான் இருந்தது.

"எல்லாம் நன்னா நாலு தினுசு பண்ணிண்டு போ! அந்த ஆஸ்பத்திரிக்காரி மூக்கிலே விரலை வைக்க வேண்டாமா!" என்று என் மாமியார் எனக்கு ஒத்தாசை செய்து கொடுக்கத் தாராளமாக முன்வந்தார். இவரும் கொஞ்சம் பழங்கள், பிஸ்கட்டுகள் வாங்கிக் கொண்டு வந்தார். நாலு தினுசு சாதம் பிசைந்து எடுத்துக் கொண்டேன். அவியல், வடாம், அப்பளம் முதலியவைகளையும் தூக்கில் எடுத்துக்கொண்டேன்.

சரியாகப் பத்து மணிக்கு, கார் ஹாரன் வாசலில் கேட்டது. டிபன் காரியர் தூக்குகளை என் கணவர் காரில் கொண்டு வைக்க உதவினார். சீதா காரில் உள்ளவர்களை என் கணவருக்கும் எனக்கும் அறிமுகப்படுத்தினாள். அப்போதுதான் இருவரும் டாக்டர்கள், தம்பதி என்பதைத் தெரிந்து கொண்டேன்.


நான் என் சிநேகிதியுடன் 'பிக்னிக்' போவதைப் பெருமையுடன் பார்த்து வழியனுப்பி வைத்தார் என் கணவர்.

டாக்டர் ரவியும் அவர் மனைவியும் முன்னே உட்கார்ந்திருந்தார்கள். ரவிதான் சாரத்தியம் செய்து கொண்டிருந்தார். நானும் சீதாவும் பின் ஸீட்டில் அமர்ந்திருந்தோம்.

"சீதா! நாம் எங்கே போகிறோம் என்ன என்று ஒன்றுமே சொல்லவில்லையே!" என்றேன் மிக மெதுவாக.

சீதா என்னைப் பார்த்து வழக்கம் போல் அழகாகச் சிரித்தாள். "உன்னை நாங்கள் மூவருமாகக் கடத்திச் செல்லப் போகிறோம்" என்றாள். முன் ஸீட்டில் உட்கார்ந்திருந்தவர்களும் திரும்பிப் பார்த்துச் சிரித்தார்கள்.

டாக்டர் ரவியையும் அவர் மனைவியையும் அப்போதுதான் நன்றாகப் பார்த்தேன்.




# தொழில் முனைவர்களுக்கு இதோ ஒரு மலர்ச் செண்டு

குறிப்பிடப்பட்ட பின் தங்கிய ஜில்லாக்களிலும், பகுதிகளிலும் தொழில் துவக்க அல்லது தொழிலை விஸ்தரிக்க விசேஷ சலுகைகளை அரசு அளிக்கிறது

விவரங்களை அறியவும், ஆலோசனை பெறவும் கீழே கொடுக்கப்பட்டுள்ள அதிகாரிகளில் எவருடனாவது தொடர்பு கொள்ளுங்கள்:

1) உங்கள் ராஜ்யத்தின் தொழில்துறை டைரக்டர்.
2) உங்கள் ராஜ்யத்திலுள்ள சிறுதொழில் சர்வீஸ் கழகத்தின் டைரக்டர்.
3) உங்கள் ஜில்லாவிலுள்ள, ஜில்லா தொழில்துறை அதிகாரி.

அபிவிருத்திக் கமிஷனர்
சிறு தொழில்துறை

davp 72/73



ஓர் எகிப்திய கால்பந்தாட்டக்காரர் தம் உயிரைக் கொடுத்துக் கோல் அடித்த சம்பவம் சமீபத்தில் நிகழ்ந்திருக்கிறது. கோல்கீப்பர் அடித்த வேகமான பந்து அந்த எகிப்திய ஆட்டக்காரரின் வயிற்றைத் தாக்கியது. ஆனால் அடுத்த கணம் அந்த எகிப்திய ஆட்டக்காரர் அந்தப் பந்தைக் கோலுக்குள் செலுத்தி விட்டு வலியினால் கீழே விழுந்தார்! ஆட்டக்காரர் அலி அப்தி ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வழியில் மரணம் அடைந்தார்.

---

ஆணழகன் போட்டியில் பங்கு கொண்டால் டாக்டர் ரவிக்கு முதற் பரிசு நிச்சயம். அத்தனை கொள்ளை அழகு. நல்ல கம்பீரம். தக்காளி நிறம். அவர் மனைவி கிரிஜா! பாவம் கடவுள் ஏன்தான் சில சமயம் இப்படி ஜோடி சேர்த்துப் பழி வாங்குகிறாரோ? துளிக்கூட ரவிக்கு எந்த விதத்திலும் பொருத்தமில்லாத ஒரு ஜோடி! சீதாவை ரவியுடன் ஜோடி சேர்த்துப் பார்த்தேன். ஆஹா! பொருத்தம் ஏ ஒன்! பிரமாதம்! என்னை அறியாமல் பெருமூச்சு விட்டேன்.

சீதா என்னைக் கூர்ந்து பார்த்தாள். அவளை நான் பரிதாபமாகப் பார்த்தேன்.

"வேதா! நாம் இருவரும் ஹைஸ்கூலில் எப்படிக் கொட்டம் அடித்தோமோ அதற்கு மேலே நாங்கள் மூவரும் மெடிகல் காலேஜில் ஒன்றாகவே ஆறு வருஷங்கள் இணைபிரியாமல் இருந்தோம். கிரிஜா ரொம்ப அதிர்ஷ்டசாலி. ரவியைப் பறித்துக் கொண்டு விட்டாள். நான் தனியே வந்து விட்டேன்" என்று மளமளவென்று சொன்னாள்.

ரவிதான் ஸ்டியரிங்கைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு திடுக்கிட்டுத் திரும்பிச் சீதாவைப் பார்த்தார். சீதா வழக்கமான புன்சிரிப்புடன் இருந்தாள். ரவியின் கண்களும் சீதாவின் கண்களும் நொடிக்கு நூறாயிரம் கதைகள் பேசி விடுபட்டதை என் கண்ணால் பார்த்தேன். ரவி வழியைப் பார்த்துக் கொண்டு ஓட்ட ஆரம்பித்தார்.

சீதாவின் கைகளை மெல்ல அழுத்தினேன். அவள் பதிலுக்கு என் கைகளை அழுத்தி, "அவசரக் குடுக்கையே! சற்றுப் பொறுமையாக இரு!" என்று கண்களினால் என்னை அடக்கினாள். கிரிஜா அந்தக் கடந்துபோன நொடிகளை எப்படிக் கழித்தாளோ, சாவகாசமாக எங்கள் பக்கம் திரும்பினாள். "சீதா! இப்போ நான் விட்டுக் கொடுக்கத் தயார். நீ தயாரா?" என்றாள் அழுத்தமாக. சீதாவின் முகம் வெளிறியது. ரவி கோபமாக மனைவியின் பக்கம் திரும்பினார். "பேசாமல் வரமாட்டாய்!" என்றார்.

"கிரிஜா, நீ மாறவே இல்லை!" என்றாள் சீதா.

"நீயும் கூடத்தான்!" என்றாள் கிரிஜா படபடப்புடன்.

எனக்கு இவர்கள் பேச்சு ஒரே மர்மப் புதிராக இருந்தது. ஆனால் சீதா கெட்டிக்காரி. நொடியில் பேச்சை வேறு திசையில் திருப்பினாள். கலகலவென்று பேச்சும் சிரிப்புமாகப் பிரயாணம் களை கட்டியது.

நேராக நெய்வேலி போகிறோம் என்பதைப் பின்னர்தான் நான் புரிந்து கொண்டேன். போகும்போதே பயணியர் விடுதியில் இரண்டு அறைகளுக்கு ரிசர்வ் செய்துவிட்டு டிபன் காரியர்கள், தூக்குகள் முதலிய சாமான்களை அறையில் வைத்து விட்டு நிலக்கரிச் சுரங்கத்தைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம். மனிதகுலத்தின் சாதனைகளைச் சுற்றிப் பார்த்து மிகவும் மகிழ்ந்தோம். மூலை முடுக்கு விடாமல் பார்த்துவிட்டு விடுதிக்குத் திரும்பினோம். களைப்பு மிகுதியாக இருந்தது. நான் கொண்டு போன சாப்பாட்டையும் சீதா கொண்டு வந்ததையும் நன்றாக ரசித்துச் சாப்பிட்டோம். "வேதாவுக்குச் சமையலில் தாராளமாக நூற்றுக்கு நூறு மார்க்கு கொடுக்கலாம்!" என்றாள் சீதா. "நான் ஆமோதிக்கிறேன். நல்ல சாப்பாடு இந்த மாதிரி எனக்கு எங்கே கிடைக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே ரவி மனைவி கிரிஜாவைப் பார்த்தார். அதைச் சற்றும் கவனிக்காமல் "நிஜமாகவே அபாரமான சாப்பாடு!" என்று என்னைப் பார்த்துப் புன்னகை செய்தாள் கிரிஜா. எனக்குப் பெருமை பிடித்துக்கொண்டுதான் போயிற்று.

சாப்பாடானதும் சற்றுக் களைப்பாற ரவியும் கிரிஜாவும் மற்ற அறைக்குப் போனார்கள். சீதாவும் கதவைத் தாளிட்டுக் கொண்டு வந்து ஒரு கட்டிலில் சாய்ந்தாள். நான் டிபன் காரியர்களையும் தூக்குகளையும் சரியாக வைத்து விட்டுச் சீதாவின் அருகில் வந்தேன்.

சீதா சொன்னவைகளைக் கேட்க மிகவும் சுவையாக இருந்தது.

மருத்துவக் கல்லூரியில் அடி யெடுத்து வைத்த நாள் முதல், கிரிஜா, ரவி, சீதா மூவரும் உற்ற நண்பர்கள். ஏன்! உயிர்த் தோழர்கள் என்றே சொல்லலாம். மூவரும் ஒன்றாகப் படிப்பது, ஒன்றாகப் பாடங்களைப் பற்றிச் சர்ச்சை செய்வது, எல்லாம் இணை பிரியாமல் ஒன்றாகத்தான் இருந்து வந்தார்கள். மற்ற மாணவர்கள் கூட வேடிக்கையாக ரவியைப் பார்க்கும்போது, "என்னடா எப்போது பார்த்தாலும் ருக்மிணி சத்யபாமா சகிதமாகவே இருக்கிறாய்!" என்று கேலி செய்வதுண்டாம்.

பரீட்சை முடிந்து விட்டது. இவர்கள் மூவர் மட்டும் தனியாக உட்கார்ந்திருந்தனர். அவரவர்களின் எதிர்காலத்தைப் பற்றிப் பேச்சு வந்தது.

"எனக்கு என் பெற்றோர்களையும் கூடப் பிறந்தவர்களையும் வசதியாக வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு எப்படிக் கடினமாக வேண்டுமானாலும் உழைக்கத் தயார்!" என்றாள் சீதா.

"உனக்கென்று கல்யாணம், கணவன் எப்படி இருக்க வேண்டும் என்ற ஆசையெல்லாம் இல்லையா?" என்று சீண்டினாள் கிரிஜா.

சீதா மெல்லச் சிரித்தாள். அவள் பார்வை அவளையுமறியாமல் ரவியைச் சுற்றி வந்தது. இவ்வளவு அழகான குணவான் யாருக்கோ என்றபடி பேசாமலிருந்து விட்டாள். ஒரு கணத்தில் அவள் ஆசையைக் கிரிஜா அறிந்து கொண்டுவிட்டாள். ஓர் உத்வேகம் எழுந்தது.

"ரவி! உங்கள் ஆசை?" என்று கிரிஜா கேட்டாள். "என் ஆசையா? மேலே எம். எஸ். படித்துப் பெரிய சர்ஜன் ஆகவேண்டும் என்பதே என் லட்சியம். என்னிடம் இப்போது அதற்குப் பணம் இல்லையே? கொஞ்ச நாட்கள் சம்பாதித்து விட்டுப் பிறகுதான் எப்படியாவது அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்!" என்றான் ஏக்கத்தோடு.

கிரிஜாவுக்கு உற்சாகம் கரை புரண்டது.

"நான் ஒன்று சொல்கிறேன், ரவி! உங்களுக்கு வரப்போகும் மனைவி உங்கள் மேல் படிப்புக்கு ஆகும் செலவை ஏற்று உங்களுக்கு கிளினிக் வைத்துக் கொடுக்கும் பொறுப்பையும் ஏற்றால்...?" என்றாள் கிரிஜா.

ரவி கரை காணாக் காதலுடன் சீதாவைப் பார்த்தான். அப்படி அவனை அவன் பார்த்தது முதல் தடவையும் கடைசித் தடவையும் ஆகும். சீதா அந்தப் பார்வையில் அப்படியே நெக்குருகினாள். கிரிஜாவுக்குத் தேகமெல்லாம் பற்றி எரிந்திருக்க வேண்டும். ஒரு நிமிடம் அங்கே மௌனம் நிலவியது. "அந்த ஒரு நிமிடம்தான் வேதா என் உயிரை இன்னமும் காத்துக் கொண்டிருக்கும் சக்தியுள்ள ஒரு தங்க நேரம்!" சீதா கண்களை ஒரு நிமிடம் அப்படியே மூடி மோன நிலையில் பெருமூச்சு விட்டாள். என் இதயம் ஏன் படபடவென்றது?

சீதா தன் நிலைக்கு வந்து மேலே தொடர்ந்தாள்: "ரவி சீதாவைப் புன்சிரிப்புடன் பார்த்துவிட்டு, 'எனக்கு வரக் கூடியவள் அப்படிப் பணம் காசோடு வருகிற மாதிரி தெரியவில்லையே!' என்றான்.

"ஏன் வரமாட்டாள்? நீங்கள் சரி என்றால் இதோ வரப் பண்ணுகிறேன். இன்றே இப்போதே எம். எஸ். ஸீட்டுக்கு அப்ளை பண்ணலாம்!" என்றாள் கிரிஜா வீராவேசமாக. சீதாவுக்குப் புரிந்து விட்டது. ரவி பாவம்! வேடிக்கைக்காக, "சரி! கொண்டு வா பார்ப்போம்!" என்றான்.

கிரிஜா யாதொரு விதமான பதற்றமுமில்லாமல், தன் கையை ரவியின் கைக்குள் வைத்தாள். "ரவி! பணமும் புகழும் உங்களைத் தேடி வந்து விட்டன!" என்று சொல்லித் திமிருடன் சீதாவைப் பார்த்தாள்.

ரவி துள்ளினான். சீதாவின் முகம் பிரேதமாக வெளிறியது.

பிறகு என்னத்தை விவரிப்பது? ஒரே பிடியாக ரவியை வளைத்துக் கொண்டாள் கிரிஜா. அந்தப் பிடியினின்றும் திமிர முடியாமல் தவித்தான் ரவி. சீதாவே ரவிக்கும் கிரிஜாவுக்கும் புத்திமதிகள் கூறிச் சமாதானப் படுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்.

சீதா சற்று மூச்சு விட்டாள். மனம் அலை பாய்கிறது என்பதை அவள் கலங்கிய கண்களிலிருந்து தெரிந்து கொண்டேன்.

"எப்படியடி சீதா நீ விட்டுக் கொடுத்தாய்?" என்றேன்.



## இரவில் தேடும் பணம்!

பிரகுக நாவலாசிரியர் பால்ஸாக் வசித்த அறைக்குள் ஓரிரவு திருடன் நுழைந்து, மேஜையைத் துழாவிக் கொண்டிருந்தான்.

தூக்கம் வராமல் புரண்டு படுத்துக் கொண்டிருந்த பால்ஸாக், இதைக் கண்டு இடி இடி என்று சிரித்தார்.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று மிரட்டினான் திருடன்.

அதற்கு பால்ஸாக், "நான் பகலில் காண முடியாத பணத்தை நீ இரவில் கண்டுவிடலாம் என்று எண்ணி இவ்வளவு சிரமப்படுகிறாயே! அதை எண்ணித்தான் சிரித்தேன்" என்றார்.

-- 'கதம்பம்' என்ற நூலிலிருந்து
நகல்: கோ. சந்திரசேகரராவ்

---

"வேறு வழி வேதா? என் குடும்பம் இருக்கிற இருப்புக்கு இப்போதைக்கு நான் கல்யாணம் செய்து கொள்ள முடியாது. ரவியின் துடிப்பையும் அவன் படிப்பின் ஆர்வத்தையும் கிரிஜாவின் பணம்தான் சரிக்கட்ட முடியும். அவர்கள் கல்யாண அழைப்பிதழை நானே எல்லோருக்கும் கொண்டு வந்து கொடுத்தேன். 'அழைப்பிதழில் உன் பெயரை அல்லவா எதிர்பார்த்தோம்' என்று வெளிப்படையாகவே என்னைச் சில சிநேகிதர்கள் கேட்டார்கள்.

"நான் அன்றைக்கே என் மண வாழ்க்கைக்கு முழுக்குப் போட்டு விட்டேன். என் மனசில் சலனம் ஏதும் கிடையாது. கிரிஜாவும் ரவியும் என் விருந்தினர்களாக வந்திருக்கிறார்கள். அவர்களை என் வீட்டில் உபசரிக்க முடியாது. அப்பா சந்தேகக் கண்ணோடு பார்ப்பார். அம்மா ஏதாவது தத்துப் பித்தென்று சொல்வாள். அதற்காகவே இந்த பிக்னிக்குக்கு ஏற்பாட்டைச் செய்தேன்!" என்று சொல்லி முடித்தாள்.

"நான் உள்ளே வரலாமா?" என்று சொல்லிக்கொண்டே ரவி உள்ளே நுழைந்தான். நானும் சீதாவும் திடுக்கிட்டோம். ஒருவேளை எங்கள் பேச்சை ரவி கேட்டிருக்கலாமோ என்று நான் பயந்தேன்.

நான் வாரிச் சுருட்டி எழுந்தேன்.

"நீங்கள் உட்காருங்கள், அம்மா!" என்று சொல்லிவிட்டுச் சீதா உட்கார்ந்திருந்த கட்டிலிலேயே உட்கார்ந்தார் ரவி.

"ஆஹா, என்ன ஜோடிப் பொருத்தம். சீதா இப்படி விட்டுக் கொடுத்தாளே பாவி!" என் மனம் ஏங்கி ஏங்கி அழுதது.

"அப்புறம் என்ன நியூஸ் சீதா! எப்படி இருக்கிறாய்? அப்பாவின் கெடுபிடி எல்லாம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்.

சீதா மெல்லச் சிரித்தாள். "என்ன ரவி, புதிதாக நீங்கள் கேட்டு நான் சொல்ல

ளுமா? என் ராமாயணம்தான் தெரியுமே! இப்போ எனக்கு நல்ல பிராக்டீஸ். அதிலே தான் அப்பா கண்ணாக இருக்கிறார். எனக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு அப்பாவுக்கு அப்படியே கொடுத்துவிடுகிறேன். அவராவது சந்தோஷமாக இருக்கட்டுமே என்றுதான் நான் நினைக்கிறேன். ஆனால் அவர் என் சந்தோஷத்தைப் பற்றி நினைக்காவிட்டாலும் என்னை நடத்தும் அந்தவிதம் - அப்பப்பா!'' மேலே அவளால் பேச முடியவில்லை.

ரவி ஒரு நிமிஷம் பேசாமலிருந்தார். ''சீதா! அன்றைக்கு நான் பண்ணியது பெரிய தப்பு. அதற்கு நீயும் கிரிஜாவும்தான் காரணம். பலன்! இன்று நாம் மூன்று பேருமே நிம்மதியில்லாமல் இருக்கிறோம்!'' என்றார் உருக்கத்துடன்.

நாலு வரி சொன்னாலும் அது அவர் இதயத்திலிருந்து வந்த வார்த்தைகள் என்பதைப் புரிந்து கொண்டேன்.

''ஸ்... போதும்! சமர்த்து வழிகிறது! கிரிஜா கேட்டால் என்னையும் உங்களையும் திட்டித் தீர்த்துவிடுவாள்! வாருங்கள், அங்கே போகலாம்!'' என்று கிரிஜா இருந்த அறைக்கு விடுவிடுவென்று நடந்தாள் சீதா. ரவி அவளையே பார்த்துக் கொண்டு சிலையாக நின்றார். நான் இருவரையும் பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தேன். என் கண்கள் கலங்கின.

இரவு அவரவர்கள் வீட்டுக்கு வந்தோம். ரவியும் கிரிஜாவும் என்னை என் வீட்டில் சேர்த்துவிட்டுச் சீதாவையும் இறக்கிவிட்டு நேராக ஊர் போய்ச் சேர்ந்தார்கள்.

என் கணவர் என்னைப் பெருமையுடன் பார்த்தார். தம் மனைவிகூட மூன்று டாக்டர்களுடன் பிக்னிக் போகுமளவுக்கு நாகரிகமடைந்துவிட்டாளே என்ற பெருமை அவர் பார்வையில் தெரிந்தது.

''என்ன! எப்படி இருந்தது. உங்கள் பிரயாணம்? உன் சிநேகிதி என்ன தடபுடல் செய்து விட்டாளா? என்ன நடந்தது. எல்லாம் சொல்லு!'' என்றார் ஆர்வத்துடன்.

''இன்று சீதாவை நன்றாகத் தெரிந்து கொண்டேன். அவளைப்போல் கர்மயோகினியை எங்கும் பார்க்க முடியாது!'' என்றேன். என் குரல் என்னையறியாமல் தழுதழுத்தது.

''என்னவெல்லாமோ பெரிய பெரிய வார்த்தைகளைச் சொல்கிறாயே!'' என்று என் கணவர் என்னை அதிசயத்துடன் பார்த்தார். நான் பதில் பேசாமல் உள்ளே வேகமாகச் சென்றேன்.

# வட்டமேஜை

**1969**ம் வருடத்து சுதேசமித்திரன் ஞாயிறு மலரில் வெளிவந்த 'விளக்குகள் எரியட்டும்' என்னும் நந்தினியின் கதை 18-6-72 கல்கி இதழில் மறுபடியும் அச்சேறியுள்ளதே.

கடலூர் — 1
20—6—72 க. மணியரசன்

மேற்படி கடிதத்துக்கு 'நந்தினி' அவர்களிடம் விளக்கம் கோரினோம். இதோ அவரது திருப்தி தராத விளக்கம்:

'விளக்குகள் எரியட்டும்' கதை சுதேசமித்திரன் ஞாயிறு மலரில் 69ம் ஆண்டு டிசம்பர் மாதம் பிரசுரமானது என்பது உண்மையே. என் புதிய உதவியாளர் தம் ஆர்வமிகுதியால் என் கதை நோட்டிலிருந்த அந்தக் கதையை நகல் எடுத்துத் தங்களுக்கு அனுப்பியதோடு என்னிடமும் சொல்லாமல் இருந்திருக்கிறார். தவறுதலுக்கு வருந்துகிறேன்.

சென்னை — 5
26—6—72 நந்தினி


ஏர்க்காட்டின் சிறப்பைப் பற்றி ஜூன் 4ந் தேதி கல்கியில் படித்தேன். என் அனுபவத்தையும் கேளுங்கள்! மே முதல் வாரத்தில் சேலம் வந்து அங்கிருந்து ஏர்க்காடு செல்வதற்குக் காலை ஏழு மணிக்கு பஸ் ஸ்டாப்புக்கு வந்தோம். நாங்கள் வந்தபின் வந்த நாலு பஸ்களில் இடம் கிடைக்கவில்லை. பிளாக் மார்க்கெட்டில் டிக்கெட்டுகளை வாங்கி விடுகிறார்கள். ஆகையால் எவ்வளவு கூட்டம் இருந்தாலும் கண்டக்டர் பத்துப் பதினைந்து பேருக்குத்தான் டிக்கட் போடுகிறார். அதற்குள் பஸ் நிரம்பி விடுகிறது. காரணம் பிளாக் மார்க்கெட்டில் டிக்கெட் விற்பதுதான். கோடை கால சீஸனிலாவது அதிக பஸ் வசதி செய்தால் போவதற்குச் சௌகரியமாக இருக்கும். அன்று மாலை மூன்று மணி வரை நின்று பார்த்துவிட்டு வருத்தத்தோடு சேலத்துக்கே திரும்பினோம்.

திருச்சி—2
7—6—72 சி. லலிதா

சிம்லாவில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் கையொப்பமான உடன்படிக்கை நமக்கு மாபெரும் தோல்வியாகும். ஏனெனில் (1) நாம் இதுநாள் வரை பாக் விமானங்கள் இந்தியா மீது பறக்க ஏன் தடை செய்தோமோ, அக் கொளுத்தப்பட்ட விமானத்துக்கான நஷ்டஈட்டைப் பெறாமலே விமானப் போக்குவரத்தைத் தொடங்க ஒப்புக்கொண்டு விட்டோம். (2) 1965 சண்டையின்போது அவர்கள் நம் நாட்டுக்கு வந்த கப்பலில் இருந்து இறக்கிக் கொண்ட சரக்குகளை இது நாள் வரை திருப்பித் தரவில்லை. ஆனால் நாம் அப்போதே அவர்களுடைய சரக்குகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டோம். இதைப்பற்றி வாயைத் திறக்காமலேயே கப்பல் போக்குவரத்துக்கும் சம்மதம் அளித்து விட்டோம். ஆயினும் போர் மறுப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது பெரிய தீரச் செயலாக டில்லி பேச்சாளர்கள் மார் தட்டிக் கொள்கிறார்கள்!

மயிலை
5—7—72 ச. ராஜசேகரன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31.
Managing Editor: T. Sadasivam


ANNOUNCING!
The sale of
BLENDED AND FANCY FABRICS
made by mixing cotton and
GRASIM STAPLE FIBRE
from to-day at
AKASH-DEEP, SANDHURST BRIDGE, CHOWPATTY
• Attractive Fancy Dress material for ladies
• Immaculate Bush Shirtings for gents
• Decorative Tapestry and Curtain materials
• Priced cheaper than cotton fabrics
GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)